T. 2410

T-2410
GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY
28 DEC 1957
MADRAS

பிற்காலச் சோழரும் இலக்கிய வளர்ச்சியும்

ஸ்ரீமதி. டி.என். தானு அம்மாள் எழுதியது

வேல் புத்தக நிலையம்
சென்னை-14

பிற்காலச் சோழரும் இலக்கிய வளர்ச்சியும்

வித்துவான்
திருமதி T. N. தாணு அம்மாள்
(Mrs. P. T. Murthi)
தமிழ் விரிவுரையாளர்
எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை

வேல் புத்தக நிலையம்
இராயப்பேட்டை, சென்னை-14

உரிமை: ஆசிரியர்க்கு

முதற் பதிப்பு: 1934
இரண்டாம் பதிப்பு: 1956

விலை: ரூ. 2-0-0

அல்லயன்ஸ் பிரஸ், மயிலாப்பூர், சென்னை-4.

உரிமை உரை

*

தமிழ்

இலக்கியத்தை

ஆராய்வதிலும் அனுபவிப்பதிலும்

எனக்கு

உறுதுணையாய் நின்றுதவி

வழிகாட்டியருளிய

தமிழ்க் களஞ்சியமான

திரு. எஸ். வையாபுரிப் பிள்ளை

அவர்கள் பாதங்களில்

இந் நூலை

பக்தியுடனும் நன்றியுடனும்

சமர்ப்பித்துக்கொள்ளுகிறேன்

அணிந்துரை

திரு. தாணு அம்மையார் அவர்கள் சென்னைப் பல்கலைக் கழக ஆராய்ச்சி மாணவியாக இருந்தபோது எழுதிய கட்டுரையை வெளியிடுகின்றார்கள். ஏறக்குறைய இருபதாண்டுகளுக்குமுன் எழுதிய சொல்நடையும் பொருள் முடிபும் இங்குக் காண்கிறேன். இன்று இவை பழகிப்போய்விட்டன. ஆதலினாலேயே எழுந்த காலத்தைச் சுட்டினேன். தமிழிலக்கிய வரலாறு என்னைப் பொறுத்தவரையில் ஒரு முடிவிற்கு வந்தபாடில்லை. என்றாலும் பருப்பொருட்டாக ஒரு போக்கு விளங்கியுள்ளது. அம்மையார் நூலை அந்தக் கண்கொண்டு பார்க்கும்போது தமிழிலக்கிய வரலாற்றுக்கு முன்னுரையாக அமைந்துள்ளது என்னலாம். பிற்காலச் சோழநாட் டிலக்கியத்தினையே முழுவதும் எழுதியிருக்கலாம். தொடர்பு விளங்க சங்க காலத்திலிருந்து தொடங்கி வரலாற்றினைப் பின்னைப் புலப்படுத்தியிருக்கின்றார் அம்மையார்.

முன்னோர் செல்கிறது. பின்னோர்கள் பல வரும். செந்தமிழ் வளம் கொழிக்கும். பின் வருவோர்க்கு அறுவடை சிறக்கவேண்டும் என்ற நோக்கமன்றி வேறென்ன இன்பம் இத்தகைய ஆராய்ச்சிகளில் எழுதல்கூடும். அந்த இன்பமே அம்மையார் அவர்களை மேலும் மேலும் ஊக்குவதாக.

சென்னை
27-2-56

தெ. பொ. மீனாட்சிசுந்தரன்.

முன்னுரை

தமிழ் மொழியில் காலந்தோறும் தோன்றிய இலக்கியங்கள் பலப்பல. அவைகள் நம்மை ஒரு தனி உலகத்திற்கு இழுத்துச் செல்லுகின்றன. அவை அளிக்கும் இன்பத்திற்கு நிகர் வேறு உண்டோ? இதனாலன்றோ ஒரு தமிழ்ப் புலவர்

'இருந்த தமிழே உன்னால் இருந்தேன்;
இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்'

என்று கூறுவாராயினர். இலக்கியப் பூங்காவில் புகுந்து விட்டால் பொழுது போவதே தெரியாது; பெரியதோர் இன்பம் அடையலாம். அத்தகைய வாழ்க்கைக்கு ஆராய்ச்சி பெரிய துணை செய்வதாகும். ஆராய்ச்சிதான் மொழியின் இயல்பை உள்ளபடி உணர உதவுவது.

1933-ல் சென்னை பல்கலைக் கழகத்தார் முதல் முறையாக இலக்கியத் துறை ஆராய்ச்சியில் பணி யாற்றும் மாணவியாக எனக்கு வாய்ப்பு அளித்தார்கள். ஆராய்ச்சிக்காக எடுத்துக்கொண்ட பொருள் "பிற்காலச் சோழர் காலத்துத் தமிழ் இலக்கியம்" என்பது. பல நூல்களின் உதவியாலும் பேரறிஞர்களின் துணையாலும் ஒரு வருட காலத்திற்குள் எடுத்துக்கொண்ட பொருளைச் சுருக்கமாக எழுதி முடித்தேன். அதனைப் பல்கலைக் கழகத்தார் நூல் வடிவில் பதிப்பித்தார்கள்.

இப் பதிப்பு வெளிவந்து இப்பொழுது இருபத்திரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இக்கால எல்லையில் மேற்குறித்த பொருள்பற்றிச், சில நூல்கள் அரிய

ஆராய்ச்சியுடன் வெளிவந்துள்ளன. அவற்றைப் படித்த எனக்கு அச் சிறு நூலைச் சிறிது விரிவாக எழுதவேண்டும் என்ற அவா உண்டாயிற்று. ஆகவே அந்நூலை மறுபடியும் பல திருத்தங்கள் செய்தும் சிறிது விரிவாகவும் எழுதலானேன். பொதுவாக இலக்கிய வளர்ச்சியையும் சிறப்பாகச் சோழர்காலத்திற் தோன்றியஇலக்கியங்களின் சிறப்புக்களையும் மாணவர் கற்றுத் தமிழ் மொழியின் பெருமையை அறியவேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் இதனை வெளியிடலானேன்.

இந் நூலை விரிவுடன் எழுத அனுமதி தந்த பல்கலைக் கழகத்தாருக்கு எனது நன்றி.

தம்முடைய பல்வேறு அலுவல்கள் இடையே எனது முயற்சியைப் பாராட்டி அணிந்துரை எழுதி அளித்த பல்கலை வேந்தர், பன்மொழிப் புலவர், பெரும் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்கட்கு நான் பெரிதும் நன்றி கூறக் கடப்பாடுடையேன்.

இந்நூல் விரைவில் வெளிவர அச்சுப்படிகளைத் திருத்தி உதவிய வித்வான் திரு. மு. ஷண்முகம் பிள்ளை அவர்களுக்கும், நூலை வெளியிட்ட வேல் புத்தக நிலையத்தாருக்கும் நல்ல முறையில் அச்சியற்றி உதவிய அல்லயன்ஸ் அச்சுக்கூடத்தாருக்கும் என் நன்றி உரியதாகுக.

சென்னை
25-2-56

T. N. தாணு அம்மாள்

பொருளடக்கம்

எண்		பக்கம்
1	தோற்றுவாய்	... 1
2	சங்க கால இலக்கியங்கள்	... 7
3	சங்க கால இலக்கியங்களின் சிறப்பியல்கள்	... 34
4	இடைக்கால இலக்கியங்கள்	... 47
5	பிற்காலச் சோழர் சரித்திரச் சுருக்கம்	... 61
6	பிற்காலச் சோழராட்சியில் இலக்கியங்கள்	... 100
7	இலக்கியங்களின் சிறப்பியல்கள்	... 116
8	முடிவுரை	... 125

பிற்காலச் சோழரும் இலக்கிய வளர்ச்சியும்

*

1. தோற்றுவாய்

தமிழிலே உள்ள இலக்கியங்கள் மிகவும் பரந்து பட்ட இயல்பையுடையனவாகும். இப்போது அகப்படு பவைகளாகிய இலக்கியங்களை மட்டும் எடுத்துக்கொள்ளு வோமானல், அவற்றில் மிகப் பழமையானவை கி. பி. முதல் நூற்ருண்டில் இயற்றப்பட்டனவென்பதற்குத் தக்க சான்றுகள் உள்ளன. ஆகவே கி. பி. முதல் நூற்ருண்டு தொடங்கி, இதுவரை தமிழ் இலக்கியம் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறதென்பது உறுதி.

ஒவ்வொரு காலத்தின் தன்மைக்கேற்ப இலக்கியங் களும் பல திறத்தனவாயமைந்தன. உதாரணமாக, தமிழ் நாட்டிலோ சைவசமயாசாரியர்கள் தோன்றிச் சமய உணர்ச்சியைப் பரவச் செய்தபோது சைவ தோத்திரங் களும், நாயன்மார் அருளிச் செயல்களும் மிகுதியாகத் தோன்றலாயின. இங்ஙனமே சைன சமய இலக்கியமும், பௌத்த சமய நூல்களும் தோன்றிப் பெருகியதும் வெளிப்படை.

அன்றியும் இடத்தின் வேறு பாட்டாலும் தமிழ் நூல்கள் பலவகையாயின. உதாரணமாகப் பாண்டிய நாட்டிலே இயற்றப் பெற்ற தமிழ் நூல்கள் பெரும்பாலும் பாண்டிய அரசனைக் குறித்தும் பிற சிற்றரசர்களைக் குறித்தும் வெளிவரலாயின. சோழ நாட்டில் எழுந்தவை அத்தேய அரசர்களது பெருமையைக் குறித்து இயற்றப்பட்டன. அவ்வாறே சேர மன்னர்களைக் குறித்தும் புகழ்ந்து இயற்றப் பெற்றன சேர நாட்டில் தோன்றிய நூல்கள். காலத்தானும் இடத்தானும் மட்டுமின்றி, தன்மையினாலேயும் அந்நூல்கள் பல திறத்தனவாயிருப்பதையுங் காணலாம். முற்காலத்தில் தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் (கூத்து) என முப்பகுதியாகப் பிரித்தனர். அவைகளின் தன்மையைச் சற்று உற்று நோக்குவோம்.

இயல்:- இது தமிழ் மக்கள்பால் பொதுவாக உலக வழக்கினும் செய்யுள் வழக்கினும் கலந்து நிற்கும் உரை நடையும் செய்யுளுமாகும். இவற்றைச் செந்தமிழ் நூல்கள் எனவும், கொடுந் தமிழ் நூல்களெனவும் பகுக்கலாம். இயற்றமிழ்தான் ஏனைய இரண்டிற்கும் காரணமாகையால் யாவரும் இதனை முதற்கண் வைத்துக் கூறுவாராயினர். அன்றியும், இசை, நாடகம் இரண்டிற்கும் உயிரென விளங்குவது இயற்றமிழே. அவை இரண்டும் தனித்தியங்கும் தன்மையுடையனவல்ல. முற்கால சங்க நூல்களும், இடைக்கால இலக்கியங்களும், இக்கால நூல்களும், அவைகள் எல்லாவற்றினும் காணப்படும் உரைகளுமாகிய எல்லாம் இயற்றமிழே.

இசை:- இத்தமிழ் இயற்றமிழுடன் பண்ணொடு கலந்து, தாளத்தோடு கூடி இயங்குவது. இதனுள், கீர்த்தனைகளும் வரிப்பாட்டுக்களும், சிந்து, ஆனந்தக்

களிப்பு, கும்மி முதலியனவும் அடங்கும். இயற்றமிழின்றி இசைத் தமிழ் தனித்து இயங்காது. ஆனால் இயற்றமிழ்ச் செய்யுட்கள் இசை யடுத்து, தாள மறுத்துப் பாடப்படின், அவை இசைத் தமிழின்பாற்படும். முற்காலத்துத் தோன்றிய 'பெருநாரை', 'பெருங்குருகு' முதலியனவும், இடைக்காலத்துத் தோன்றிய தேவாரங்களும், இக்காலத் தெழுந்த பெரியபுராணக் கீர்த்தனைகளும், நந்தன் சரித்திர கீர்த்தனை முதலியவைகளும் இசைத்தமிழே யாகும்.

இவ் விசைத்தமிழே நாடகத் தமிழிற்குச் சிறப்பும், விளக்கமும் தந்து நிற்பதாம். ஆகவே இயற்றமிழும், இசைத்தமிழும் சேர்ந்தே நாடகத் தமிழ் பிறக்கும். வேறு மொழிகளிலும் இல்வாறே நாடகமானது தோன்றியுள்ளதென அம்மொழிகளின் சரித்திர வாயிலாக அறிகிறோம்.

நாடகம்:— இது கல்வியறிவில்லாதவர்களுக்கு நல்லறிவு புகட்ட எழுந்ததோர் கலையாகும். இக்கலை கேட்போருக்கும், காண்போருக்கும் இன்பம் பயக்கும் தன்மையுடையது.

உலகின் இயல்பை உள்ளதை உள்ளவாறு;புனைந்து. காட்டுவதுஇயல், இசைகள், கேள்வி யின்பம் மட்டும் அளிக்கும். ஆனால் நாடகமோ இயல் இசையின்றி இயங்காதெனினுங் கேள்வி யின்பத்தோடு காட்சியின்பத்தையுங் கலந்து மனத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

நாடக அரங்கு செல்வோர் ஆங்கே பலவிதமான, வேடம் தாங்கி நடிக்கும் பாத்திரங்களைக் கண்டு களிப்புறுவர். பாடல்களைக் கேட்டுப் பரவசமடைவர். கதையின் கருத்துக்களை உணர்ந்து திருத்தமடைவர்.

இத்துணை சிறப்பு வாய்ந்தமைபற்றியே ஏனைய இடங்களிலும், மொழிகளிலும், நாடகத்தை மேன்மையாக மதிக்கின்றனர். இந் நாடகம் முதலில் சமயம் பற்றிய

கதைகளை நடத்திக் காட்டவே தோன்றிற்று. பின்னர் பிறகதைகளும் தழுவி நாடக நூல்களியற்றப்பட்டன. மூன்றும் நூற்றுண்டில் நாடகம், வேத்தியல், பொதுவியல் என இரண்டு வகைப்பட்டு வழங்கியிருந்தது.

அதன் பின்னர் நாடகத் தமிழைக் குறைகூறுவார் தலைப்பட்டனர். அதன் நிமித்தம் சங்க காலத்திருந்த நாடகத் தமிழ் நூல்கள் ஒழிய நேரிட்டது. அவற்றில் "சிலப்பதிகாரம்" என்னும் நூல் மட்டுந்தான் இப்போது நிலவி வருகிறது. இந்நூல் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பகுதிகளையும் உடையதென்று உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் கூறுகிருர்.

ஆனுல், இயல், இசை, நாடகம் என்னும், இந்தப் பகுப்பு, தமிழ் நூல்கள் அனைத்தின் இயல்பினையும் முற்ற உணர்த்தும் சரியான பாகுபாடென்று கூற இயலாது. தமிழிலே சித்தாந்த சாஸ்திரங்கள் முதலியன உள்ளன. இவற்றை இம்மூவகைத் தமிழில் எதன்பாற் படுத்துவது? இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்ற இரண்டின் கண்ணும் இவை அடங்காவென்பது தெள்ளியது. இயற்றமிழெனக் கூறின் அதற்குப் பொருண்மை சிறிதுமில்லாதாய் முடியும். ஆகவே இப்பாகுபாடு நாம் மேற்கொண்டுள்ள நோக்கத்திற்குப் பெரிதும் பயன்படுவதாகாது.

தமிழ் நூல்களைப் பாகுபாடு செய்தலென்பது நூற்குரிய பொருளின் தன்மையினுற்ருன் என்பது யாவருடம் அறிந்ததே. அவ்வகையால் நோக்குமிடத்துத் தமிழ் நூல்களைக் காவியம், புராணம், இதிகாசம், சாஸ்திரம், கணிதம், சோதிடம், நீதி நூல்கள், பக்திநூல்கள், உரைநூல்கள் நிகண்டு முதலிய பலவகையாகப் பிரித்தல் கூடும். இங்ஙனம் பலதிறப்பட்டுப் பரந்துகிடக்கின்ற தமிழ் நூல்களை முறையாக ஆராய்ச்சி செய்து

தமிழ் இலக்கிய வளர்ச்சியை முற்றவுணர்த்தும் நூல்கள் தமிழிலில்லை யென்றே கூறலாம். எனினும் இவ்வகை இலக்கிய சரித்திர நூல்கள் ஒரு சில வெளிவந்துள்ளன. அவை பின் வருமாறு:

1. தமிழ் நாவலர் சரிதை.
2. தமிழ் புளுடார்க் (Tamil Plutarch.)
3. புலவர் புராணம்.
4. பாவலர் சரித்திரதீபகம்.
5. தமிழ் இலக்கிய சரிதம் (History of Tamil Literature): பூரணலிங்கம் பிள்ளை.
6. அ. குமாரசுவாமிப்பிள்ளை எழுதிய தமிழ்ப் புலவர்வரலாறு.
7. செல்வக் கேசவராய முதலியார் எழுதிய தமிழ் என்னும் வியாசம்.
8. சூரியநாராயண சாஸ்திரியார் எழுதிய தமிழ் மொழியின் வரலாறு, தமிழ்ப் புலவர் சரித்திரம்.
9. ஸ்ரீநிவாச ஐயங்கார் எழுதிய தமிழ் ஆராய்ச்சி உரைகள் (Tamil Studies.)
10. K. S. ஸ்ரீநிவாச பிள்ளை எழுதிய தமிழ் வரலாறு.
11. G. S. துரைசாமிப் பிள்ளை எழுதிய சங்ககால இலக்கியங்கள்.
12. இராமச்சந்திர தீக்ஷிதர் எழுதிய (Studies in Tamil Literature and History.)
13. திராவிடப் பிரகாசிகை (சபாபதி நாவலர்)
14. தமிழ் இலக்கிய வரலாறு (K. சுப்பிரமணிய பிள்ளை)

மேற்குறித்தவையே யன்றி வேறு சில நூல்களும் வெளிவந்துள்ளன. ஆனால் இவற்றில் ஸ்ரீநிவாச பிள்ளை எழுதிய தமிழ் வரலாறும், ஸ்ரீநிவாச ஐயங்கார் எழுதிய தமிழ் ஆராய்ச்சி உரை நூலும் ஒரு வகையாகத் தமிழ்

இலக்கிய வளர்ச்சியை உணர்த்துகின்றன எனக் கூறலாம். பிறநூல்களெல்லாம் அந்நோக்கத்தை மேற்கொண்டனவென்று கூற முடியவில்லை. தமிழ் இலக்கிய வளர்ச்சி முழுவதும் நோக்கி, அதற்குத் தகுதியான இலக்கிய சரித்திரம் எழுதுதல் அத்தனை எளிதான செயலன்று. பல நூல்கள் இன்னும் ஏட்டுச்சுவடி அளவிலே இருக்கின்றனவன்றி அச்சுவாயிலாகத் தோன்றவில்லை. தமிழ் நாட்டில் வெளிவந்துள்ள நூல்களைப்பற்றியும் அவற்றின் காலம் முதலியன பற்றியும் இன்னும் ஆராய்ச்சிகள் நிகழ்த்த வேண்டுவதுண்டு. தமிழ் நாட்டுச் சரிதமும் இன்னும் முற்றும் தெளிவடைந்தபாடில்லை. ஒவ்வொரு காலத்தும் எழுந்துள்ள நூல்கள், அவ்வக் காலத்துச் சரித்திர நிகழ்ச்சிகளோடு பெரிதும் தொடர்புடையன வென்பது அறிஞர்கள் கொள்கை இது பெரியதோருண்மையாகும். தமிழ் நாட்டுச் சரித்திரங்களை நாம் நன்கு உணர்ந்தாலன்றித் தமிழ் இலக்கியங்களையும் நாம் நன்கு உணர்தல் கூடாதாம். அன்றியும் வெகுகாலமாக வளர்ந்து பெருகியிருக்கும் தமிழ் இலக்கியத் தொகுதியைப் பல பகுதிகளாகப் பிரித்துக்கொண்டு அவற்றை ஆராய்ந்து வளர்ச்சியின் இயல்பை அறிந்த பின்னரே தமிழ் இலக்கிய சரிதம் ஒன்று எழுதுதல் இயலுவதாகும். இத்தகைய முயற்சி இதுவரை தோன்றியதாகத் தெரியவில்லை. இங்ஙனமாகத் தமிழ் இலக்கிய சரிதம் எழுதுதலில் பல இடையூறுகளும் உள்ளன.

2. சங்ககால இலக்கியங்கள்

தமிழ் மொழி இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சங்கங்களால் ஆராய்ந்து வளர்க்கப்பெற்றதாகும். அதனாலேயே தமிழைக் குறிக்குமிடத்து 'சங்கத் தமிழ்' என்று கூறும் வழக்கம் ஏற்படலாயிற்று. அக் காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் யாவும் சங்க இலக்கியங்களே. அதாவது சங்க இலக்கியங்களென்று பொதுவாகக் கூறப் படுவன எட்டுத் தொகையாகிய நற்றிணை, குறுந்தொகை ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல். கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற நூல்கள். பத்துப் பாட் டாகிய திருமுருகாற்றுப் படை முதல் மலைபடு கடாம் இறுதியாகவுள்ள நூல்களும் சங்க நூல்களே. சங்கம் மரு விய பதினெண் கீழ்க் கணக்கு நூல்களாகிய திருக்குறள் முதலாகிய பதினெட்டு நூல்களும் ஐம்பெருங் காப்பியங் களில் மணிமேகலை, சிலப்பதிகாரம் என்ற இரு நூல் களும் சங்க காலத்து நூல்களென ஒரு சாரார் கூறுவர்.

பிறிதொரு சாரார் மிகப் பிற்பட்ட காலத்தன என்பர். தொல்காப்பியம் என்ற இலக்கண நூலும் சங்க காலத்துக்குரியதாகும். இந் நூல்களிற் பலவும் பண்டைய அரசர்களால் தமிழ்ப் புலமை வாய்ந்த பெரும் புலவர்களைக்கொண்டு ஒருங்கே சேர்த்துத் தொகுக்கப்பட்டவையாகும். கீழ்க்கணக்கு நூல்களெல்லாம் வெண்பாவினால் இயற்றப்பட்டன. அவற்றுள் ஒன்றாகிய முதுமொழிக் காஞ்சி வெண்பாவின் இனத்துடன் அடங்கும் ஒரு பாவாலியாற்றப்பட்டது. வெகு காலமாகக் கீழ்க் கணக்கு நூல்கள் இன்ன வென்பதுபற்றிக் கருத்து வேறுபாடு இருந்தது இப்பொழுது ஒரு முடிவு ஏற்பட்டுவிட்டதெனக் கூறலாம். 'இன்னிலை' இவற்றுள் ஒன்றெனச் சிலர் கூறினாரெனினும் இதற்கு மாறாக, 'கைந்நிலை' என்ற நூலினையே கொள்ளுதல் வேண்டும். இனி இந் நூல்-தொகுதிகளைப்பற்றிச் சிறிது நோக்குவோம்.

எட்டுத் தொகை

முதற்கண் சங்கத் தொகை நூலாகிய எட்டுத் தொகையை எடுத்துக்கொள்வோம். இதில் முதலாவது விளங்குவது நற்றிணை நூற்றெழுபத்தைந்து சங்கப் புலவர்களால் பாடப்பட்ட நானூறு செய்யுட்களையுடையது இந்நூல். இதனைப் பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதி தொகுப்பித்தான். இதிற் காணும் அகவற் பாக்கள் ஒன்பதடிச் சிறுமையும் பன்னிரண்டடிப்பெருமையும் உள்ளன. இது ஒரு சிறந்த அகத்திணை இலக்கியம்; சொற்சுவை, பொருட்சுவைகளிற் சிறந்து விளங்குகிறது. பொருள்களின் இயற்கை யழகும், தமிழ் மொழியின் இனிமையும், உவமைகளின் நயமும் படிப்போர் உள்ளத்தைக் குளிரச் செய்கின்றன. பண்டைப் புலவர்களின்

நுண்ணறிவும், கற்பனை ஆற்றலும். புலமைத் திறனும், நற்றிணைப் பாடல்களால் நாம் நன்கு உணருகிறோம்.

இரண்டாவது தொகை நூல் குறுந்தொகை. இது இருநூற்றைந்து புலவர்கள் இயற்றிய நானூறு பாடல்களைக் கொண்டது. இதற்குப் பேராசிரியர் உரை எழுதியுள்ளார் எனவும் அதில் அவர் உரை இயற்றாது விட்ட இருபதுபாடல்களுக்கு நச்சினார்க்கினியர் உரை எழுதினார் எனவும் சீவக சிந்தாமணிச் சிறப்புப் பாயிரத்தால் அறிகிறோம். இதிலுள்ள பாடல்கள் நாலடிச் சிறுமையும் எட்டடிப் பெருமையும் உள்ளன. அடியளவாற் குறுகிய தன்றிப் பொருளளவாற் பெரியதென்றே கூறலாம். இதன்கண் நற்றிணைபோல் அகத்திணைகளைத் தெளிவுபடுத்தும் குறிப்புக்கள் வியக்கத்தக்க முறையில் அமைந்துள்ளன. கூறப்படும் பொருள்கள் வரையறையும் தெளிவு முடையனவாய் ஊன்றிப் படிப்பார்க்குப் பெரிதும் இன்பம் பயக்கின்றன.

இந்நூலுள் ஐந்து நிலங்களின் இயல்புகளும், நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே நல்லிசைப் புலவர்களால் புலப்படுத்தப்பட்டிருக்கின்றன. குறிஞ்சிச் செய்திகளைப் பாடுவதில் கபிலர் மிக்க திறமை வாய்ந்தவர்.

குறுந்தொகையிலுள்ள குறிஞ்சிப் பாடல்களில் அந்நிலத்திற்குப் பெயரையளித்த குறிஞ்சி மலரைக் காண்கிறோம். குறிஞ்சி நிலத்தில் வாழ்வோர்களில் ஆண்கள் கானவன், குறவன், புனவன் என்றும் பெண்கள் கொடிச்சியர் என்றும் வழங்கப்படுகின்றனர். கிழங்கு, தேன், கள் முதலியன அவர்களுக்கு உணவுப் பொருள்களாம். மூங்கில் அரிசி, தினையரிசி முதலிய தானியங்களையும் சமைத்துண்பர்.

குறவர் மரங்களை வெட்டி அவற்றை எரித்து அந்நிலத்தினைப் பண்படுத்தி, தினை முதலிய தானியங்களை

விதைப்பார்கள். அருவி நீரால் அவைகளை விளைவிப்பார்கள். உடைக்காகப் பருத்தியையும், உணவுக்காகச் சுவை மிகுந்த பருப்பு வகைகளையும் விளைவித்து, உண்ண உடுக்கக் குறைவின்றி வாழும் வாழ்க்கையை மேற்கொண்டுள்ளார்கள்.

இதனால் அவர் வாழ்வில் நிறைவு காண்கிறது. தாம் விளைவிக்கும் பயிரையும், மரத்தையும் ஆடவர் காப்பர். தினையை உண்ணவரும் யானையைக் கவண் கொண்டு எறிந்து ஓட்டுவர். இராக் காலங்களில் கொள்ளிக் கட்டையை அருகில் வைத்துக்கொண்டிருப்பர். அது கண்டு விலங்கினங்கள் பயந்து ஓடும். மகளிரும் தினைப் புனத்தைக் காத்துக் கிளியையும் குருவியையும் ஓட்டுவர்.

இவர்களுக்குத் தெய்வம் முருகன். முருகப்பெருமானுக்கு வெறியாட்டெடுப்பர் ஆடுகளைப் பலி செய்து தினை அரிசியைவைத்து அலரிமாலையைச்சூட்டி வணங்குவர். தம்முடைய புனத்தில் விளைந்த முதற்கதிரைக் கடவுளுக்கு இட்டபின்னரே தாம் உண்பர். இதனால் இவர்களுடைய கடவுளுணர்ச்சி வெளியாகிறது.

இனிமுல்லை நிலவளத்தைக் காண்போம். முல்லை என்பது காடும் காடு சார்ந்த இடங்களும் ஆம். இந்நிலம் கார் காலத்தில் வளத்துடன் திகழும். இங்கே செம்மண் பரந்திருத்தலின் இந்நிலத்தைச் செம்புலமென்பர். இங்கே வாழ்பவர் இடையர். இவர்கள் ஆடுகளையும், பசுக்களையும் மேய்ப்பர்; புனத்தை உழுது வரகு முதலியன விதைப்பர்; பாற் சோற்றை உணவாக அருந்துவர். இவர்கள் மாயோனைத் தெய்வமாகக்கொண்டு வழிபடுவர். இந்நிலத்துக்குரிய மலர் முல்லையாகும்.

வயலும், வயலைச் சார்ந்த இடங்களும் மருதமாகும். இந்நிலத்து ஊர்களில் நாகரிகம் மிக்க மக்கள் வாழ்வர். இந்நிலத்துக்குரிய தலைவனை ஊரன், மகிழ்நன்

என அழைப்பர். உழவர் தங்கள் உழு தொழிலைச் சிறப்புடன் செய்துவருவர்.

கடலும் கடல் சார்ந்த இடங்களையும் நெய்தல் என வழங்கினர். இந் நிலத்து மக்கள் கடற்கரையிலுள்ள மணல் மேட்டில் குடில் கட்டி வாழ்வர். இவர்கள் பரதவர் எனப்படுவர். பரதவர் படகிற் சென்று மீன் வேட்டையாடுவது வழக்கம். அப்படகிற்குத் திமில் என்பது பெயர். அவர் திமிங்கலத்தை எறியுளியால் எறிந்து கொல்வர். பரதவர் தாம் கொணர்ந்த மீனைத் தம் வீட்டு முன்றிலில் மணலில் உலர்த்துவர். அதனால் அம்மணல் புலால் நாற்றம் வீசும். சிறுமீனை அவர்கள் வலையினுற் பிடிப்பர் நெய்தல் நில மகளிர் உப்பை விற்று அதற்கு மாருக வெண்ணெல்லைப் பெற்று உண்பர்.

கடற்கரைச் சோலை, பல மரங்கள் அடர்ந்து உதிர்ந்த மலரும் மெத்தென்ற மணலும் பொருந்தியிருக்கும். இந் நிலத் தலைவர்கள் கொண்கன், சேர்ப்பன், துறைவன் புலம்பன் என்னும் பெயர்களால் வழங்கப் பெற்றனர்.

குறிஞ்சியும் முல்லையும் வேனிலின் வெம்மையால் தம் இயல்பு திரிதலான் பாலை நிலம் உண்டாகுமென்பர். இந்நிலத்தின்கண் வாழ்வோர் ஆறலைத் துண்ணும் தொழிலினர். பொருள் தேடச் செல்லும் தலைவன் பாலை நிலத்து வழியாகச் செல்வதாகவும் தலைவன் தலைவியோடு இந்நிலத்து வழியே தன்னூர் சென்று மணம் புரிவதாகவும் பல புலவர்கள் பாடியுள்ளனர்.

இவ்வாறு ஐந்திணைகளின் மூலம் பண்டை மக்கள் பண்பினையும் வேறுபல அரிய பொருள்களையும் விளக்குவது இக் குறுந்தொகை. இந்நூலின் வாயிலாகச் சங்க காலத்துப் புலவர் பெருமக்களின் கவி ஆற்றலையும் புலமையையும் அறிந்து இன்புற முடிகிறது.

அடுத்து அமைந்துள்ள நூல் ஐங்குறு நூறு. இந்நூல் ஐந்து புலவர்களியற்றிய ஐந்நூறு சிறிய அகவற்பாக்களையுடைய அகத்திணை இலக்கியம். ஒவ்வொரு திணைபற்றியும் நூறு பாக்கள் உள்ளன. இதைத் தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார்; தொகுப்பித்தார் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறை. சிவபெருமானைக் குறித்த கடவுள் வாழ்த்துச் செய்யுளொன்றை முதலிற் பெற்றும், பின்னர் ஐந்திணைகளுள் ஒவ்வொன்றிற்குமுரிய ஒழுக்கங்களைத் தனித்தனி விளக்கும் நூறு நூறு அகவற்பாக்களைக் கொண்டும், முறையே ஐந்து வகையாகப் பகுக்கப் பெற்றுள்ளது.

ஒவ்வொரு திணையும் பத்துப் பத்துப் பகுதிகளையுடையது. இதிலுள்ள பாக்கள் ஐநூற்றியொன்று. இவை மூன்றடிச் சிற்றெல்லையையும் ஆறடிப் பேரெல்லையையும் உடையவை. நற்றிணை முதலிய வற்றிலுள்ள பாக்களைக் காட்டிலும் அடி வரையறையிற் குறைந்த நூறு நூறு பாக்களால் ஐந்திணை ஒழுக்கங்களைத் தனித் தனியே விளக்குகின்றமையின் இந்நூல் 'ஐங்குறு நூறு' என்று பெயர் பெற்றது.

நான்காவதாக அமைந்த பதிற்றுப்பத்து சேர மன்னர் பதின்மர்களைப் பற்றிய புறத்திணை இலக்கியம். பதின்மரையும் பப்பத்துப் பாடல்களால் புகழுதலின் பதிற்றுப் பத்து எனப் பெயர் பெறுவதாயிற்று. இந்நூலின் முதற் பத்தும் பத்தாம் பத்தும் கிடைத்தில. இரண்டு முதல் ஒன்பதாம் பத்து வரையிலுந்தான் உள்ளன. இதனைப் பாடியோர் குமட்டூர்க் கண்ணனார், பாலைக் கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கை பாடினியார், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் என்னெண்மர்.

இத்தொகை நூலால் முற்காலத்திருந்த, சேரர் பலருடைய வள்ளன்மையும், வீரமும், தமிழ்நாட்டின் அக்

காலத்திய நிலைமையும் இன்னும் பல வரலாறுகளும் நன்கு புலப்படுகின்றன.

•ஐந்தாவதாகக் குறிக்கப் பெறுவது பரிபாடல். வெண்பா முதலிய பலவகைச் செய்யுட்களும் கலந்து வரும் ஒருவகைப் பாவினத்துக்குப் பரிபாடல் என்று பெயர். இப்பாவினால் தொகுத்த நூலாதலால் இப்பெயர் பெற்றது. நச்சினார்க்கினியர், 'பரிபாடலென்பது பரிந்து வருவது; அது கலியுறுப்புப் போலாது நான்கு பாவாலும் வந்து பல அடியும் வருமாறு நிற்கும்' என்று எழுதியிருக்கிறார். இது பல புலவர் பாடிய எழுபது பாடல்களையுடைய இலக்கியம். மதுரை, வையை, திருமருதந்துறை, திருப்பரங்குன்றம். திருமாலிருஞ் சோலைமலை என்பவற்றின் பண்டைக்கால நிலைமைகளையும் தெய்வ வழிபாட்டு முறைகளையும் பிற பழக்க வழக்கங்களையும் தமிழ் நாட்டின் வரலாறுகள் சிலவற்றையும் செவ்வனே தெரிவிக்கும் தொகை நூல். இந்நூலைத் தொகுத்தோரும் தொகுப்பித்தோரும் இன்னாரென்பது புலப்படவில்லை.

இதன்பின்னர் கற்றவர் மெச்சும் கலித்தொகை அமைந்துள்ளது. இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய நூற்றைம்பது கலிப்பாக்களையுடையது. கலிச் செய்யுளெல்லாம் சங்குதிரண்டு எழும் ஓசைபோல் தழைந்து இன்பம் பயக்கும்ஓசை நலமுடையன. பொருள் வளமும் கருத்து மாண்பும் அளவிடற்கரிய சிறப்பினவாய்த் திகழ்ந்தன. அகப்பொருள் இலக்கணத்தின் பகுதியாகியஐந்திணைக்குரிய கருப்பொருள்களின் இயல்புகளும் ஆண்டு வாழும் மக்களின் பெற்றிமைகளும் அழகுடன் தெளிந்து தோன்றுகின்றன. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்னும் ஐந்து பகுதிகளிலும், பாண்டியர் குடியும் பாண்டியற்குரிய பதி, யாறு, மலைகளாகிய கூடல், வையை. பொதியில் என்பனவும், பிறவும் பாராட்

டப்பட்டிருக்கின்றன. சொல்லினிமை, பொருளினிமை யில் மிகச் சிறந்தது. இதனை நல்லந்துவனார் தொகுத்த ரெனக் கூறுவர். இதற்குச் சிறந்ததோர் உரை நச்சினார்க்கினியர் எழுதியுள்ளார்.

ஏழாவது தொகைநூல் அகநானூறு. இதற்கு நெடுந் தொகை என்றும் பெயருண்டு. இதனைத் தொகுத்தார் மதுரை உப்பூரி குடிகிழான் மகனுவான் உருத்திரசன்ம னென்பான், தொகுப்பித்தவன் பாண்டியன் உக்கிரப் பெருவழுதி. இதுகளிற்றியானை நிரை, மணிமிடைபவளம், நித்திலக் கோவை என மூன்று பகுதிகளையுடையது.

எட்டுத் தொகையுள் இறுதியாகக் குறிக்கப்படுவது புறநானூறு. இது கடவுள் வாழ்த்துச் செய்யுள் முதலிய நானூறு அகவற் பாக்களையுடையது. இதனைத் தொகுத் தோரும், தொகுப்பித்தோரும் இன்னாரென்று விளங்க வில்லை. இந் நூலில் உள்ள பாக்களினுடைய அடிகளின் சிறுமை பெருமை வரையறுக்க இயலவில்லை. அகம், புறம் எனக் கூறப்படும் இருவகைப் பொருள்களுள், புறத்தைப்பற்றிய பாடல்களே இதன் கண் உள்ளன. அறத்தையும், பொருளையும் பற்றியது புறமெனப்படும். இந்நூல் புறத்தின் பகுதியாகிய வெட்சி முதலிய திணைகளுக்குரிய துறைகளின் பொருளமைந்த பாடல்களைக் கொண்டுள்ளது.

இத்தொகைநூலில் பண்டைத்தமிழ்நாட்டு முடியுடை மூவேந்தர்கள், கொடை வள்ளல்கள், மதிநல அமைச்சர் கள், சேனைத் தலைவர்கள், வீரர்கள் முதலிய பலரையும் பார்க்கலாம். புலமைவாய்ந்த புலவர் வாழ்க்கையும், வீரத் தாய்மார்களும், கோட்டை கொத்தளங்களும் முற்காலப் போர் முறையும் இன்னும் பலவும் இதன்கண் விளங்கக் காணலாம்.

புறநானூற்றில் பாடப்பட்டவர்கள் ஒரு காலத்தவர் அல்லர்; ஒரு குலத்தாருமல்லர்; ஓரிடத்தாருமல்லர்; பாடியவர்களும் அவ்வாறே. இதன் பெருமையை அறுதியிட்டு இன்ன பாடல் இன்ன தன்மையுடையது என இயம்ப முடியாது. ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்புடையதாய் அமைந்துள்ளது.

புறநானூற்றுப் பாடல்கள் பொருள் நயமும் செறிவுமுடையன; படிப்போர் உள்ளத்தைக் கவரும் வனப்பு வாய்ந்தன. இலக்கிய சுவையைப் பருகுவதற்கு இன்பக் கேணியாயிருக்கிறது. பண்டைத் தமிழர் பண்பாட்டை அறிய ஒரு களஞ்சியமாய்த் திகழ்கிறது. நூலாசிரியர் பலரும் உரையாசிரியர் பலரும் இவற்றின் சொல், நடை பொருள் முதலியவற்றை இடை இடையே தழுவியிருத்தலால் இதன் பெருமை நமக்கு நன்கு விளங்குகிறது. பாவலர்களைக் காவலர்கள் எவ்வாறு மதித்துப் பாராட்டிப் பாதுகாத்து வந்தனர் என்பதும் புலனாகிறது. ஆழ்ந்து நோக்கின் பண்டைத் தமிழர் நாகரிகத்தை விளக்கும் அரியதோர் கருவூலம் இப் புறநானூறு என்பது தெள்ளிதின் விளங்கும்.

பத்துப் பாட்டு

பத்துப் பாட்டில் முதல் நான்கு பாடல்கள் ஆற்றுப் படைகள். அவற்றுள் முதலாவது திருமுருகாற்றுப்படை. சங்கப் புலவருள் சிறந்தவரான நக்கீரரால் இயற்றப் பட்டது இதனைப் புலவராற்றுப்படை என்றும் பகர்வர். இந்நூலில் முருகனது ஆறு படைவீடுகளைக் குறித்துப் பாடப்பட்டிருக்கிறது.

இந் நூலை நக்கீரர் இயற்றுதற்கு ஒரு காரணங் கூறுவர். சிவபெருமான் தருமிக்குப் பொற் கிழி பெற

எழுதிக் கொடுத்த பாடலை, நக்கீரர் பொருட்குற்ற முடைத்தென, அந்தண வடிவத்திற் தோன்றிய ஆலவாய்ப் பெருமானுடன் வாது செய்து உமையாள் கூந்தலைப் பழித்தார். அதனால் கோபங்கொண்ட சிவ பெருமான் 'நீ தேவி கூந்தலைப் பழித்த பாவியாயினை, நினக்கு மருந்திற்றணியாத குட்டநோய் உண்டாகக் கடவது' என்று சபித்தார். அது கண்ட நக்கீரர் நடுக் குற்றஞ்சி அவர் காலில் விழுந்து பணிந்து துதித்து, 'பிழை பொறுத்தருளிச் சாபப்பிணி கெடவருள்வாய்' என்று என்று வேண்டி நின்றார். கோபம் நீங்கி, இறையவர் 'நீ சென்று கைலை காண், கண்டால் உடனே இந்நோய் நின்னைவிட்டு ஒழியும்.' என்று கூறி மறைந்தார்.

நக்கீரர் நோயினைப் போக்கி முக்தியடையச் சங்கப் புலவர்களிடம் விடைபெற்றுக் கைலை காணச் சென்றார். சென்ற நக்கீரர் திருக்கேதாரத்திற்கு அப்பால் உள்ளதொரு காட்டில் ஒரு பொய்கையினைக் கண்டு வியந்து அதில் குளித்துக் கடவுளைச் சிந்தித்தார். அப்போது அருகே நின்ற அரசமரத்தினின்றும் ஓர் இலை பாதி நீரிலும், பாதி நிலத்திலுமாக விழுந்தது. நீரில் விழுந்த பாதி இலை மீனாகவும், நிலத்தில் விழுந்த மற்றொரு பாதி இலை பறவையாகவும் உருக்கொண்டு நீரை நோக்கியும் நிலத்தை நோக்கியும் ஒன்றினையொன்று இழுத்தலைக் கண்டு வியப்புற்றார். அப்பொழுது பூதம் ஒன்று தோன்றி அவரை எடுத்து ஒரு பெருங் குகைக் குள் அடைத்துவிட்டு நீராடச் சென்றது. பூதஞ் சென்ற வுடன் ஓர் ஆரவாரம் அக் குகைக்குள் உண்டாயிற்று. சிறிது நேரத்தில் அவ்வொலி அடங்கிப் பெருங் கூட்டமான மனிதர்கள் காணப்பட்டார்கள். அவர்கள் நக்கீரரைப் பார்த்து "ஐயா, ஆயிரவரை ஒரு சேரக்

கொன்று தின்னக் கருதிய பூதம் அத்தொகை நிரம்பாமையால் இன்றுவரை எங்களைக் காப்பாற்றி வந்தது. உம் வரவால் அத்தொகை நிரம்பிற்று; நீராடி வந்தவுடன் அப் பூதம் நம் எல்லோரையும் கொன்று தின்றுவிடும்" என வருத்தத்துடன் மொழிந்தனர். இம்மொழி கேட்டுக் கலங்கிய நக்கீரர் ஆறுமுகப் பெருமானை நினைந்து 'திருமுறுகாற்றுப்படை' என்னும் அரிய நூலைப் பாடினர். அப்பொழுதே முருகப் பெருமான் காட்சி கொடுத்து, அப்பூதத்தைக் கொன்று அனைவரையும் குகையினின்றும் வெளிப்படுத்திக் காத்தனர். சிறையிருந்தோர் யாவரும் மகிழ்ச்சி கொண்டு தத்தம் இருக்கை எய்தினர். நக்கீரர் முருகனை வணங்கி, தம் நோயின் காரணத்தைக் கூறிக் கையிலை காண இங்கு வந்த நிலையை எடுத்தியம்பி நின்றார். முருகன் அத்தடாகத்தில் அவரை மூழ்கச் செய்தார். நக்கீரரும் அங்கே மூழ்கியவர் திருக்காளத்தியிலுள்ள பொன் முகரி யாற்றில் தோன்றி கையிலை பாதி, காளத்தி பாதியாகப் பாடல்கள் பாடி இறைவனை வணங்கி நோய் நீங்கி உய்ந்தார் இதுவே திருமுருகாற்றுப்படை என்னும் இப்பக்திப் பெரும் பாடல் தோன்றிய வரலாறு.

இந்நூலில் முருகனது ஆறுபடை வீடுகளாகிய திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம் குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்ற இடங்களின் மகிமையைப்பற்றி வெகு நயம்படப் பக்திச் சுவை ததும்ப, கல் மனமும் கரையப் பாடியுள்ளார் நக்கீரர்.

தெய்வத்தைக் குறித்த இப்பாடலை யடுத்து சோழப் பேரரசன் ஒருவனைப்பற்றிப் புகழும் பொருநராற்றுப்படை அமைந்துள்ளது. இப்பாடலுக்குரிய சோழன் கரிகாற் பெருவளத்தான். இவனை முடத்தாமக்

கண்ணியார் பாடியுள்ளனர். பொருநர் பலராவர். அவர் ஏர்க்களம் பாடுவோர், போர்க்களம் பாடுவோர், பரணி பாடுவோர், முதலானவர்கள். இதில் இந்நூல் போர்க்களம் பாடுவதைக் குறிக்கிறது. அதாவது பரிசில் பெற்ருெருவெரு பொருநன் பரிசில் பெற எண்ணிய ஒரு பொருநனை ஆற்றுப்படுத்தியதாகும். இப்பொருநன் 'தடாரி' என்னும் பறையைக் கொட்டுபவன் ஆவான். இதிற் காணப்படும் பாடல் வஞ்சியடிகள் இடையில் வந்த ஆசிரியப் பாவாகும். இருநூற்று நாற்பத்தெட்டு அடிகளை யுடையது இப்பாடல்.

இதனுள் பொருநர்கள் விழாவிற் கலந்து தங்கள் புலமைத் திறனைச் சுட்டிக் காட்டி அவ்விழா முடிந்தபின், வேற்றூரரை நோக்கிச் செல்வரென்றும், கொடுமையை இழைக்கும் ஆறலைக் கள்வர்கள் இப்பொருநர்கள் இசையைக் கேட்டு அத்தீய தொழிலை மறந்து யாவர் மாட்டும் அன்புடையவராகத் திகழ்வரென்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இப்பாடலின் வாயிலாகக் கரிகால்வளவன் எளியாருக் கெளியனென்றும் பரிசிலருக்கு வரையாது வழங்குபவனென்றும் விளங்குகிறது.

இனிவரும் இரண்டு ஆற்றுப்படைகளும் பாணாற்றுப் படைகள். சிற்றரசர் இருவர் இப்பாடல்களுக்கு உரியவராவர். இவற்றுள் முதற்கண் அமைந்தது சிறு பாணாற்றுப் படை. 'சிறப்புடைத்தான் சிறு பாணாற்றுப்படை' எனவும் வழங்குவர். இப்பாடலைப் பாடியவர் ஒய்மா நாட்டு நல்லூர் நத்தத்தனார். இனிய ஓசையையுடைய சிறிய யாழை வாசிப்போனை ஆற்றுப் படுத்தலைப் பொருளாகக் கொண்டது. பாணர் என்றால் பாடுவோர் என்பது பொருள். இவர் இசைப்பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் எனப்படுவர். இந்நூலில் யாழ்ப்பாணரில் சிறு பாணரைப் பற்றிப் பாடப்பட்டிருக்கிறது.

இந்நூலின் வாயிலாகப் பல செய்திகள் தெரிய வருகின்றன. வஞ்சி, மதுரை, கொற்கை, உறந்தை என்னும் தமிழகத்து முடியுடை மன்னர் மூவருடைய தலைநகரங்களில் நிகழ்ந்த அரும்பெருஞ் செயல்களும் அழகுடன் வருணிக்கப்பட்டுள்ளன. மேலும் நல்லியக்கோடனது வீரமும், புகழும், நற்குணங்களும், வள்ளற்றன்மையும் அக்காலத்தில் வசித்து வந்த பாணர்களின் நிலைமையும், நானிலங்களில் வாழும் மக்களின் பழக்க வழக்கப் பண்பாடுகளும், யாழின் வருணனையும் காணப்படுகின்றன.

இப்பாடலை அடுத்துவரும் பெரும் பாணாற்றுப்படை தொண்டைமான் இளந்திரையனைப் பற்றியது. இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். பாணருள் பெரும்பாணர் என்பார் ஒரு வகையினர். இப்பாணர்களுக்குரியது பேரி யாழ். அறுபத்திமூன்று நாயன்மார்களுள் ஒருவராகிய 'திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரை'ப் பெரும் பாணரெனக் கூறுகிறது பெரியபுராணம். இவர்கள் பெரிய இசைகாரரென்று அடியார்க்கு நல்லார் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலிலிருந்து இளந்திரையனது செங்கோல் முறைமையை அறியலாம். ஐந்திணைகளின் வருணனைகளும் அங்குள்ள மக்களின் நாகரிகமும் இதில் மிளிர்ந்து காணப்படுகின்றன.

பத்துப் பாட்டுள் ஐந்தாவதாக அமைந்துள்ளது முல்லைப் பாட்டு. இது ஓர் அகப்பொருட் பாடல். தலைவி தன்னுடைய தலைவன் போர்முகஞ் செல்லக் கருதுவதைக் குறிப்பாலுணர்ந்து ஆற்றாளாகிவாடுகிறாள். தலைவி உடம்படாததை அறிந்த பெருமுது பெண்டிர் தலைவியைப் பார்த்து 'அவன் வினை முடித்து வருதல் உண்மை, வருத்தம் விடுக' என்று கூறுகிறாள். அது கேட்ட தலைவி இல்வாழ்க்கைப் பயனை நினைந்து மன அமைதியடைந்த

வழி, தலைவன் போர் முடித்து வந்ததனைக் கண்டு தோழி முதலியோர் தம்முட் கூறியதாக நச்சினார்க்கினியர் கருதுவர். காவிரிப்பூம்பட்டினத்துப் பொன் வணிகனார் மகனார் நப்பூதனார் பாடியது இப்பாடல். முல்லை யென்பது இல்லறம் நிகழ்த்துதற்கு, பிரிந்து வருந்துணையும் ஆற்றுயிரு வென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்தல் இயற்கை யென்பர் உரைகாரர். இதில் பாசறையினமைப்பும், பாகர் யானைகளுக்குக் கவளம் அருத்தும் வழக்கமும், பாசறையி லுள்ள பள்ளியறையின் இயல்பும், தலைவன் பகைவரால் வருத்தமுற்ற தன் படைகளின் வருத்தம் நினைந்து, வருந்தும் அன்பின் திறனும் தலைவன் துயருறுவதும் கார்காலக் காட்சிகளும், சித்திரிக்கப்பட்டுள்ளன.

அடுத்துவரும் பாடல் மதுரைக் காஞ்சி. காஞ்சியென்பது, புறத்திணைகளிலொன்று; நிலையாமையைக் குறிப்பிடுவது. வீடுபேறு நிமித்தமாகப் பல்வேறு நிலையாமையைப் பெரியோர் கூறி வழிப்படுத்தலே இத்திணையின் பொருளாம். தொல்காப்பியரும் இதனைக் காஞ்சித் திணையென்றே கூறியுள்ளார். வஞ்சியடிகளால் வந்த ஆசிரியப் பாவாலாகியது. இம் மதுரைக் காஞ்சிப் பாடலுக்குரிய தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன். இதனைப் பாடியவர் மாங்குடி மருதனார்.

இந்நூலின் முதற்பகுதியில் செங்கோலரசருடைய நாட்டின் பெருமையையும், பகைவரிடமிருந்து கொணர்ந்த பொருள்களை நட்டோருக்கும் புலவர்களுக்கும், தனக்கெனப் பாதுகாவாது வரையாது வாரி வழங்கும் வண்மையும், பொய் தவிர்த்து வாய்மை மொழிந்து வாணிபத்தால் புகழ் கொள்ளுங் கொள்கையும் பிறஅருங் குணங்களும், மிகப் பரந்து காண்கின்றன.

போர் புரிந்து பகைவரை வெல்வதையே கருதி வாணாளிற் பெரும் பகுதியைக் கழித்தவரசன், நெடுஞ் செழியனுக்கு நிலையாமையை அறிவுறுத்தப் புகுந்த ஆசிரியர் மாங்குடி மருதனார் முதலில் தன் கருத்தைப் புலப்படுத்தாமல் அவனது குண நலங்களை எடுத்துப் பாராட்டிப் புகழ்ந்து பின் தன் குறிப்பைச் சில வடிகளாற் புலப்படுத்துகிறார். மதுரையின் பெரு வளத்தை நன்கு வருணித்திருப்பதிலிருந்து புலவரின் உலகறிவும், புலமைத் திறனும் அரசர்களிடத்து ஒழுகும் முறைமையும் தெரிகிறது. மதுரைக் காஞ்சி என்பதனால் 'மதுரையில் அரசருக்குக் கூறியதென்பது பெறப்படு கிறது.

பாண்டிய மன்னனைப்பற்றிய மற்றொரு பாடல் நெடுநல்வாடை. பகைமேற் சென்ற பாண்டியன் நெடுஞ் செழியனைப் பிரிந்து வருந்துந் தலைவிக்கு அவ்வருத்தம் நீங்க அவன் பகையை வென்று விரைவில் வருவா னென்று தேற்றுதலே இப்பாடலிற் பொதிந்த பொருள். இப்பாடலிற் காணப்படும் தலைவிக்குப் பாலைத்திணையும், தலைவனுக்கு வாகைத் திணையும் உணர்த்துகிறது. தலை வனைப் பிரிந்து வருந்துந் தலைவிக்கு ஒரு பொழுது ஓர் ஊழி போல நெடிதாகிய வாடையாய், அரசன் வேற்றுப் புலத்திருக்கின்ற இருப்பாகலின் நல்ல நெடியதாகிய வாடை அரசனுக்காயினமையின் நெடுநல் வாடை யெனப் பேர் பெற்றது.

இது அகப்பொருட் கேற்ற செய்திகளைத் தன்பாற் கொண்டுள்ளதேனும், பாண்டியனது அடையாளப் பூவாகிய வேம்பைக் கூறினமையின் புறத்திணையின் பாற்பட்டது. இதனை வாகைத் திணையுள் கூறிய "கூதிர்ப் பாசறை" யென்னும் துறையுள்ளடக்கினார் நச்சினார்க் கினியர். வாகைத்திணை வெற்றியைக் குறிப்பதாகும்.

இங்கே இன்பம் நுகர்வார்க்குச் சிறந்த காலமாகிய கூதிர் காலத்து அவ்வின்பத்தில் மனமற்றுப் பகைப் புலத்துப் போந்திருக்கின்ற இருப்பாகலின், பாண்டியன் இல்லற இன்பத்தை நீக்கியதால் காமத்திடத்து வெற்றியடைந்த காரணம்பற்றி 'வாகைத்திணை' யாயிற்று என்பர்.

இந்நூலில் கூதிர்காலத்தில் மக்கள், மிருகங்கள், பறவைகள் முதலியன குளிரால் வருந்தும் நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். தலைவி யின் நிலையைக் கூறப் புகுந்த ஆசிரியர் அவள் வாழும் அரண்மனையின் அமைப்பும், பள்ளியறையின் அழகும் கூறி, அரசன் பிரிவால் வருந்தும் நிலையை அவளது பண்டை நிலையோடு மாறுபடச் சுட்டி விவரிக்கின்றார். இதனால் தலைவியின் கற்பு நிலையும், அவளுற்ற துயர் மிகுதியும் விளங்குகின்றன. அவளது வருத்தத்தினை ஆற்ற, செவிலியரும் மகளிரும் கூறும் நல்மொழிகள் கற்போர் மனத்தைக் கவரும் வனப்புடையன. அரசன் நடுயாமம் என்றும் பாராமல் மழை யென்றும் கருதாமல் புண்பட்ட வீரர்கள் பாலுள்ள அன்பால் பாசறை சென்று முகமலர்ந்து அவர்களை ஆற்றுவிக்குஞ் செய்தி சித்திரிக்கப் படுவதிலிருந்து அரசனுடைய எளிமை, செய்ந்நன்றி யறிதல், வீரர்கள் பெருமை முதலியன புலப்படுகின்றன.

நெடுநல்வாடையை அடுத்து வருவது குறிஞ்சிப் பாட்டு. இது ஓர் அழகிய அகப்பொருட் பாடல் ஆரியவரசன் பிரகத்தனுக்குத் தமிழ்ச் சுவையை அறிவுறுத்தற் பொருட்டு, கபிலர் பாடியது. இருநூற்று அறுபத்தொரு அடிகளையுடையது. ஆசிரியப் பாவால் அமைந்தது. தலைவன் வரும் வழியிலுள்ள ஊறஞ்சும் காலத்து தலைவி, பாங்கிக்கு அறத்தொடு நின்றாளாக, பாங்கி, எளித்தல், ஏத்தல் முதலிய ஆறுங்கூறி செவிலிக்கு அறத்தொடு நின்ற வழி கூறுங் கூற்றாக அமைந்தது இப் பாடல்.

இப் பாட்டு களவொழுக்கத்தினைப் புலப்படுத்தி நிற்பது. தலைவி தோழியுடன் நீராடிப் பல பூக்களைப் பறித்துப் பாறையில் குவித்தாளென்ற செய்தியும், தலைவி நாய்க்கு அஞ்சுகையில் தலைவன் காத்த தன்மையும், தலைவனது மலைவளங் கூறும் பகுதியும் அறிந்து இன்புறத்தக்கன. குறிஞ்சிப் பாட்டாதலின் அத் திணைக்குரிய கடவுளாகிய முருகனைப்பற்றிய செய்திகளை வெகு நயம்பட உவமைகளைக் கொண்டு விளக்கியுள்ளதும் அரசர்களையும், வீரர்களையும் பற்றிய செய்திகளை ஆசிரியர் கூறியுள்ளதும் பாராட்டத் தக்கவை.

சங்க காலச் சோழரது பெருமையை அறிவிக்கும் சிறந்த பாடல் பட்டினப்பாலை. இது முந்நூற்றொரு அடிகளையுடையது. வேற்று நாட்டிற்குச் செல்லத் தொடங்கிய தலைவன் தனது நெஞ்சைப் பார்த்து 'தலைவியைப்பிரிந்து வாரேன்' என்று செலவழுங்கிக்கூறும் கூற்றுகச் சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர்உருத்திரங் கண்ணனார் பாடியது. இப் பாட்டை பாடியதற்காக, கரிகாற் பெருவளத்தான் உருத்திரங் கண்ணனாருக்குப் பதினாறுயிரம் பொன் பரிசாகக் கொடுத்தான். இதனை,

'தழுவு செந்தமிழ்ப் பரிசில்வாணர் பொன்
பத்தோ டாறுநூறாயிரம் பெறப்
பண்டு பட்டினப் பாலை கொண்டதும்'

என்னுங் கலிங்கத்துப் பரணி வரிகளால் அறியலாம். பட்டினத்தைச் சிறப்பித்துக் கூறிய பாலைத் திணையாகலின் இதற்குப் பட்டினப்பாலை என்னும் பெயர் வந்தது. பட்டினம் என்றது காவிரிப்பூம் பட்டினத்தை. இங்கே பாலை என்பது பிரிதலும், பிரித்தல் நிமித்தமும் பொருளாக வரும் புறத்துறை.

இப் பாட்டில் சோழ நாட்டின் பெருமையும், காவிரிப் பூம் பட்டினத்தின் சிறப்பும், கரிகால் பெருவளத்தானின்

வீரச் செயல்களும் உறையூரை அவன் வளப்படுத்தினமையும் விவரிக்கப்படுகின்றன. முதலில் பஞ்ச காலத்தின் காரணங்களும், காவிரியின் சிறப்பும், இயல்புகளும் சோழ நாட்டின் குடிவளமும், அறச்சாலை, தவப்பள்ளி முதலியவற்றின் பெருமைகளும், பரதவர் இரவிலும் பகலிலும் பொழுது போக்குந் தன்மையும், அவர்கள் வருணனை வழிபடும் மரபும், உவாக் காலத்தில் மீன் வேட்டைக்குச் செல்லாத வழக்கமும், தீவினை போக்கக் கடலாடும் இயல்பும் கடலிற் சென்ற பரதவர் கரையிலுள்ள வீடுகளில் ஏற்றிய விளக்குக்களை எண்ணும் பான்மையும் படிப்போர் உள்ளத்தைக் கவருந் தன்மையுடையன.

பரதவர் தெருவைப்பற்றிப் பாடிய பாடல்களால் காவிரிப்பூம் பட்டினத்தில் கடல் வாணிகம் நடந்து வந்ததென்பதும், ஏற்றுமதி, இறக்குமதியாகும் பண்டங்களில் சோழனுடைய அடையாளமாகிய புலிப் பொறியைப் பொறித்து வந்தனர் என்பதும், சுங்கப் பொருளைத் தொகுப்பார் அரசனிடம் நீங்கா அன்புகொண்டவர் என்பதும் தெரியவருகின்றன. இதனால் பல நாடுகளுக்குச் சோழ நாட்டுப் பொருள்கள் சென்றன என்பதும், ஈழம், காழகம் முதலிய நாடுகளிலிருந்து பல பொருள்கள் சோழ நாட்டுக்கு வந்தன என்பதும் தெரிந்து கொள்ள முடிகிறது.

வணிகர் இயல்பு கூறுவதிலிருந்து அவர்கள் கொலை, களவு முதலிய குற்றங்களைக் கடிந்தவரென்பதும் நடுவு நிலைமையையும், வாணிக முறையையும் சரிவரக் கடைப் பிடித்து வந்தனர் என்பதும் விளங்குகின்றன.

கரிகாலன் இளமையில் சிறையிலிருந்தமையும், சிறையினின்றும் நீங்கி அரசுரிமையை அடைந்தமையும் பகைவர் நாட்டைப் பாழாக்கிய முறைமையும், சிற்றரசர்

களை வென்றமையும் வெகு நயம்பட உரைக்கப்பட்டிருக் கின்றன. பாழ்பட்ட பகைவர் நாடுகளைப்பற்றிக் கூறும் பகுதியில் அந்நாட்டின் பழைய நிலை மிக அழகாகவும், பாழாயினபின், அடைந்த நிலை மிக இரக்கத்தை உண் டாக்கும் முறையிலும் பாடப்பட் டிருக்கின்றன.

பத்துப் பாட்டில் இறுதியாக உள்ள பாடல் மலை படுகடாம். மலைக்கு யானையை உவமித்து அதன் கண் பிறந்த ஒலியைக் கடாம் (மதம்) எனச் சிறப்பித்துக் காட்டியதால் இப் பாட்டு மலை படுகடாம் எனப் பெயர் பெற்றது. கடாம் என்பது அதனால் பிறந்த ஓசையை உணர்த்திற்று. இது கூத்தராற்றுப்படை எனவும் வழங்கும். கூத்தர் என்பார் ஆடல் - மாக்களாவர். இவர் களுக்குச் சாதி வரையறையில்லை. எண்வகை மெய்ப்பாடு அமைய இவர்கள் மனத்தின்கண் தோன்றிய குறிப்புக்கள் புறத்தே புலப்பட ஆடுவர். பரிசில் பெற வருங் கூத்தனொருவனைப் பரிசில் பெற்றானொருவன் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனிடத்தே ஆற்றுப்படுத்தியதாக அந் நன்னனை இரணிய முட்டத் துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனார் பாடியது இம் மலைபடுகடாம்.

இந்நூலில் பலவகை இசைக் கருவிகளின் பெயர் களும், யாழின் வருணனையும், மலைச்சாரலின் அழகும், அங்கு வாழும் குறவர்களும் வேடர்களும் வருவோரை விருந்தூட்டி உபசரிக்கும் இயல்பும், அப் பக்கங்களில் நிகழும் பலவகை ஓசைகளைப்பற்றிய செய்திகளும், நன்னனது ஊரின் பெருமையும், அரண்மனை வாயிலில் அவனது வரவு குறித்து எதிர்நோக்கி நிற்பார் கொண்டு வரும் கையுறைப் பொருள்களும், அவனைப் புகழும் முறையும், அவன் பரிசில் வழங்கும் தன்மையும் பன் முறை கற்றுப் போற்றற்குரிய பகுதிகளாகும்.

நன்னனுக்குரிய நவிரமலையிலுள்ள காரியுண்டிக் கடவுளது கோயிலைப் பற்றிய செய்திகளும், சேயாற்றின் பெருமையும் இதிற் காணப்படுகின்றன. குறமகளிர் தம் கணவர் புண்ணுற்படும் வருத்தத்தைப் பாட்டுப்பாடித் தணித்தலும், யானைப் பாகர்கள் யானைப் பேச்சாக, சில வடமொழிச் சொற்களைப் பயிற்றும் வழக்கமும் காணப் படுகின்றன. ஆங்காங்கு அரிய பெரிய உவமைகளை ஆசிரியர் சொல்லித் தன் பேரறிவாற்றலைப் புலப்படுத்தி, கற்போரை இன்புறச் செய்கிறார்.

பதினெண் கீழ்க்கணக்கு

இவற்றைச் சங்கநூலினும் வேறு படுத்திச் சங்கம் மருவிய நூல்களென்று கூறுவார்கள். உண்மையில் இவ்வகைள் சங்க காலத்துக்கு மிகப்பிற்பட்டவை யென்று ஆராய்ச்சியாளர்கள் சிலர் துணிந்துள்ளார்கள். எனினும், பழைய கொள்கையை அனுசரித்து இங்கே இவைகளை எடுத்துக் கூறி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

நாலடியார்:- இந்நூலுள் அமைந்த ஒவ்வொரு வெண் பாவும் ஒவ்வொரு சமணமுனிவரால் பாடப்பட்டது. முன் னொரு காலத்தில் சமணமுனிவர் எண்ணாயிரவர் கொடிய வறுமையால் தாக்கப்பட்டுத் தம் நாடுவிட்டுப் பாண்டிய அரசனது நாட்டை அடைந்தனர். பாண்டியன் அவர்களை ஆதரித்து, தனது மன்றப் புலவர்களாக அமர்த்தினன். அங்கிருந்து இவர்கள் தமிழாராய்ச்சிகளைச் செய்துவருங்காலத்து வறுமை நீங்கித் தம் நாடு செழித்த தெனக் கேள்வியுற்றனர். உடனே தம் தாய்நாடு செல்ல அவாக்கொண்டு பாண்டியனை விடை வேண்டினர். பாண் டியன் அவர்களைப் பிரிய மனமின்றிவிடையளியாது காலந் தாழ்த்தனன். எனவே அவர்கள் அறம், பொருள், இன்பம்

வீடு என்ற நான்கு பொருள்களும் புலப்படத் தனித் தனிஒவ்வொரு வெண்பாக்களை வரைந்து தத்தமது பீடத்தின் கீழ்வைத்துவிட்டு, ஓர் இரவில் யாவருமறியா வண்ணம் அங்கிருந்து அகன்றனர். மறுநாட் காலை அரசன் அப்புலவர்களைக் காணாது மிகவருந்தி, சென்ற இடம் யாதென அறிய ஏவலாளரைப் பல இடங்களுக்கும் அனுப்பினான். எங்கும் அவர்கள் காணப்படவில்லை. பின்னர் அவர்களிருந்த இடத்தைப் பரிசீலனை செய்தார்கள். அப்பொழுது அவர்களிருந்த ஒவ்வொரு பீடத்தின் கீழும் ஒவ்வொரு வெண்பாட்டுச் சீட்டிலெழுதி வைக்கப் பட்டிருந்தது. அவற்றை எடுத்து ஏவலாளர் அரசனிடங் கொடுத்தனர். அரசன் அவற்றை அப்புலவர்களைப் பிரிந்த வருத்தத்தால் வையைப் பேராற்றில் வாரியெறிய ஏவினான். அவ்வாறு எறியப்பட்ட ஏடுகளில் நானூறு ஏடுகள் நீர்வழிச் செல்லாது எதிரேறிச் சென்றன. இதனைப்பார்த்த அரசன் மிகவியப்படைந்து அவைகளில் எழுதியிருக்கும் வெண்பாக்களை ஒன்றாகத் திரட்டி ஒரு நூலாக்கினான். அப்பாடல்கள் நான்கு அடிகளைக் கொண்டுள்ளதால் 'நாலடி' எனப் பெயரிட்டு, பின்னர் சிறப்புப் பற்றி 'ஆர்' என்னும் விகுதி சேர்த்து நாலடியார் என அழைத்தனர். பாடல் எண்ணிக்கையைக் கொண்டு 'நாலடி நானூறு' என்றும் வழங்குவதுண்டு.

பிற்காலத்தில் பதுமனா ரென்னும் புலவர் ஒருவர் இந்நூலுக்கு பால், இயல், அதிகாரம் என்னும் பாகுபாடு செய்தனர்.

இந்நூலை நீதி நூலெனக் கூறலாம். இது அறத்துப் பால், பொருட்பால், காமத்துப்பால் என மூன்று பிரிவாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாலையும் இயலாகவும், இயலை அதிகாரமாகவும் பாகுபாடு செய்துள்ளனர். அறத்துப்பால் பதின் மூன்றதிகாரம்;

நூற்று முப்பது வெண்பாக்கள். பொருட்பால் இருபத்தி மூன்று அதிகாரம்; இருநூற்று முப்பது வெண்பாக்கள். காமத்துப்பால் நான்கு அதிகாரம்; நாற்பது வெண்பாக்கள். பதினெண் கீழ்க்கணக்குள் முதல் வரிசையில் வைத்துக் கொண்டாடப்படுவது நாலடியார். இந்நூல் சமணசமய முனிவர்களால் இயற்றப்பட்டதேனும், அது எச்சமயத்தாராலுங் கொண்டாடப்படுகிறது. இதிலடங்கிய நீதிகளும், விதிகளும் மிகமிகச் சிறந்தன. சிறுவர்களும் பெரியோர்களும் இந்நூலைப் பாடம் பண்ணுவது இன்றும் தமிழ் நாட்டில் நடந்து வருகிறது. இந்நீதி நூற்படி யொழுகுவார் வாழ்க்கையில் சிறந்த பயன் எய்துவாரென்பது திண்ணம்.

நான்மணிக் கடிகை: விளம்பிநாகனாரால் இயற்றப்பட்டது. கடவுள் வாழ்த்துள்பட நூற்றொரு வெண்பாக்களை யுடையது. சிறந்த நீதி நூல். செய்யுள்தோறும் நான்கு நீதிகளடங்கியுள்ளன. ஒவ்வொரு நீதியும் மக்களாய்ப் பிறந்தோர்யாவரும் கடைப்பிடித் தொழுகவேண்டியவை.

கார் நாற்பது: மதுரைக் கண்ணங்கூத்தனாரால் இயற்றப்பட்டது. கார்காலத்தைச் சொல்லும் நாற்பது செய்யுட்களை யுடையது

களவழி நாற்பது: நாற்பத்தொரு வெண்பாக்களை யுடையது. பொய்கையாரால் இயற்றப்பட்டது. சேரர்கோன் கணைக்காலிரும்பொறையை, சோழன் செங்கணான் குணவாயிற் கோட்டம் என்னுமிடத்தில் சிறைவைத்தான். சேரமான் ஆருயிர் நண்பரும் பொய்யா நாவனம்பெற்ற புலவர் பெருமானுமாகிய பொய்கையார் தம் நண்பனை சேரமானுக்கு நேர்ந்த பரிபவமறிந்து வருந்தி அவ்வேந்தனைச் சிறைவீடு செய்யக்கருதி, வெற்றிகொண்ட சோழன் செங்கணான் முன்னரெய்தி, அவனது போர்த்

தொழிலின் வன்மையையும் வெற்றியின் சிறப்பையும் புகழ்ந்து இந்நூலைப் பாடினர். இப்பாடல்கள் இனிய சொற்சுவையும் இயற்கை வளமும் ததும்பப்பெற்று உவமை முதலிய அணிகளாலமைந்தவை. இதன் இனிமையால் சோழன், சேரனைச் சிறைவீடு செய்ய உத்தரவு கொடுத்தான்.

இன்னா நாற்பது: கபிலர் இயற்றியது நாற்பது செய்யுட்களை யுடையது. இன்னாதன விளைவிப்பன இவை யென்று செய்யுள் தோறும் கூறுவது.

இனியவை நாற்பது: மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ் சேந்தனார் இயற்றியது. நாற்பது செய்யுட்களை யுடையது. இனிமை பயக்கத்தக்கன இவையெனக் கூறுகின்றது.

ஐந்திணை ஐம்பது: மாறன் பொறையனாரியற்றிய ஐம்பது செய்யுட்களையுடைய நூல். உரிப்பொருளாகிய இருத்தல், புணர்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்னும் ஐவகை ஒழுக்கங்களையும் முறையே முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐந்திணையாக வைத்து ஒவ்வொரு திணைக்கும் பத்துப் பத்துப் பாட்டாகப் பாடப்பட்டதால் ஐந்திணை ஐம்பது எனப் பெயர் பெற்றது.

திணைமாலை நூற்றைம்பது: மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் இயற்றியது. அகன் ஐந்திணை ஒவ்வொன்றிற்கும் முப்பது முப்பது வெண்பாக்களாக நூற்றைம்பது வெண்பாக்களை யுடையது.

திணைமொழி ஐம்பது: சாத்தந்தையார் மகனார் கண்ணன் சேந்தனார் இயற்றியது.

ஐந்திணை எழுபது: மூவாதியார் இயற்றியது.

திருக்குறள்: இந்நூல் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. திருவள்ளுவர் உலகம்போற்றும் ஓர் உத்தம கவி.

அவருள்ளத்தில் தோன்றிய கருத்துக்கள், மக்களனைவருடைய உள்ளங்களையுங் கவரும் தன்மைவாய்ந்தன. அதனாற்றான் குறளைத் தமிழ் வேதமென்று கூறுகிறார்கள். இந்நூலில் அரிய பெரிய செய்திகளடங்கிக் கிடக்கின்றன. எல்லா மதத்தவரும் நாட்டவரும் இதனைக் கொண்டாடி வருகின்றனர். பல மொழிகளிலும் திருக்குறளை மொழிபெயர்த்துள்ளார்கள். இதனை முப்பால் என்றும் உரைப்பர்; முப்பாலென்று பெயர் பெறினும் நாற்பாலையுந் தன்னுள்ளடக்கி யிருக்கிறது. 1330 குறள் வெண்பாக்கள் அடங்கியது. அறத்துப் பாலில் முப்பத்தெட்டு அதிகாரத்திலும் (380) முந்நூற்றெண்பது பாக்களும், பொருட்பாலில் எழுபது அதிகாரத்திலும், (700) எழுநூறு பாக்களும், காமத்துப் பாலில் இருபத்தைந்து அதிகாரத்திலும் (250) இருநூற்றைம்பது பாக்களும் ஆக (1330) ஆயிரத்து முந்நூற்றுமுப்பது பாக்கள் உள்ளன.

குறட் பாக்கள் குறுகிய அடிகளை யுடைத்தாயினும் அதன் கண் அடங்கியுள்ள நீதிகள் கணக்கிலடங்கா. ஆழ்ந்தகன்ற நுண்பொருள்களைத் தாங்கி நிற்கும் அழகு வேறெந்த நூலினுங் காண முடியாது. பாக்களில் ஆங்காங்கே காணும் நயங்களும், நகைச் சுவைகளும், உவமைகளும் படிப்போருக்குத் தெவிட்டா இன்பத்தைப் பயப்பன. அப்பாடல்களில்வரும் ஒவ்வொரு சொல்லும் விலையுடையதே. அதில் ஒரு சொல்லையேனும் எடுக்கவோ, மாற்றிக் கோக்கவோ யார்க்கும் முடியாது. வள்ளுவர் எடுத்தாண்டசொற்கள் அழகு வாய்ந்தவை; இனிய ஓசையுடையவை. பொருட்செறிவு உடையவை; இனிமை அளிப்பவை. எனவே வள்ளுவர் கருத்தையும் சொற்களையும் எடுத்தாளாத தமிழ் நூலேயில்லை.

இந்நூல் மிகச் சிறந்த அமைப்புடையது. வாழ்க்கைக்கு வேண்டிய மிக அரிய விஷயங்களை வரையறைப்

படுத்தி வெகு சுருக்கமாகக் கூறுகிறது. ஒரு பொருளின் இலக்கணத்தையும் அதன் முக்கியத்தையும், அதனுல் அடையும் பயனையும், அதனையடையும்வழிகளையும், நயம் பட எடுத்து உரைக்கின்றது. மக்கள் விலக்கவேண்டியவை, கைக்கொள்ள வேண்டியவை யாவை யென்பதனை நேர்முகமாகவும், எதிர்மறையாகவும் தக்க காரணங்களுடன் புலப்படுத்தி யிருக்கிறது. தொழில்களுள் உழவும், வாணிகமும் தலைமையாவன யென்பதை விளக்கிக்காட்டியிருக்கிறது. உழவுக்கெனத் தனி அதிகாரமே வகுத்திருக்கிறார். கல்வியின் பெருமையைப் பற்றி கல்வி, கல்லாமை கேள்வி யென்னும் மூன்று அதிகாரங்களால் உணர்த்துகின்றார். மேலும் கல்வியோடு தொடர்புடைய அதிகாரங்களாகவே, அறிவுடைமை, சொல்வன்மை, அவை யஞ்சாமை என்ற அதிகாரங்களையும் அமைத்து விளக்குகிறார். இந்நூலிலுள்ள ஒவ்வொரு கருத்துக்களும் மிகச் சிறப்புடையன. எனவே, திருக்குறள் அறத்தினை உணர எண்ணுவார்க்கு ஒரு அற நூலாகக் காட்சியளிக்கிறது. அரசியலை அறிய ஆவல் கொள்வார்க்கு ஒரு அரசியல் நூலாகும். அறிவை விரும்புவார்க்கு ஒரு மறை நூலாகும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் கருவியாகும். ஆகையால் இந்நூலைப் பயில்வார் பெரும் புலமையெய்தி, தம் வாழ்வில் இம்மைக்குரிய பயனும், மறுமைக்குரிய பயனும் பெற்று நலம்பெறுவர் என்பது திண்ணம்.

திரிகடுகம் : நல்லாதனுர் இயற்றியது. கடவுள் வாழ்த்துள்பட நூற்றொரு பாக்களையுடையது. திரிகடுகம் என்பன சுக்கு, திப்பிலி, மிளகு இம் மூன்றுமாம், இவை மக்களுக்கு வியாதியைப் போக்கி நன்மை பயப்பதுபோல் அறியாமை என்ற வியாதியைப் போக்கி நல்லறிவாகிய நன்மையை யளிக்கும் மூன்று உபாயங்கள் ஒவ்வொரு வெண்பாவிலும் சொல்லப்பட்டுள்ளன.

ஆசாரக் கோவை : பெருவாயின் முள்ளியார் இயற்றியது. தற்சிறப்புப் பாயிரமுள்பட நூற்றொரு பாடல்களை யுடையது உலக ஒழுக்கத்தின் விதியைச் சொல்வது.

பழமொழி : முன்றுறையரையனார் இயற்றியது. இவர் ஜைன மதத்தினர், நானூறு வெண்பாக்களையுடையது இந்நூல். எனவே, இது 'பழமொழி நானூறு' என்றும் வழங்கும். ஒவ்வொரு வெண்பாவிலும் ஒவ்வொரு பழமொழி அமைந்திருக்கும்.

சிறுபஞ்சமூலம் : காரியாசான் இயற்றியது. சிறுபஞ்சமூலமாவன, கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறுமல்லி வேர், நெருஞ்சில் வேர், பெருமல்லி வேர் என்பன. இவ்வைந்தும் சேர்த்த மருந்து உடலுக்கு நன்மை பயப்பதுபோல ஒவ்வொரு வெண்பாவிலும் நன்மை தரக் கூடிய ஐந்து நீதிகள் அமைந்து உயிருக்கு உறுதி அளிக்கின்றன.

முதுமொழிக் காஞ்சி : கூடலூர் கிழார் இயற்றியது ஒவ்வொன்றிலும் பத்து நீதி வாக்கியங்களடங்கிய பத்துப் பகுதிகளையுடையது. காஞ்சித் திணைப்பொருளைச் சொல்வதனால் காஞ்சி எனப் பெயர்வந்தது.

ஏலாதி : கணி மேதாவியார் இயற்றியது. கடவுள் வாழ்த்துள்பட எண்பத்தொரு செய்யுட்களையுடையது. ஏலம், இலவங்கம், சிறு நாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு, இவ்வாறும் ஒன்று முதல் ஆறு வராகனெடைகளாகச் சேர்த்த சூர்ணம் தேகத்திற்கு நன்மை பயப்பதுபோல் ஒவ்வொருபாடலிலும் ஆறு நீதிகளைப் புகட்டி நன்மை பயப்பது. பெயர்க் காரணமும் இதனால் விளங்கும்.

கைந்நிலை : இதனை மாறோகத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார் இயற்றினார். இஃது அகத்திணை பற்றிய ஒரு சிறு நூல். ஒவ்வொரு திணைக்கும் பன்னிரண்டு வெண்பாவாக அறுபது வெண்

பாக்களால் இயன்றது இந்நூல். இளம் பூரணராதிய பழைய வுரைகாரர்களால் எடுத்தாளப்பட்டது.

தொல்காப்பியம்: இது ஓர் இலக்கண நூல். அகத்தியமாமுனிவருடைய மாணுக்கர் பன்னிருவருள் தலைமை பூண்டவரான தொல்காப்பியரால் இயற்றப்பட்டது. இது எழுத்து, சொல், பொருள் என மூன்று பகுதிகளையுடையது. பண்டைத் தமிழ் மக்களது ஒழுகலாற்றினை உணர்த்துவதற்கு இதுவோர் அரும்பெரும் கருவியாகும். தமிழ் இலக்கண நூல்களுள் இத்துணைச் சிறப்புடைய வேறு நூல் இல்லையென்றே சொல்லலாம்.

3. சங்ககால இலக்கியங்களின் சிறப்பியல்புகள்

மேலே சங்க நூல்களையும், சங்கம் மருவிய நூல்களையும், சங்க நூல்களுக்கு இலக்கணமாகிய தொல்காப்பியத்தையும் பற்றிப் பார்த்தோம். இனி அவைகளின் சிறப்பியல்புகளைப் பற்றிய சில செய்திகளை ஆராய்வோம்.

1. மொழியின் சிறப்பியல்பு

வடமொழிக் கலப்பு: தமிழ் மொழி மிக மிக விரிந்த பரப்பினையுடையதும் வடமொழிக்கு முற்றும் புறம்பான இலக்கிய இலக்கண அமைதியுடையதுமான ஒரு தனி மொழியே. என்றாலும் ஆதிகாலந்தொட்டே திசைமொழிகளும் வடமொழிகளும் கலப்புள்ளனவாகச் சில நூல்கள் தோன்றியுள்ளன.

"இயற்சொல் திரிசொல் திசைசொல் வடசொலென்
றனைத்தே செய்யு ளீட்டச் சொல்லே"

"செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலத்தும்
தங்குறிப் பினவே திசைச்சொற் கிளவி"

"வடசொற் கிளவி வடஎழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"

என்றார் தொல்காப்பியர்.

திசைமொழி என்பன தமிழ்நாடு நீங்கலான வேற்று நாட்டு மொழிகளினின்றும் தமிழில் வந்தடைந்து அருகி வருவன. இவை வியாபார நிமித்தமாகவும் பிற காரணங் களின் நிமித்தமாகவும் தமிழரும் மற்றோரும் பழகுமிடத் துத் தமிழிற் புகுந்தன. பின்னர் அரசாட்சி சம்பந்தமாக வும் பல சொற்கள் கலக்கலாயின.

வடமொழியாவது ஸம்ஸ்கிருத மொழியிலிருந்து தற்சமமாகவும் தற்பவமாகவும் தமிழ் மொழிக்கண் வழங்கி வருவன. இந்தியாவில் குடியேறிய ஆரியர்கள் தென்னிந்தியாவிலுள்ள தமிழர்களிடையே குடியேறினர். அவர்கள் வழியாய் நூல் வழக்கிலும் உலகவழக்கிலும் வடமொழிச் சொற்கள் பெரும்பான்மையாய்ச் சமயங்களை யும் சமயாசாரங்களையும் சில தொழிற்றுறைகளையும் கலை களையும் தத்துவ ஆராய்ச்சிகளையும் ஒட்டிச் சேரலாயின.

சங்க காலத்துத் தமிழ் நூல்களைப் பார்ப்போமாயின் அவை சமணர்களும் சைவர்களும் வைணவர்களுமானபல மதத்தைச் சேர்ந்த புலவர்களாலியற்றப் பெற்றனவென் பது நன்கு தெரிகிறது. அப்போதும் சில வடசொற்கள் தமிழோடு சேரலாயின. தமிழ்ப் புலவர்கள் தமக்கு வேண் டிய சொற்களைத் தங்கள் எழுத்திலக்கண விதிகளுக்குத் தக்கவாறு திரித்து மேற்கொள்வாராயினர். ஆரியச் சொற் கள் தமிழில் வருவதற்கேற்ற விதிகளும் வகுத்தனர்.

அஃதன்றியும் சைனர் முதலியோர் ஆரியரது பழக்கவழக்கங்களுட் பலவற்றை மேற்கொண்டனர்; அப்போது வடமொழியில் மேலான பெருமை வாய்ந்தவராய் அதனைப் பெரிதும் பயில்வாராயினர். ஆகவே வடமொழியை நன்கு உணர்ந்தனர். இவர்கள் தமிழ் மொழியையும் பயிற்சி செய்யப் புகுந்து, நூல்களியற்றவுஞ் செய்தனர். ஆரியச் சொற்கள் தமிழில் வருவதற்கேற்ற விதிகளும் வகுத்தனர். அத்தருணத்தில் தமிழின்கண்ணே அளவிறந்த வடசொற்களை ஏற்றினர்.

இங்ஙனம் வந்த சொற்களின் தொகுதியைத் தமிழிற்கேயுரிய சொற்களின் தொகுதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, சங்க கால இலக்கியங்களில் நூற்றுக்கு இரண்டொரு சொற்களே காணப்படுகின்றன. உதாரணமாக நான்மணிக் கடிகையில் இருபது வடசொற்களேயுள்ளன. திருக்குறளில் ஓர் அதிகாரத்திற்கு ஒரு சொல் தானுங் காண்பதரிதே. இவ்வாறே பல நூல்களிலுஞ் சில சொற்களேகாணப்படுகின்றன. அக்காலப் புலவர்கள் வடசொற்களை அகற்றும் ஆற்றலுடையவர்கள்தாம்; தமிழ் மொழியுந் தனித்தியங்குந் தன்மையுடையதென்பதையும் அறிந்தவர்தாம். என்றாலும் வடமொழி கலப்பதால் மொழி விருத்தியாகுமென்ற நோக்கத்தோடே எடுத்து ஆண்டுள்ளாரென்பது விளங்குகிறது. அவ்வாறு அவர்கள் கையாண்டு வந்ததாற்றான் அக்காலத்து நூல்கள் செம்மையாக அமைந்துள்ளன. ஆனால் அக்காலத்து இலக்கியங்களைப் புலவரியற்றும்போது சித்திரமெழுதுபவன் தான் எழுதும் வடிவின்மீது பல வன்னங்களையும் வாரி இறைக்காமல் அவ்வவ்வுருப்பின் நலனும் ஒளியும் ஆராய்ந்தறிந்து, அததற்கிசைய வன்னந் தீட்டுவது போலத் தமது செய்யுளில் இடனறிந்து வடதிசைச் சொற்களைச் சுருக்கியும் பெருக்கியும் வழங்கியுள்ளார்கள்.

ஆகவே சங்க காலத்து இலக்கியங்களில் மொழிக் கலப்புக் காணப்படினும் அவ்விலக்கியங்களின் தன்மையை நோக்குவோமாயின் அவை தமிழ்நாட்டின் ஐந்திணை வளங்களையுங் குடிகளின் நிலைமைகளையும் அற்றைநா ளரசர் பெருமைகளையும் அன்னாரது சிறப்பினையுங் கூறுப வைகளே. மேலும் தமிழுக்கேயுரிய அகப்பொருள் புறப் பொருள்களைப் பலவகையாக விரித்து இயம்புகின்றன. ஆசாரக் கோவையொழிந்த மற்றைய கீழ்க்கணக்கு நூல் கள் எல்லாம் அகப்புறப் பொருளான உலகியனெறியுங் கூறும் இலக்கியங்களாம்.

எனவே சங்க காலத்து இலக்கியங்களில் வடமொழிக் கலப்பு இருந்ததென்பது உண்மை. ஆனால் அவற்றின் ஆசிரியர்கள் வடமொழியிற் காணப்படும் செய்திகளைக் கையாண்டிருப்பதாகக் கூறமுடியாது.

சொல்லின் வடிவு: சங்க காலத்து நூல்களிலுள்ள சொற்களை ஆராய்ந்து வகைப்படுத்தி அறிதல் தமிழறிஞர் செய்யவேண்டும் ஒரு முக்கியமான பணியாகும். அதனை முறையாக இதுவரை யாவருஞ் செய்ததாகத் தெரிய வில்லை. அதற்கு நிகண்டு முதலியன பெரிதும் பயன்படு மென்று எண்ணுதற்கு இடமில்லை. ஒருகால் 'திவாகரம்' என்ற நூல்மட்டும் (நிகண்டு நூல்) பயன்படலாம் நாம் செய்யவேண்டுவது சங்க கால இலக்கியங்களிலுள்ள சொற்களை முறையே தொகுத்து, அகராதி வரிசைப்படுத்தி, அவற்றிற்கு உரைகாரர்கள் கொடுத்துள்ள பொருள்களை யும் நன்கு உணர்ந்து தனிப்பட ஆராய்வதுவேயாகும். இவ்வாறு நாம் ஆராய்ச்சி செய்தால் சில முக்கியமான முடிபுகள் பெறப்படும். அவற்றைத் தொகுத்துக் கீழே தருகிறேன்.

பாகதச் சிதைவு: முதலாவது பாகதச் சிதைவு. முற்காலத் திலே வடமொழிச் சொற்களை அவ்வாறே எடுத்து அவ்

வாறே ஆளுதல் தமிழ் நூல் வழக்கிலில்லை. அவற்றைப் பாகதச் சிதைவிலிருக்கின்ற வடிவிலேயேதமிழில் வழங்குதல் பெரும்பான்மை. உதாரணமாக,பாசி, ஊசி என்ற சொற்களை எடுத்துக்கொள்க. இச் சொற்கள் புறநாநூற்றின்கண்ணே பயின்று வருகின்றன. பாசி என்பது 'ப்ராசீ' என்ற வடமொழியின் பாகதச் சிதைவாகும்; இதன் பொருள் கிழக்கு என்பதாகும். ஊசி என்பது 'உதீசீ' என்ற வடமொழியின் பாகதச் சிதைவாம்; இதன் பொருள் வடக்கு என்பது. இங்ஙனமாகப் பாகதச் சிதைவுச் சொற்களே சங்க காலத்து நூல்களிற் கலந்து காணப்படுகின்றன. இவற்றையுந் தனித் தமிழ்ச் சொற்களையும் வேறு பிரித்து அறிதல்கூடச் சிற்சில இடங்களில் கூடாததாகின்றது. இது தமிழ் ஒலிக்கும் பாகத ஒலிக்குமுள்ள நெருங்கிய தொடர்பினை ஒருவாறு குறிக்கின்றதெனக் கொள்ளுதலுமாம்.

இலக்கண முடிபுச் சொற்கள்: இவ்விதப் பாகதச் சிதைவுச் சொற்களேயன்றி இலக்கண முடிபுச் சொற்களும் பல அக்காலத்து நூல்களிற் காணப்படுகின்றன. இனி இலக்கண முடிபுச் சொற்களை ஒரு சிறிது விளக்குதல் நலம். உலக வழக்கில் சிறிதும் பயின்று வாராது சில இலக்கண விதிகளைத் தழுவி வடிவு வேறுபட்டுப் பொருளுணர்த்துஞ் சொற்களையே நாம் ஈண்டுக் கருதுவது. உதாரணமாக 'விரைஇக்கொண்மென' என்ற தொடரினைக் காண்க (புறம். 152) இங்கே 'விரைஇ' என்பது விரவி என்ற சொல்லின் பிறிதொரு வடிவாம். இதுவே போன்று 'தழீஇ', 'நிலைஇ' முதலிய சொற்களும் வழங்கப்படுகின்றன. இவையெல்லாம் உலக வழக்கின்கண் எக்காலத்தேனும் பயின்றுவந்தனவெனக் கூற யாருந் துணியமாட்டார்கள். எக்காலத்தும் உலக வழக்கிற்குஞ் செய்யுள் வழக்கிற்குஞ் சிறிது பேதமுண்டு. இப் பேதத்

தினை அடிப்படையாகக் கொண்ட இவ்வகை இலக்கண வடிவுச் சொற்கள் தமிழில் வழங்கலாயின. 'கொண் மென' என்பது பிறிதொரு இலக்கண முடிபுத்தொடராம் 'கொள்ளும் என' என்பது கொண்மென என நின்றது. இவ்வகையான இலக்கண முடிபுச் சொற்களையுந் தொடர்களையும் சங்ககாலத்து நூல்களில் நாம் மிகவும் அதிகமாகப் பார்க்கின்றோம். இலக்கண முடிபுச் சொற் களேயன்றி வழக்கொழிந்த சொற்களுஞ் சங்ககாலத்து நூல்களில் பயின்றுவரக் காண்கின்றோம்.

வழக்கொழிந்த சொற்கள்: வழக்கொழிந்த சொற்களை இக் காலத்துள்ள ஒருசார் நூலாசிரியர்கள் மீண்டும் உயிர் கொடுத்து அவற்றைத் தம் நூல்களில் புகுத்தி எழுதி வருகின்றார்கள். ஆனால் இவர்கள் இச் சொற்களை வழங்குவது மிகவும் பரிகசிக்கத்தக்க தொன்றும். இளம்பிராயத்தில் ஒரு குழந்தைக்கு நாம் ஆடை ஆபரணங்கள் அணிகின்றோம். அந்த ஆடை ஆபரணங்களை வயது முதிர்ந்தகாலத்து அணிந்தால், அப்பொழுது அது மிகவும் விகாரமாய்த் தோன்றுவது நிச்சயம். வழக்கொழிந்த சொற்களை இக்காலத்தார் புகுத்தி எழுதுதலை இதற்கொப்பிடலாம். ஆனால் சங்ககாலத்திலோ அவைகள் தக்க பெருமிதத் தோடு விளங்குகின்றன. அவற்றோடு இயைந்துவரும் பிற சொற்களும் வாக்கிய நடையும் செய்யுளமைதி யும் அத்துணை ஒன்றோடொன்று பொருத்தமாக உள்ளன. நம் மூதாதையர்களியற்றிய அரிய செய்யுட் செல்வமெனப் போற்றுதற்கு நமது மனம் உவப்புக் கொள்ளுகின்றது. உதாரணமாக, இரண்டாயிரம் வருடங் களுக்கு முன்பு 'அதோளி', 'இதோளி' என்ற சொற்கள். இவை செய்யுட்களில் ஒருகாலத்தில் வழங்கிவந்தன. இம் மாதிரியான சொற்களைப் பெரிதும் பாராட்டியும் வந்த

னர். இப்போது இவைகள் வழக்கொழிந்த சொற்களாக மாறின. அச் சொற்களை உபயோகிப்போர் மதிப்பாரின்றி இகழப்படுவர். இங்ஙனமெழுதுவார் சுவையும் போலிச் சுவையெனப் பலரும் ஓர் பக்கம் ஒதுக்குவர்.

பரிபாஷைச் சொற்கள்: அக்காலத்தில் பரிபாஷைச் சொற்களும் அருகி வழங்கி வந்ததாக அவ்விலக்கியங் களா லறிகிறோம். பரிபாஷை ஒரு கூட்டத்தார் அல்லது ஒரு வர்க்கத்தார் அல்லது ஒரு தொழிலாளர் அல்லது ஒரு மதத்தார் அல்லது ஒரு கலைவல்லார், இவர்களாற் சங்கேத பதங்களாக வழங்குவன. உதாரணமாக, சைவ அடியார்கள் மற்றைச் சைவ அடியார்களுக்கு அன்ன தானஞ் செய்வர். இவ்வாறு செய்யுந் தருமத்திற்கு 'மகேச்சுவர பூசை' எனப் பெயரிட்டு வழங்குவர். இதே விதமாக வைணவர்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத் திற்கு வந்து சேரும்போது 'விடைகொள்ளுதல்' என்ற சொல்லை வழங்குவர். அப்பதத்துக்கு வந்துசேர்தல் என்பது பொருளாகும். வைத்தியநூலில் மலையிலிருக்கிற கல்லை யெடுத்துவந்து தலையிற்போட்டால் தலைவலி போமென்று ஒரு பாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. இது அசந்தர்ப்பமாகத் தோன்றும். ஆனால் தலைவலியை நிவர்த்திக்கக்கூடிய ஒரு செடிக்குக் 'கல்லை' என்பது பெய ரென்று அறியவேண்டும். இவைகளில் 'மகேச்சுவர பூசை', 'விடை கொள்ளுதல்', 'மலையிலிருக்கிற கல்லை' என்பன பரிபாஷைகளாம். இங்ஙனமாயுள்ள பரி பாஷைச் சொற்கள் பண்டைநூல்களில் மிகுதியாகக் காணப்படவில்லை.

இனி, செய்யுளைப்பற்றிய விஷயங்களைப்பற்றி ஒரு சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

2. செய்யுளின் அமைப்பு

சங்க இலக்கியங்களை ஆராய்ந்து பார்ப்போமாயின் எல்லா நூல்களும் செய்யுட்களாகவே தோன்றியுள்ளன. நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டுவகை யுணர்ச்சியும் உயிரினங்களுக்கு, அவற்றுள்ளும் மேம்பாடுடைய மானிடருக்கு, உண்டாகிறது. இவை நேரிடும் ஒவ்வொரு சமயத்தும் மக்கள் இயல்பாகக் கூறியதெனக் கருதத்தகும் ஓசை வேறுபாடுதோன்ற அக்காலத்துப் புலவர்கள் தங்கள் கருத்தை வெளியிட்டார்கள். ஓசை வேறுபாடுகள் சாதாரண சமயத்தில் மக்கள் பேசும்போது எத்துணை இயல்பாக உண்டாகுமோ அத்துணை இயல்பாகவே மக்கள் இதயத்தில்உணர்ச்சி ததும்பும்போதும் உண்டாவது. ஒவ்வொரு மொழியைப் பேசும் மக்களிடையிலும் அவரவர்களுடைய சுற்றுப்புறங்களுக்கும் இயற்கைகளுக்குந் தக்கபடியே இந்த ஓசை வேறுபாடு நிகழும். தமிழ் மக்களுந் தங்கள் இயற்கைக்குஞ் சுற்றுப்புறங்களுக்கும் பிற காரணங்களுக்குந் தக்கபடி ஓசை வேறுபாடுகளைக் காட்டித் தங்கள் உள்ளத்துணர்ச்சிகளைப் புலப்படுத்தினர். இவ்வாறு புலப்படுத்திய ஓசைகளின் பரிணாமமே பின்னால் செய்யுளாக விளைந்தது

அச் செய்யுளை வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகையாகப் பிரித்துச் செய்யுளிலக்கணமும் வகுத்தனர்.

இவ்வகைச் செய்யுளுக்குரிய உறுப்புக்கள் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பனவாம்.

எழுத்து:- உயிர், மெய், ஆய்தம் என்பன.

அசை:- நேரசை, நிரையசையென இரண்டு வகைப்படும். அவைகளில் நேரசை நெடிலானாய நேரசை,

குறிலொற்றடுத்த நேரசை, நெடிலொற்றடுத்த நேரசை யெனப் பலதிறப்படும். இம்மாதிரியே குறிலிணைந்த நிரையசை, குறினெடில் இணைந்த நிரையசை, குறிலிணைந்து ஒற்றடுத்த நிரையசை, குறினெடில் இணைந்து ஒற்றடுத்த நிரையசை என நிரையசைக்கும் பலவகையாக வகுத்தனர்.

சீர்:- மேலேகூறிய அசைகள் தனித்தாவது இரண்டு முதலியன இணைந்தாவது நிற்பது. இது நான்கு வகைப் படும். என்றாலும் செய்யுட்குரிமைபூண்டு நிற்குந் திறமும் பிறவும் நோக்கி அகவற்சீர், வெண்சீர், வஞ்சிச்சீர், பொதுச்சீர், அசைச்சீர் என ஐந்துவகையாகவுங் கூறுவர்.

தளை:— சீரொடு சீர் புணர இடைநின்று இசைத் தொடர்ச்சியுற அவைகளைப் பிணிப்பது. இவை ஏழு வகைப்படும். நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றா சிரியத்தளை, வெண்சீர்வெண்டளை, இயற்சீர்வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை, கலித்தளை யென.

அடி:— இரண்டு முதலிய சீர்களைக்கொண்டு முடிவது. இது குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என்பன.

தொடை:- அடிகளிலும் சீர்களிலும் அமையுமாறு எழுத்து முதலியவற்றால் தொடுக்கப்பட்டுப் பூந்தொடை போன்று செய்யுட்கு அழகுபெற நிற்பது. இவை, மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை என்பன. இவை ஒவ்வொன்றும் தனித்தனி அடி, இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என எட்டோடு பொருந்திவரும்.

மேலே கூறப்பட்ட உறுப்புக்களெல்லாம் அமைந்து நிற்க, சொற்களாலே பொருட்கிடனாகச் செய்யப்படுவது

செய்யுள். செய்யுளென்பதற்குத் தூக்கு, கவி, பாட்டு, யாப்பு, தொடர்பு எனப் பல பெயர்களுண்டு. இது மேலே கூறியவாறு நான்கு வகைப்படும். அவற்றின் இலக்கணங்களைப் பார்ப்போம்.

வெண்பா:— வெண்டளையும் அளவடியும் பெற்றுச் செப்பலோசை யுடையதாய் வரும். இது ஐந்து வகைப் படும். குறள்வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, பஃறொடைவெண்பா சிந்தியல்வெண்பா என. குறள்வெண்பா இரண்டடியாய் வரும். அதிலும் சிறிது நெடிதாய் (அதாவது மூன்றடியாய்) சிந்தியல்வெண்பா வரும். நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும் நாலடியாய் வரும். பஃறொடைவெண்பா ஐந்து முதலிய பல வடியாகி நீண்டுவரும். இவை ஒருவிகற்பமாகவும் இருவிகற்பமாகவும் வரும்.

ஆசிரியப்பா:— அகவலிசையும் இயற்சீரும் அளவடியும் பெற்று ஏ, ஓ, ஈ, என், ஆ, ஐ என்றவற்றுள்ளே ஒன்றினை இறுதியிற் கொண்டு முடியுஞ் செய்யுள். இது நான்கு வகைப்படும். நேரிசை யாசிரியப்பா, இணைக் குறளாசிரியப்பா, நிலைமண்டிலவாசிரியப்பா, அடிமறி மண்டிலவாசிரியப்பா என

கலிப்பா:— துள்ளலிசையுடையதாய்த் தரவு, தாழிசை முதலிய உறுப்புக்களைப் பெற்று நடப்பது கலிப்பா எனப் படும். இது மூன்று வகைப்படும் ஒத்தாழிசைக்கலி, வெண் கலி, கொச்சகக்கலி என.

வஞ்சிப்பா:- தனக்குரிய சீர் தளை அடிகளால் நடந்து தனிச்சொல் வரப்பெற்று அகவற் சுரிதகத்தான் முடிவு பெறும்.

மேலே கூறிய செய்யுட்களுக்குதாரணம் சங்கநூல் களிற் காணலாம். இனி, செய்யுட்குரிய பொருள்களைக் கவனிப்போம்.

3. செய்யுட்குரிய பொருள்கள்

பண்டைக்காலத்துப் புலவர்கள் பல வர்ணத்தாரும் பல குலத்தாரும், பல சமயத்தாரும், பல தொழிலாளரும் ஆவர். வைத்தியம், கணிதம், சிற்பம், இசை முதலிய பல கலைகளிலும் நன்றாகத் தேர்ச்சியுள்ளவர்களுமாவர். பொருளை நினைந்து மனோபாவத்தைச் செலுத்தி ஒன்பது சுவையும் ஒருங்கே அமைத்துப் பாடல்களாகப் பாடியிருக்கிறார்கள். மேலும் யாப்பிலக்கணம் படித்து அதிலிருந்து வெறுஞ் சொற்களை மட்டும் அமைத்துப் பொருளில்லாது இடர்ப்பட்டவர்களல்லர். ஓசை, தாளம், அடி இவைகள் ஒழுங்குபட இயற்கையிலே அமைந்தவைகளாகப் பாடியிருக்கின்றனர். உண்மையை உள்ளவாறு செய்யுளில் காட்டியிருக்கின்றனர். பொருளாலும், இடத்தாலும்,காலத்தாலும், தொழிலாலும், அளவாலும் நூல்களை வகுத்து, நதியை வர்ணிக்கும்போது உண்மையான நதியும், நாட்டையும் மலையையும் வர்ணிக்கும்போது உண்மையான நாடும் மலையும் படிப்போனுக்கும் கேட்போனுக்கும் முன்னேவந்து நிற்பனபோல உள்ளத்தைக் கவர்ந்து விடும்படியாகப் பாடல்களை அமைத்துள்ளனர். இதுதான் செய்யுட்குச் சிறப்புச் செய்வது. உதாரணமாக,

பயங்கெழு மாமழை பெய்யாது மாறிக்
கயங்களி முளியுங் கோடை யாயினும்
புழற்கா லாம்ப லகலடை நீழற்
கதிர்க்கோடு நந்தின் சுரிமுக வேற்றை
நாகிள வளையொடு பகன்மணம் புகூஉ
நீர்திகழ் கழனி நாடுகெழு பெருவிறல்
வான்றோய் நீள்குடை வயமான் சென்னி
சான்றோ ரிருந்த வவையத் துற்றோ
ஞசா மென்னும் பூசல் போல

வல்லே களமதி யத்தை யுள்ளிய
விருந்துகண் டொளிக்குந் திருந்தா வாழ்க்கைப்
பொறிப்புண ருடம்பிற் றோன்றியென்
னறிவுகெட நின்ற நல்கூர் மையே.

(புறம் 265)

இம்மாதிரியே வீரத்தைப்பற்றிக் கூறும்போதும் மகிழ்ச்சியைப்பற்றிக் கூறும்போதும் வேறு எவ்விஷயங்களைப் பற்றிக் கூறினாலும் உண்மை தோன்றும்படியாகவே இருக்கும். கண்ணாற் கண்ட உண்மைகளை அவ்வாறு கூறி இருப்பதாற்றான் அக்காலத்துக் கவிகளுக்கு நடையழகு நன்றாக அமைந்திருக்கிறது.

வீரத்தைப்பற்றிய செய்யுள் வருமாறு:

நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறின னென்றுபலர் கூற
மண்டமர்க் குடைந்தன னாயி னுண்டவென்
முலையறுத் திடுவென் யானெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.

(புறம் 278)

குறைபாடின்றி நிரம்பிய நல்வாழ்க்கையின் பெருமையை அடியில் வருஞ் செய்யுளால் உணரலாம்:

யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு

மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

(புறம் 191)

இவை போன்ற செய்யுள் யாவும் ஆற்றொழுக்காகச் சென்று நேரே அமைந்து பொருள் செவ்விதின் விளங்கும்படியாக இருக்கின்றன. அவைகள் பல அரிய பெரிய பொருள்களை நாம் அறிய வழிகாட்டிகளா யிருக்கின்றன. சொற்சுவை பொருட்சுவை மலிந்து காணப்படுகின்றன. பொருளின் இயற்கை யழகும், தமிழ் இனிமையும், தெய்வங்களின் பெருமையும், நீதிகளும், முடியுடை மூவேந்தர் மகிமையும், அவர்கள் கொடை, வீரம், நாகரிகம் முதலியனவும், வைதிக ஒழுக்கமும், மற்றும் சிற்றரசர் சேனைத்தலைவர் பலருடைய சரித்திரங்களும், சங்கப்புலவர்கள் வரலாறும் போர்முறைகளும் அதற்குரிய இலக்கணங்களும், ஆங்காங்கே செய்யுட்களிற் காட்டிப் பாடப்பட்டிருக்கின்ற. உவமை, கற்பனு சக்தி முதலியனவும் பரந்து காண்கின்றன.

ஆகவே மேலே கூறிய விஷயங்களெல்லாம் செய்யுளில் அமைந்திருப்பது நன்கு புலனுகின்றது. இதோடு வரிப்பாட்டு, அம்மானை, தாலாட்டு, ஆற்றுவரி, ஊசல், கிளிக்கண்ணி, எம்பாவை, குரைவைப்பாட்டு, வள்ளைப் பாட்டு, குதம்பைப் பாட்டு முதலியனவாக வகுத்துப்பாடி அனுபவித்திருக்கிறார்கள். பின்னர் இச்செய்யுளுக்கு ஒரு விதி ஏற்படுத்தி அவைகளை முறைப்படுத்தினர். அதிலிருந்து பிற்காலத்துப் புலவர்கள் பலவிதமாகத் தொகுத்தும் விரித்தும் செய்யுளியற்றலாயினர்.

ஒருவாறு சங்ககாலத்து இலக்கியத்தின் சிறப்பைப் பற்றிப் பார்த்தோம். இதற்கும் இடைகால இலக்கியத்திற்குமுள்ள வளர்ச்சியைப்பற்றிக் கவனிப்போம்.

4. இடைக்கால இலக்கியங்கள்

கி. பி. மூன்றும் நூற்றுண்டு முதல் ஏழாம் நூற்றுண்டு வரையிலுமுள்ள கால அளவு இடைக்காலமாகும். இக்காலத்தில் தோன்றிய நூல்கள் ஐம்பெருங் காப்பியத்தில் மேலே கூறியபடி மணிமேகலை சிலப்பதிகாரமும், இலக்கண நூல்களிற் களவியலும், பன்னிரு திருமுறைகளிற் சம்பந்தரும் திருநாவுக்கரசரும் செய்த ஆறு திருமுறைகளும், நாலாயிரப் பிரபந்தங்களில் திருமழிசைப்பிரான், நம்மாழ்வார் முதலியோரது அருளிச் செயல்களும் பிறவுமாம்.

மணிமேகலை:- இது சீத்தலைச் சாத்தனுரால் இயற்றப் பெற்றது. இந்நூல் கோவலன் மகள் (அதாவது மாதவி வயிற்றுப் பெண்) மணிமேகலை, சிறு வயதில் துறவு பூண்டு புத்தமத சந்நியாசினியாகி முக்தி பெற்றதைக் கூறுகிறது. இதில் காவிரிப்பூம் பட்டினம், வஞ்சிமா

நகர், கச்சியம்பதியென்னும் பெரிய நகரங்களைப் பற்றி விரித்துக் கூறியுள்ள பகுதிகள் அக்காலத்து நாகரிகச் சிறப்பையுங் கைத்தொழில் மேம்பாட்டையும் நகரவளத்தையும் விளக்கிக் காட்டுகின்றன. அந்நூலில் கூறப்பட்டுள்ள மலை, கடல், தீவு, வனம், ஆறு, நாடு, நகர் முதலியவற்றையும் பிறவற்றையும் சாத்தனார் நன்கு பழகிக் கண்டவற்றைக் கண்டவாறே அறிவித்திருக்கிறாரெனத் தெரிகிறது. அதனுள் இக்காலத்தில் வேறொரு வகையாலும் புலப்படாதனவாகிய சில தெய்வங்களுடைய பெயர்களைக் காணலாம். தெய்வங்களை வழிபடும் முறைமையைப் பார்க்கலாம். கோட்டங்கள் அறச்சாலைகள். மன்றங்கள் முதலியவற்றின் சிறப்பை அறியலாம், இன்ன இன்ன சமயங்கள், இன்ன இன்ன இடங்களில் பரவியிருந்தன வென்பதையும் தெரிந்து கொள்ளலாம்.

அரசர் முனிவர் முதலியோர் வரலாறு ஆங்காங்கே வரையப்பட்டிருக்கிறது. சொல் நுட்பங்களும், பொருள் நுட்பங்களும், சாத்தனார் நுண்ணறிவை எடுத்துக் காட்டுகின்றன. பௌத்தமதப் பெருமைகளையும், கொள்கைகளையும் பாராட்டி விளக்குகிறது இக்காவியம். பல இதிகாசக் கதைகளும், புராணக்கதைகளும் எடுத்தாண்டிருக்கும் தன்மை இன்பம் பயப்பனவாயிருக்கிறது. சோழவரசர்களின் வரலாறும் நீதியும் இடை இடையே வந்துலாவுகின்றன. பற்பல தருமங்கள் சொல்லப்பட்டபோதிலும் அவற்றுள் மிகுதியாக காணப்படுவது, அன்னதானமும், ஒருவன் மனமொழி மெய்கள் தூயனாகி அருளுடையனாதல் வேண்டுமென்பதும் முக்கிய கருத்தாகக் கூறியிருக்கிறது.

மணிமேகலையின் சரிதங் கூறுவதால் இந்நூலுக்கு இப்பெயர் வழங்கப்படுவதாயிற்று. இதில் கூறப்பட்டுள்ள சரிதம் நிகழ்ந்த காலமும் நூலாசிரியர் காலமும் ஒன்றே.

அதனால் இது வேறு மொழிகளிலிருந்து வந்ததென்று சொல்வதற்கிடமில்லை.

சிலப்பதிகாரம்: இது கோவலன் கண்ணகி வரலாற்றை விவரித்துக் கூறும் நூல். ஐம்பெருங் காவியங்களுள் தலை சிறந்தது. சொற்சுவை, பொருட்சுவைகளிற் சிறந்துள்ளது. தமிழ் நாட்டரசர் மூவருடைய தலைநகரங்களாகிய வஞ்சி, புகார். மதுரை என்னும் மூன்றன் பெருமைகளையும் விளங்கக் கூறுவது. பண்டைத்தமிழரின் சீர்மையும், செம்மையும், அறியப் பெருங் கருவியாயுள்ள இலக்கியங்களுள் சிறப்புடன் நிற்பது இப்பெருங்காவியம். எச்செய்திகளைப்பற்றிக் கூறினாலும், அச்செய்தியை நேரில் கண்டாற்போல், மனத்திற்குத் தோற்றுவிக்கும் தெள்ளிய இனிய நல்ல நடையையுடையது. இயல் இசை, நாடகம், என்னும் முத்தமிழ்ச் சுவையும், அமையப் பெற்றது. ஒன்பான் சுவையும் ஒருங்கே பெற்ற இக் காவியம் மூன்று அரிய பெரிய நீதிகளைச் சிறந்த முறையில் கற்பிக்கிறது. அதாவது அரசியல் பிழைத்தோருக்கு அறங் கூற்றுவதும், உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும், ஊழ்வினை உருத்து வந்து ஊட்டு மென்பது மாகிய பண்புகளாம். தனது செல்வ முழுவதையும் மாதவி யென்னும் விலைமகட்குக் கொடுத்து வறுமையுற்ற கோவலன் வாணிகஞ் செய்து பொருள்தேடும் பொருட்டு மதுரைக்குச் சென்று தன் மனைவியான கண்ணகியின் சிலம்பென்னுங் காலணியை விற்கத் தொடங்குகையில் அற்பனான பொற்கொல்லனது சொற்களை நம்பிப் பாண்டிய அரசனால் கொடுமையாகக் கொல்லப்பட்ட சரிதத்தைக் கூறி, அச்சிலம்பின் வாயிலாக நீதிகளைக் கற்பிப்பதால், இந்நூலுக்குச் சிலப்பதிகாரம் என்னும் பெயர் உண்டாயிற்று. அன்றியும் நாடக உறுப்புக்களை அதிக முடைமையால் நாடகக் காப்பியமென்றும்,

பெயர் பெறும். இயற்றமிழில் காணப்படும், வெண்பா, அகவற்பா கலிப்பா என்னும் பாக்களையுடையது இக் காப்பியம். அவைகளில் அகவற்பாக்களே மிகுதியாக உள்ளன. ஆற்று வரி, ஊசல் வரி, கந்துக வரி முதலிய இசைத் தமிழின்பாற்படும் பாக்களும் காணப்படு கின்றன. நாடகத் தமிழின் முக்கிய உறுப்பாகிய உரைப் பாட்டுக்களும், இசைப்பாட்டுக்களும், இதில் தொடர்ந்தே வருகின்றன. அதனால் இக்காப்பியத்திற்கு உரையிடை யிட்ட பாட்டுடைச் செய்யுள் என்னும் பெயர் வழங்கு கிறது.

இதனை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேரர் மரபில் உதித்தவர். இளமையில் துறவு பூண்டவர். தூய உள்ளமும் பொது நோக்கமும் உடையவர். கவி திலகர். கண்ணகியின் செயலைக் கண்ணுரக் கண்ட குறவர்கள், செங்குட்டுவனோடு அவர் தம்பியான இளங்கோவடிகள் வீற்றிருக்கையில் அச்செய்தியை உரைத்துப் போயினர். குட்டுவன் இது பற்றி மதுரைக் கூலவாணிகச் சாத்தனு ரிடம் வினவ, அவ்வரலாறு நடந்த வகையெல்லாம் சாத்தனுர் சொல்ல, அப்போது இது சிலம்பு காரணமாக ஏற்பட்டதால் சிலப்பதிகாரமென ஒரு நூல் செய்வோ மென்று இளங்கோவடிகள் சொல்ல, அவ்வாறே சாத்த னுர் அடிகளையே இயற்றும்படியாகக் கேட்டனர். அதன் படியே இந்நூல் எழுதப்பட்டது.

இந்நூல் எழுதப்படுவதற்கு முன்னர் தமிழ்நாட்டில் காப்பியங்கள் இல்லை. தமிழ் மொழியில் முதல் முதல் எழுதப்பெற்ற காப்பியம் இந்நூலே நாடகத்திலும் இதுவே முதல் நூலாகும்.

களவியல்:—களவின் சிறப்பு நோக்கிக் களவியல் எனப் பெயர்பெற்றது. இது களவியல் கற்பியலென்னும்இரண்டு இயல்களையுடையது. சங்கப் புலவருள் சிவபெருமான்

ஒருவராக இருந்து இந்நூலை இயற்றியுள்ளார் என்பது ஒரு கதை. இதனை இறையனார் அகப்பொருள் என்பர். இந்நூலுக்கு நக்கீரர் உரை எழுதியுள்ளார்.

முதல் மூன்று திருமுறைகள்: இவை திருஞானசம்பந்தரால் இயற்றப்பட்ட தேவாரப் பதிகங்கள். சம்பந்தர் சீகாழியில் கௌணிய குலத்தினராய்ச் சிவபாதவிருதயர் என்பரது தவப் பயனாய் அவர் மனைவி பகவதியார் வயற்றில் அவதரித்தார். இவருக்கு மூன்றும் ஆண்டில் பொன் வள்ளத்துப் பாலூட்டிச் சிவபெருமான் ஆட்கொண்டார். இவர் புகலி வேந்தரென்றும் அழைக்கப்படுவர். இவர் காலத்தில் நெடுமாறன் என்னும் பாண்டிய அரசன் சைவ சமயத்தை மறந்து சமண சமயம் புகுந்தான். அவன் வழியே குடிகளும் இருந்தனர். ஆகவே சைவம் ஒளி மங்கி நின்றது. அப்போது அரசன் மனைவி மங்கையர்க்கரசியால் இவர் பாண்டி நாட்டுக்கு அழைக்கப்பட்டார். அங்கே சமணரை வாதில் வென்று சைவ சமயத்தை நிலைநிறுத்தினர். பின்னர் பல புண்ணிய இடங்களுக்குச் சென்று, சிவபிரானைக் குறித்து நூற்றுக் கணக்காகப் பதிகங்கள் பாடினர். அவைகள் 1, 2, 3-ஆம் திருமுறைகள். பதிகங்கள் பண்ணொடு பக்திச்சுவை ததும்பி, யாவரும் எளிதிற் கற்று ஆண்டவனருளைப் பெறுமாறு அமைந்துள்ளன.

ஓர் உதாரணம்:

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

4, 5, 6-ஆம் திருமுறைகள்:- இது திருநாவுக்கரசரால் இயற்றப்பட்டது. இவர் புகழனருக்கும் மாதினியாருக்

கும் புதல்வராய் அவதரித்தார். வேளாள குலத்தைச் சார்ந்தவர். இவருக்குப் பெற்ருேரால் இடப்பட்ட பெயர் மருணீக்கியார். இவரது சிறுபிராயத்தில் பெற்ருேர் இறக்கவே இவர் சைவசமயம் விட்டகன்று சமணசமயம் புகுந்தனர். பிறகு இவர் தமக்கையான திலகவதியார் சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து தம்பியை ஆட் கொள்ள வேண்டினர். அதன்படியே சிவபெருமான் மருணீக்கியாருக்குச் சூலைநோய் கொடுத்து, துன்புறுத்தி ஆட்கொண்டார். சூலைநோய் பொறுக்கமுடியாத மருணீக் கியார் திருவதிகையில் வதியும் திலகவதியாரிடம் வந்து அவர் உபதேசத்தால் வீரட்டானேசுவரர் முன் "கூற்ரு யினவாறு" என்ற பதிகம் பாடினுர். அப்பாட்டின் இனிமை கண்டு அவ்வீசுரர் அவருக்குத் 'திருநாவுக்கரசர்' எனப் பெயரிட்டுச் சூலைநோயையும் நீக்கியருளினர். அதுமுதல் சைவப்பற்றும் பக்தியுங்கொண்டு பல புண்ணிய ஸ்தலங் களுக்குச் சென்று ஆண்டவன் முன்னிலையில் பக்தி வெள்ளம் பெருகும் பல இனிமையான பதிகங்கள் பாடி வந்தார். அவைகளை ஒன்ருகத் திரட்டி 4, 5, 6-ஆம் திருமுறைகளாக வகுத்தனர்.

உதாரணம் ஒன்று வருமாறு:-

மாதர் பிறைக்கண்ணி யானை மலையான் மகளோடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

திருச்சந்த விருத்தம்:- இது நாலாயிரப் பிரபந்தத்தில் ஒரு பகுதி. இவ் விருத்தம் திருமழிசைப்பிரானு லியற்றப் பட்டது. திருமாலின் திருவுள்ளத்தில் படும்படியாக ஆழ்வார் தம்முடைய விருத்தத்தை விண்ணப்பஞ்

செய்து ததநுபவவிரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை யறுத்துத் தந்தருளவேண்டுமென்று பாடியிருக்கிறார். இந்த ஆழ்வார் திருமழிசையில் பார்க்கவருக்கும் கனகாங்கியாருக்கும் குமாரராகத் திருவவதரித்தருளினார். பிறந்தவுடன் ஒரு பிண்டம்போல் அவயவங்கள் தோன்றாது இருந்ததால் பெற்றோர்கள் ஒரு பிரம்பின் புதரின் கீழே போகட்டுப் போனார்கள். அவ்வுருவம் பெரிய பிராட்டியார் அருளால் எல்லா உறுப்புக்களும் பரிபூரணமாய் உயிர் தோன்றிச் சிசுவாயிற்று. பின் பசி தாகத்தில் ஈடுபட்டுப் பால் வேண்டி அழுதுகொண்டிருந்தது. அவ்வளவில் பெருமாள் அங்கே எழுந்தருளிப் பசி தாகம் தீரும்படி கருணைபுரிந்து ஆராவமுதான தன் திருவுருவைக் காட்டி மறைந்தார். இவர் பாடிய சந்த விருத்தத்துள் ஒன்று வருமாறு:

கால நேமி காலனே கணக்கிலாத கீர்த்தியாய்
ஞால மேழு முண்டுபண்டோர் பால னாய பண்பனே
வேலை வேவ வில்வளைத்த வெல்சி னத்த வீரநின்
பால ராய பத்தர்சித்தம் முத்தி செய்யும் மூர்த்தியே.

நான்முகன் திருவந்தாதி:- தேவதாந்தர பரத்வத்தை நிராகரித்துப் பகவத் பரத்தை நிலைநாட்டித் திருமழிசைப் பிரானால் பாடப்பட்டது.

திருவாசிரியம்:- நம்மாழ்வாரால் இயற்றப்பெற்றது. இவர் காரியாருக்கும் உடையநங்கையாருக்கும் குமாரராகத் திருவவதரித்தருளினார். தாம்ப்ரபர்ணி என்னும் பொருநை ஆற்றின் கரையில் ஆழ்வார் திருநகரியென்று பெயர் பெற்ற திருக்குருகூரில் பரம்பரையாக ஸ்ரீமந் நாராயணனுக்கு அடிமை செய்துவந்த வேளாள குலத்தில் பிறந்தவராவர்.

பெரிய திருவந்தாதி:- நம்மாழ்வார் தம் திருவுள்ளத்தைக் குறித்து எம்பெருமானுடைய அழகையுங் குணங்களையும் பேசி அடிமைசெய்வோம் என்று பாடியிருக்கிறார். இவ் அந்தாதிப் பாடலில் ஒன்று பின்வருவது:

முயற்றி சுமந்தெழுந்து முந்துற்ற நெஞ்சே
இயற்றுவா யெம்மொடுநீ கூடி—நயப்புடைய
நாவீன் தொடைக்கிளவி யுள்பொதிவோம் நற்பூவைப்
பூவீன்ற வண்ணன் புகழ்.

மேலே காட்டிய இடைக்காலத்து இலக்கியம் சங்க காலத்து இலக்கியத்திலிருந்து எவ்வெவ் விஷயங்களில் எம்மாதிரியான வளர்ச்சியடைந்து விரிந்துள்ளதென்பதைப்பற்றி ஆராய்வோம். இவ்விடத்தில் இக்காலத்து மக்களுடைய நோக்கம் கிளர்ச்சி இவைகளை அறிதல் அவசியமாகும்.

இடைக்காலத்துத் தமிழ் மக்கள் நோக்கம்: இடைக்காலத்து மக்கள் சமய சம்பந்தமான கிளர்ச்சியை எங்கும் பரவச் செய்து அக்கிளர்ச்சியில் ஈடுபட்டு அதற்காக உழைப்பாராயினர். அவ்வுழைப்பில் வெற்றிபெறவுஞ் செய்தனர். சைவர், வைணவர், சமணர், பௌத்தர் முதலானவர்கள் அவரவர் சமயத்தை ஸ்தாபிக்க எண்ணிப் பெரிதும் முயன்றனர். அற்புத சம்பவ நிகழ்ச்சிகளும் உண்மையாகவும் போலியாகவும் காட்டுவாராயினர். மேலும் தங்கள் தங்கள் சமயமே மேலானதென்று வாக்குவாதங்கள் செய்து போராடவுஞ் செய்து வந்தார்கள். இதையொட்டி அவரவர் கொள்கையை விளக்கும் நூல்களும் பலமாதிரியில் இயற்ற ஆரம்பித்தனர். எனவே அக்காலத்திற்றோன்றிய நூல்களெல்லாம் சமய ஆராய்ச்சி பற்றியவைகளாகவே இருந்தன. சமயப் பெரியார்களும் கடவுளருளாற் றோன்றுவாராயினர். அவர்கள் சமயங்

களிலுள்ள உண்மைகளை விளக்கிப் பொதுமக்களுக்குப் புகட்டினர்.

இத்தருணத்திற்றான் சைவாசாரியர்களில் சம்பந்தரும், திருநாவுக்கரசரும் தோன்றினரென முன்னே குறிப்பிட்டிருக்கிறது. அவர்கள் சரிதங்களை ஊன்றிப் பார்ப்போமாயின் பக்தியின் மகிமை நன்கு விளங்கும். அக்காலத்து மன்னர்களும் சமயப்பற்றுடையவர்களாகவே இருந்தார்கள். அப்பூதி அடிகள், சிறுத்தொண்டர் முதலான சிவனடியார்களும் இக்காலத்திலேதான் தோன்றினர். தருமம் தலைகாட்டி நின்றது. தமிழின் மணம் எங்கும் கமழ்ந்தது. சிவவேடம் மட்டும் பூண்டார்கூட மதிப்புடன் போற்றப்படுவாராயினர். இவ்வாறே ஆழ்வார்களும் வைணவ அடியார்களும் போற்றப்பட்டனர்.

எனவே இடைக்காலத்து இலக்கியங்கள் சமயச்சார்பானவை. சங்ககாலத்து இலக்கியங்கள் இகவாழ்வில் ஈடுபட்டவை; அவை இல்லற வாழ்வையும் யுத்த முறைகளையும்பற்றிக் கூறுவன; இன்னும் அரசியல் விஷயங்களும் எடுத்துரைப்பன; அறம், பொருள், இன்பம் மூன்றையுங் கூறி வீட்டை மறைமுகமாக விளக்கிக்காட்டுவனவா யிருந்தன. ஆனால் இடைக்காலத்தில் மேற்குறித்தவாறு சமய சம்பந்தமான நூல்களும் அவற்றோடு சேர்ந்த புராண இதிகாசக் கதைகளும் நீதி நூல்களும் வளர்ச்சியுற்று இகவாழ்வோடு பரவாழ்வுக்கு வேண்டியவைகளும் விரிவாகப் பாடல் உருவாக அமைந்து வேண்டிய இடங்களில் இசையும் அழகும் பொருந்தி மக்களைப் பரவசப்படுத்துவனவாயின.

இடைக்காலத்துச் சொற்களின் சிறப்பியல்பு: சமயப்பற்று அதிகரிக்கத் தொடங்கவே யாவரும் மறைகளை ஆராயப் புகுந்தனர். மறை நூல்களெல்லாம் ஆதியில்

வடமொழியிலேயே யிருந்தன. ஆகவே அந் நூல்களின் கருத்துக்களையும் மொழிகளையும் அதிகமாகக் கையாண்டனர். சங்க காலத்தைப் பார்க்கிலும் இக் காலத்துத் தமிழ் நூல்களில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலக்க ஆரம்பித்தன. வடமொழிச் சொற்களும் கருத்துக் களும் அதிகமாகவே, இலக்கணங்களும் அதற்குத் தக்கபடி வகுக்கலாயினர். அணியிலக்கணம் புதிதாக இயற்றப்பட்டது. வடமொழி நூல்களை மொழிபெயர்க்க வும் ஆரம்பித்தனர். வைணவ நூல்கள் பெரும்பாலும் வடமொழியை ஒட்டியே இருக்கின்றன. சங்க காலத்தில் நூற்றுக்கு ஒன்றிரண்டு வடசொற்களே யுள்ளனவென்று பார்த்தோம். இக்காலத்தில் வைணவ நூல்களில் 100-க்கு 50 சதமானமும் சைவ நூல்களில் 30 சதமானத்துக்குக் குறைவில்லாமலிருக்கின்றன. இக் காலத்தில் கலைகளை யும் சமயங்களையுங் கவனித்தார்களேயன்றி மொழி வேறு பாட்டை அத்துணை நுணுக்கமாகக் கவனித்தார்களில்லை யென்றே சொல்லாம். அதனால் மொழி வளர்ச்சிக்கு யாதொரு தீங்கும் நேரவில்லை.

இடைக்காலத்துச் செய்யுள் நலம். பண்டைக்காலச் செய் யுட்கள் செறிவுடையனவாயும் பேச்சு வழக்கின் தன் மையை மிகுதியாகப் பெற்றுப் உயர்வு நவிற்சி முதலிய அணிகளின்றிக் கருதிய பொருளை நேரே பெறும் அறுதியுடைய சொற்களால் தெளிவாய் உணர்த்தும் இயல்பையுடையன. இடைக்காலத்து செய் யுட்கள் சிறிது நெகிழ்ச்சிபெற்றுங் கருதிய பொருளை உயர்வு நவிற்சி முதலிய அணிகளால் அணிபெறக் கூறி யும் பேச்சு வழக்கின் தன்மையைச்சிறிது கை நெகிழவிட் டும் விருத்தம் முதலியவற்றின் ஓசைகளிலிலேயே அமைந்திருந்து செல்லும் இயல்பையுடையன. முற் காலத்துச் செய்யுளின் தன்மையோடு பிற்காலத்து

செய்யுளின் தன்மையும் ஒருங்கமையவே இயற்கையிலே அழகுடைய ஓர் நங்கைக்கு அவளுக்கு உகந்த அணிகளைப் பூட்டிச் செயற்கை அழகும் பொலிவுற வைப்பதுபோன்றிருந்தது இடைக்காலத்துச் செய்யுளானது. இருகாலங்களிலுமுள்ள செய்யுள் நடையை உதாரணமுகத்தாற் பார்ப்போம்.

சங்க காலத்துச் செய்யுள்:

பாரி பாரி யென்றுபல வேத்தி
யொருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி ஒருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகுபுரப் பதுவே

(புறம், 107)

ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
யொருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கு மொருகண் போல (15)

வேந்து மேம்பட்ட பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறுங் கதழ்பரிய கலிமாவு
நெடுங்கொடிய நிமிர்தேரு நெஞ்சுடைய [புகன்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினு மாண்ட
வறநெறி முதற்றே யரசின் கொற்றம் (16)

மதனால் நமரெனக் கோல்கோ டாது
பிறரெனக் குணங்கொல்லாது
ஞாயிற் றன்ன வெந்திற லாண்மையுந்
திங்க ளன்ன தண்பெருஞ் சாயலும்
வானத் தன்ன வண்மையு மூன்று
முடையை யாகி யில்லோர் கையற

நீடு வாழிய நெடுந்தகை தாழ்நீர்
வெண்டலைப் புணரி யலைக்குஞ் செந்தி
னெடுவே ணிலைஇய காமர் வியன்றுறைக்
கடுவளி தொகுப்ப வீண்டிய
வடுவா ழெக்கர் மணலினும் பலவே.

(புறம், 55)

இவைகளில் மேலே கூறிய இயல்புகளைப் பார்க்கலாம். இனி, இடைகாலத்துச் செய்யுட்களுக்குவருவோம்:

குரவம்கமழ் நறுமென்குழல் அரிவையவள் வெருவ
பொருவெங்கரி படவென்றதன் உரிவையுடல் [அணிவோன்
அரவும்அலை புனலும்இள மதியும்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே.

(சம்பந்தர் தேவாரம்)

செழுநீர்த் தடத்துக் கயல்மிளிர்ந் தாலொப்பச் [சேயரிக்கண்
அழுநீர் துளும்ப வலமரு கின்றன வாழியரோ
முழுநீர் முகில்வண்ணன் கண்ணன்விண் ணாட்டவர் [மூதுவராம்
தொழுநீ ரிணையடிக்கே அன்பு சூட்டிய சூழ்குழற்கே.

(நம்மாழ்வார் திருவிருத்தம், 2.)

இவ்வாருகச் செய்யுளின் தன்மை யேற்படவே சிற்சில இடங்களிற் பரிபாஷைச் சொற்களும் முன்னைவிட அதிகமாக வரலாயின. பண்டைக்காலத்திற் பாக்கள் மட்டும் தோன்றினவேயன்றிப் பாவினமும் பிரபந்தங்களும் தோன்றவில்லை. இவை சோழர் ஆட்சியிற்றான் அதிகமாக வளர ஆரம்பித்தன. என்ருலும் இடைக்காலத்தில் பாவினத்தில் விருத்தப்பாக்களும் பிரபந்தங்களில் அந்தாதி முதலியனவும் ஆரம்பமாயின. விருத்

தத்தை வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்று நான்கு பாடல்களின்மேலும் சேர்ப்பராயினர். அவை முறையே வெளிவிருத்தம், ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் என்பன.

வெளிவிருத்தம்:- இது செப்பலோசையும் வெண்சீரும் பெற்று மூன்றடியானும் நான்கடியானும் முடிந்து அடி தோறும் முடிவிடத்திலே தனிச்சொற் பெற்று வரும்.

ஆசிரியவிருத்தம்:- கழிநெடிலடிகள் நான்காய்த் தம்முள் அளவு ஒத்து முடிவது: குறைவுபடுதலில்லாத சீர்களை யுடைய அகவல் விருத்தமெனப்படும் இது அகவலிசையும் இயற்சீரும் பெற்றுவரும். விருத்தங்களெல்லாஞ் சீர் வேறு வேருக மாறிமாறித் தொகுக்கப்படும் வகையினல் வேறு வேறு சந்தம் பெற்றுப் பல வித பேதங்களால் வழங்கும். அவை அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம் முதலானவை.

கலிவிருத்தம்:- துள்ளலோசையுங் கலித்தளையும் பெற்று நாற்சீரடி நான்காய் முடியுமாயின் அது கலிவிருத்த மாகும்.

வஞ்சி விருத்தம்: வஞ்சிப் பாவுக்குரிய சீருந் தளையும் அடியும் பிறவும் பெற்று முச்சீரடி நான்காய் வருவது வஞ்சி விருத்தமாகும்.

பிரபந்தவகையிலுள்ள அந்தாதி: அந்தமாய் நிற்கும் எழுத்து,அசை, சீர் முதலியன ஆதியுமாய்நின்று தம்முள் ஒன்றைத் தொடுக்கப்படும் தொடை அந்தாதித்தொடை எனப்படும்.

உதாரணம் வருமாறு:

(1) *நான்முகனை நாராயணன்படைத்தான் நான்முகனும்*
தான்முகமாய்ச் சங்கரனைத் தான்படைத்தான—
[*யான்முகமாய்*

அந்தாதி மேலிட் டறிவித்தே னாழ்பொருளை
சிந்தாமல் கொண்மினீர் தேர்ந்து.

(2) தேருங்கால் தேவனொருவனே யென்றுரைப்பர்
ஆரு மறியா ரவன் பெருமை—ஓரும்
பொருள்முடிவு மித்தனையே யெத்தவம்செய் தார்க்கும்
அருள்முடிவ தாழியான் பால்.

(நான்முகன் அந்தாதி)

இதில் முதற் பாட்டில் 'தேர்ந்து' என்று முடிய அடுத்த பாட்டில் 'தேரும்' என்பது முதலாக அமையப் பெற்றிருக்கிறது.

5. பிற்காலச் சோழர் சரித்திரச் சுருக்கம்

தமிழ் நாட்டைப் பண்டைநாள் முதலே சேர, சோழ பாண்டியர் என்னும் மூவேந்தரும் ஆண்டுவந்தனர். எனினும் கி. பி. மூன்ரும் நூற்ருண்டிலிருந்து தமிழ கத்தை முதன்மை நிலையில் ஆண்டு வந்த அரசர்கள் சோழராவர். இவர்கள் மிகவும் வீரர்களாய் இருந்து சிங்களத்தின்மீது படையெடுத்துச் சென்று அந் நாட்டி னரை அடிமையாக்கிக் கொணர்ந்தனர். நான்கு, ஐந்தாம் நூற்ருண்டில் பல்லவ வம்சத்தைச் சார்ந்த அரசர்கள் சோழர்களை வென்று அடக்கி ஆளத் தொடங் கினர். அப்போது சோழர்கள், சிற்றரசர் பதவியை அடைந்து பல்லவர் கீழிருந்து அரசாளவேண்டிய தாயிற்று. என்ருலும் சோழ பாண்டியர்கள் சமயம் கருதிக்கொண்டே இருந்தனர். இதற்காகத் தங்களில் பெண்களைக் கொடுப்பதும், வாங்குவதுமான உறவுகளை யும் வைத்துக்கொண்டனர்.

கி. பி. எழுநூற்றறுபதாம் ஆண்டு வரையும் பல்லவர் ஆட்சி, சிறப்புடன் நடந்தது. இந்நூற்ருண்டின் நடுவில், பல்லவ அரசன் 'பரமேச்சுவர போத்தரைமின் இறந்தான். இவனுக்குப் பின் வந்த அரசர்கள் அத் துணை வீரர்களல்லர். எனவே சோழர் ஆட்சி எட்டாம் நூற்ருண்டிலிருந்து மறுபடியும் மலர்ச்சியுறத் தொடங்கி யது. ஒன்பதாம் நூற்ருண்டின் கடைசியில் பட்டஞ் சூட்டப்பெற்ற நிருபதுங்கவர்மன் என்னும் பல்லவனை யும் அவனுக்குத் துணைபுரிந்து வந்த அவன் கீழ் சிற்றரசனுன முதல் பிருதிவிபதி என்பவனையும் சோழர்கள் போர் முடித்து வென்ருர்கள். விஜயால யன் மகன் ஆதித்தன் காலத்தில் இச்சம்பவம் நடந்த தென ஆராய்ச்சியாளர் கூறுகிருர்கள். இதுமுதல் படிப் படியாக பதின்மூன்ரும் நூற்ருண்டுவரை அதாவது விஜயாலயன் காலமுதல் மூன்ரும் குலோத்துங்கன் காலம் வரையிலும் சோழர் ஆட்சி உன்னத நிலையிலிருந்தது.

விஜயாலயன் கி. பி. 846—881. இவனைக் குமராங்குசன் என்ற சோழ அரசனுக்குப் புதல்வன் என்று கூறுவர். ஆனல் இதனை ஒருதலையாக அறுதியிட்டுரைக்கும் சான்றுகள் கிடைத்திலவெனினும் பல கல்வெட்டுகளின் வாயிலாக இவன் கடைச் சங்க காலத்தில் விளங்கிய பெருநற்கிள்ளி, கரிகாலன், செங்கணன் என்னும் அரசர்களின் வழித் தோன்றியவன் என்று அறுதியிட்டுக் கூறப்படுகிறது. பல்லாண்டுகளாக தாழ்ந்த நிலையில் புகழ் குறைந்திருந்த சோழ நாட்டை மீண்டும் நிறுவி அதனை உயர் நிலைக்கு அடிக்கோலியவன் இவ் விஜயால யனே. இவன் 'பரகேசரி' என்ற பட்டத்தைத் தரித்த வன். இவ்வரசன் முதலில் தஞ்சையைப் பிடித்து அதைத் தலைநகரமாக்கி அரசை நிலைநாட்டினன். அங்கே துர்க்காதேவிக்கு ஓர் கோவில் கட்டுவித்தான்.

இவன் சுமார் முப்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்து சோணுட்டை வளமையுறச் செய்தான். பல போர்கள் முடித்து நாட்டின் அளவை மிகுதிப் படுத்திஞன். இவன்காலத்திற்ருன் நிருபதுங்க பல்லவனுக்கும் சோழ பாண்டியர்களுக்கும், அரைச்சூர், வேம்பில் முதலிய இடங்களில் போர் நடந்ததில் சோழர் சுவாதீனமடைந்தனர். கி. பி. 881-ம் ஆண்டில் வெற்றிக் கொடி நாட்டிச் சோழ நாட்டுக்கு அடிகோலிய விஜயாலயன் விண்ணுலகடைந்தான். இவனுக்குப்பின் இவன் மகன் ஆதித்தன் ஆட்சிபுரியலாஞன். விஜயாலயன் தான் இறப்பதற்குப் பத்து வருடங்களுக்கு முன்னரே கி. பி. 871ல் தன் புதல்வனுக்கு இளவரசுப் பட்டங்கட்டி அரசியலில் ஈடு படும்படி செய்திருந்தான்.

முதல் ஆதித்த சோழன்:- கி. பி. 781-907 ஆதித்த சோழன் தன் தந்தை விஜயாலய சோழன் இறந்தவுடன் நாட்டை ஆளத் தொடங்கிஞன். இவன் பல்லவ அரசஞகிய அபராஜிதவர்மனை வென்று தொண்டை நாட்டைச் சோழநாட்டுடன் சேர்த்துக்கொண்டான். பின்னர் கொங்கு நாட்டின்மீது படையெடுத்துச் சென்று அதனையுங் கைப்பற்றிக் கொண்டான். நம்பியாண்டார் நம்பி தானியற்றிய திருத்தொண்ட திருவந்தாதியில் "சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பல முகடு கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்" என்று பாடியிருக்கிருர். இதஞல் கொங்கு நாட்டை வென்று அங்கிருந்து கொண்டு வந்த பொன்ஞல் தில்லைச் சிற்றம்பல முகட்டைப் பொன்வேய்ந்தானென்று தெரிகிறது. இவ்வரசன் காவிரி ஆற்றினிருமருங்கிலும் பல சிவாலயங்களைக் கற்றளிகளாக எடுப்பித்தான்.

போர் நிகழ்ச்சிகளெல்லாம் ஒருவாறு முடித்து நாட்டை விரிவடையச் செய்தபின் சமயத்தொண்டு செய்ய

ஆரம்பித்தான். இவன் கட்டிய கோவிலில் திருப்புறம் பயத்திலுள்ள கோயிலே முதன்மை வாய்ந்தது. அக்கோ யிலுக்கு "ஆதித்தேச்சுரம்" என்ற பெயரும் வழங்கப் பெற்று வந்தது. இவன் சைவசமயத்தில் பற்றுள்ளவன்.

இவனுக்கு இளங்கோப்பிச்சு, திரிபுவன மாதேவி; என இரு மனைவியர் இருந்தனர். இவர்களில் இளங்கோப் பிச்சு என்பாள் திருமழபாடியில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானுக்கு ஒரு நந்தா விளக்கு வைத்து, பத்துக் கழஞ்சுப் பொன்னும் அளித்துள்ளாள். இவ்வரசனுக்கு பராந்தகன், கன்னரதேவன் என்ற இரு புதல்வர்களிருந் தார்கள். அவர்களில் பராந்தகனே ஆதித்த சோழனுக்குப் பின் முடிசூடினன். 907ல் ஆதித்தன் இறக்கவே பராந் தகன் ஆட்சிபுரியத் தொடங்கினன்.

முதற் பராந்தகன்: கி. பி. 907-953 ஆதித்தன் மகனுகிய பராந்தகன் கி. பி. 907ல் முடிசூட்டப் பெற்றுன். இவ னுக்கு "வீரநாராயணன்" என்ருேர் பெயருமுண்டு. இவனது ஆட்சியில் வடக்கேயுள்ள திருக்காளத்திவரை யில் தொண்டை நாடு சோணுட்டோடு சேர்ந்திருந்தது.

இவன் சிறந்த வீரன். தன்னுட்டை விரிவடையச் செய்து நல்ல முறையில் ஆளவேண்டும் என்ற விருப்பு டையவன். அவ்வாறு செய்யப் பல வசதிகளும் இவனுக்கு அமைந்திருந்தன. இவன் நாற்பத்தாறு வருடங்கள் ஆட்சிபுரிந்து வந்தான். சில கல்வெட்டுக் களிலிருந்து சோணுட்டை ஈடும் இணையுமற்ற சீரிய நிலைமைக்குக் கொண்டு வந்தானென்று தெரிகிறது. இவ்வரசன் இரா மனைப்போல் இலங்கையைப் பிடித்த காரணத்தால் "சங்கி ராம ராகவன்" என்னும் காரணப் பெயரும் பூண்டான். பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்து இராஜஸிம்ம பாண்டிய அரசனையும் போரில் வென்ருன். இதனுல்

"மதுரையும், ஈழமுங்கொண்ட கோப்பரகேசரி" என்றும் அழைக்கப்பட்டான். பின்னர் இவன் வாணர்கள்மேல் படையெடுத்தான். வாணர்கள் என்பார் பாலாற்றுக்கு வடக்கே சித்தூர் ஜில்லாவரையிலுமுள்ள நிலப்பரப்பை (அதாவது வடஆற்காடு, தென்னாற்காடு ஜில்லாவாகும்) ஆண்டு வந்தவர்கள். இவர்கள் வாணகப்பாடி என்ற நகர்த்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர். அவர்கள்மாபலியின் வழியிற்றோன்றியவர்களெனக் கல் வெட்டுக்களால் அறிகிறோம். தொண்டை நாடு பல்லவராள்கைக்குள்பட்டிருந்த காலையில் அவர்களுக்கு இம் மன்னர்கள் திறைகொடுத்து, சிற்றரசர்களாக வாழ்ந்து வந்தனர். முதல் ஆதித்த சோழவரசன் தொண்டை நாட்டைக்கைப்பற்றியபோது வாணர்கள் உரிமையெய்தி; தனியரசு புரிந்து வந்தனர். எனவே பராந்தகவரசன் இவர்களை வென்று அவர்கள் நாட்டைத் தன்னாட்டுடன் சேர்த்துக் கொண்டான். வாணர்குல வேந்தனாகிய இரண்டாம் விசயாதித்தனும் போரில் இறந்தான். இங்ஙனமாக, பராந்தகன் தன் நாட்டை உயர்நிலைக்குக் கொண்டுவந்து தனது வீரமும், ஆணையும் எங்கும் பரவ ஆண்டுவந்தான்.

இவ்வரசன் சிறந்த சிவபக்தன். தில்லைச் சிற்றம் பலத்தைப் பொன்வேய்ந்து அதனைப் பொன்னம்பல மாக்கினான். திருவிடை மருதூர், திருவாவடுதுறை, திருச்செந்துறை முதலிய ஊர்களிலுள்ள சிவன்கோவில்களைக் கற்றளிகளாகச் செய்தான். ஏமகர்ப்பகம், துலாபாரம் முதலான பலதானங்களைச் செய்தான்.

இவ்வரசனுக்கு வேறு சில பெயர்களும் வழங்கி வந்தன. அவை வீரசோழன், பண்டிதவத்சலன், குஞ்சர மல்லன், இருமடிசோழன் என்பன. இதில் வீரசோழன் என்னும் பெயர் இராஷ்டரகூட மன்னனாகிய கிருஷ்ண

தேவனைப் போரில் வென்றபின் ஏற்பட்ட பெயராகும். புலவர்களை அன்புடன் ஆதரித்து வந்ததால் பண்டித வத்சலன் என்னும் பெயர் வழங்கலாயிற்று. மற்போரில் களிறுபோல் வலிமிக்கவனைப் போர்புரிதல் பற்றிக் குஞ்சர மல்லன் என்று பெயர் உண்டாயிற்று. பாண்டிய நாட்டை வென்ற காரணம் பற்றி இருமடிசோழன் எனவழங்கப் பெற்றான்.

பராந்தகன் மக்கள் இராசாதித்தன்,கண்டராதித்தன், அரிஞ்சயன், உத்தமசிலி (ஆதித்தன்) என்பவர்கள். இராசாதித்தன் இராஷ்டிரகூடப் போரில் போர் செய்து வெற்றியுடன் திரும்புகையில் தக்கோலத்தில் உயிர் துறந் தான். இச்செய்தி நிகழ்ந்தது பராந்தகனது ஆட்சியின் இறுதிக்காலமாகும். தன்முதல்மகனும் பெரு வீரனுமாகிய இராசாதித்தன்இறந்தமையால்,பராந்தகன் தனதுவயோ திககாலத்தில் மிக மனம் வருந்தினான். எனினும் தன் நாட்டை அமைதியுடன் அரசுபுரிய வேண்டுமென்ற கருத்தினனாய்த் தன் இரண்டாம் புதல்வனாகிய கண்டரா தித்த சோழனுக்கு கி–பி. 950-ம் வருடம் இளவரசாக முடிசூட்டி அரசாங்கப் பணிகளில் ஈடுபடச் செய்தான். இவன் நாற்பத்தாறு ஆண்டுகள் தன் ஆட்சியைச் சரிவர நடத்திக் காலஞ் சென்றான்.

கண்டராதித்த சோழன் கி. பி. 950—957. இராஷ்டரகூட அரசன் மூன்றாங் கிருஷ்ணதேவன், இவன் தந்தையின் இறுதி காலத்தில் தொண்டை நாட்டையும் திருமுனைப் பாடி நாட்டையுங் கவர்ந்து கொண்டான். இதனால் இவ்வரசன் சோழநாட்டை மட்டும் ஆட்சிபுரிந்தான். மேலும் பாண்டிய நாட்டில் சோழருக்குத் திறை செலுத்தி சிற்றரசனாய் வாழ்ந்து வந்த வீரபாண்டியனும் இவனது ஆட்சியில் தனியரசு புரியத் தொடங்கினான். எனவே இவனது தந்தையின் காலத்தில் இவர்கள் கீழிருந்த

பாண்டிய நாடும் இவன் காலத்தில் இல்லாமற் போயிற்று. எஞ்சியிருந்த சோணாட்டை மட்டும் இவ்வரசன் ஆண்டான். என்றாலும் பாண்டிய நாட்டை மறுபடியுங் கைப் பற்ற எண்ணினான். ஆனால் அவ்வெண்ணம் நிறைவேற வில்லை.

இவன் தன் ஆட்சியில் காவிரியாற்றுக்கு வடக்கே கண்டராதித்தச்சதுர்வேதிமங்கலம் என்ற ஓர் ஊரை அமைத்தான். இப்போது அந்நாட்டைக் கண்டிநாடு என்று வழங்குகின்றனர். "கண்டராதித்தப்பேரேரி' ஒன்று இவன் காலத்தில் வெட்டியிருக்கிறான்.

இவ்வரசன் சிறந்த புலமை வாய்ந்தவன். தில்லையம் பதியில் எழுந்தருளிய சிவபெருமான் மீது இவன் பாடிய திருப்பதிகம் ஒன்று சைவத் திருமுறைகளுள் சேர்க்கப் பட்டுள்ளது. அது ஒன்பதாம் திருமுறையாக அமைக்கப் பட்டிருக்கிறது. அப்பதிகத்தில், காப்புப்பாடலில் இவ் வரசன் தன்னைக் "கோழி வேந்தன்" எனவும்,"தஞ்சையர் கோன்" எனவும் பாடியிருக்கிறான். இதனால் இவன் சைவப் பற்றுள்ளவன் என அறிகிறோம். இவ்வரசனுக்கு மும்முடிச் சோழன் என்ற வேறொரு பெயரும் உண்டு. இப்பெயர் ஏற்பட்ட காரணம் என்னவெனச் சரிவரத் தெரியவில்லை.

கண்டராதித்தவரசனுக்கு பலநாளாக மகப்பேறின்றி முடிவில் செம்பியன்மாதேவிபால் ஒரு புதல்வன் பிறந் தான். அவனுக்கு "மதுராந்தகன்" எனப் பெயரிட்டு வழங்கினான். உத்தம சோழன் எனவும் அழைத்தார்கள். தன் புதல்வன் குழந்தையாயிருந்தமையால் தன் தம்பி அரிஞ்சயனுக்கு கி. பி. 954-ல் இளவரசுப்பட்டம் சூட்டி னான். கி. பி. 957-ல் கண்டராதித்தன் இறந்தான்.

செம்பியன்மாதேவி தன் புதல்வன்பாலுள்ள அன் பின் காரணமாக உயிருடன் வாழ்ந்து மதுராந்தகனைக்

காப்பாற்றி வந்தாள். கோனேரிராசபுரம் என்று வழங்கும் திருநல்லம் என்னும் பதியில் சிவபெருமானுக்கு அவ்வம்மை தன் கணவன் பெயரால் 'கண்டராதித்தம்'' என்னும் கற்றளி அமைத்தாள். அதில் கண்டராதித்தன் இறைவனை வணங்குவதுபோல் ஒரு படிமம் வைத்திருக்கிறது.

அரிஞ்சய சோழன்: கி. பி 956—957. இவனை அரிந்தமன் என்றும் அரிகுலகேசரி என்றும் வழங்கி வந்தார்கள். இவன் தனது தந்தையின் இறுதி காலத்தில் ராஷ்டரகூட அரசன் மூன்றும் கிருஷ்ணதேவன் எடுத்துக்கொண்ட தொண்டை நாட்டைக் கைப்பற்ற வேண்டிய முயற்சிகளைச் செய்ய ஆரம்பித்தான். அப்பொழுது தொண்டை நாட்டை மூன்றுங் கிருஷ்ணதேவன் பிரதிநிதியாக வைதும்பராய அரசன் ஆட்சிபுரிந்து வந்தான். தொண்டை நாட்டைக் கைப்பற்ற இவ்வரசன் ஒரு பெரும் படையுடன் புறப்பட்டான். ஆனல் ஆற்றூர் என்னும் நகரில் இவன் இறந்தான். இவன் போரில் உயிர் துறந்தானு இயற்கையாகவே இறந்தானு என்பது சரிவரப் புலப்படவில்லை. இவ்வரசனுக்குப் பின் இவன் மகன் பராந்தகன் ஆண்டுவந்தான். இவன் அவனது மனைவியரில் கல்யாணி என்ற அரசியின்பாற் பிறந்தவன்.

இரண்டாம் பராந்தகனுகிய சுந்தரசோழன்: கி. பி. 957—970. அரிஞ்சயனுக்குப்பின் அவன் மகன் இரண்டாம் பராந்தக சோழன் கி. பி. 957-ல் அரசு கட்டிலேறினன். இவனது இயற்பெயர் பராந்தகன். ஆனல் இவன் பேரழகுடையவனயிருந்தமையால் சுந்தரசோழன் என்ற பெயரைப் பின்னர் அடைந்தான். இவ்வரசன் பாண்டிய நாட்டின் மேல் படை யெடுத்து வெற்றியுடன் திரும்பினன். பாண்டிய மன்னன் புறங்காட்டி ஓடி ஒளித்துக் கொண்

டனன். இது பற்றியே இவன் "பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமான்" என வழங்கப் பெற்றனன். பாண்டிய அரசனுக்கு உதவிபுரிந்தசிங்களநாட்டு அரசன் மீதும் படையெடுத்துப் போர் செய்தான். ஆனால் சுந்தர சோழன் வெற்றிபெறவில்லை. சிங்கள அரசனோடு உடன் படிக்கை செய்துகொண்டு நட்புரிமை பெற்றனன் என இலங்கைச் சரிதமாகிய மகாவம்சம் கூறுகின்றது.

ஓடி ஒளித்த வீரபாண்டியன் மீண்டும் மதுரை வந்து ஆளத்தொடங்கினன். சுந்தரசோழன் மறுபடியும் பாண்டிய நாட்டுடன் போர் புரியத் தொடங்கினான். இவன் மகன் ஆதித்தகரிகாலன் இளைஞனாயிருந்த போதிலும் வீரத்துடன் போர் செய்து வீரபாண்டியனைக் கொன்று வாகைசூடினான். பின்னர் தன் தந்தையைப் போல் வடக்கேயுள்ள திருமுனைப்பாடி நாட்டையும், தொண்டை நாட்டையும் வெல்லக் கருதி போர் செய்து வெற்றியடைந்தான்.

கி. பி. 966-ல் சுந்தரசோழன் தன் மகன் ஆதித்த கரிகாலனுக்கு முடிசூட்டினான். ஆனால் அவன் அதிக நாட்கள் செல்லுமுன்னே 969-ல் இறந்தான். இச்செய்தி சுந்தரசோழனை ஆற்றொணாத் துன்பத்தில் ஆழ்ந்து வருந்தச் செய்தது. அந்த வருடத்திலேயே காஞ்சிமா நகரிலிருந்த பொன்மாளிகையில் சுந்தரசோழன் உயிர் துறந்தான்.

இவன் மனைவியருள் வானவன்மாதேவி என்பாள் தன் கணவனிடம் அளவற்ற அன்புடையவள். அவனது பிரிவுக்காற்றாமல் தானும் உடன்கட்டை ஏறி ஒருங்கே இறந்தாள். இவ்வரசி தனது இளங் குழந்தையைவிட்டு கணவனோடு உடன்கட்டை ஏறிய செய்தியை "சுரந்த முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணுந்—தலைமகற்

பிரியாத் தையல்'' என்ற அடிகளால் அறிகிறேம். இவனுடையதும், இவன் பத்தினியுடையதுமான படிமங்களைச் சமைத்து, தஞ்சாவூரில் இராசராசேச்சுரம் என்னும் பெரிய கோயிலில் இவர்களது மகள் குந்தவையால் எழுந்தருளிவித்து, அவற்றிற்கு பூசை நைவேத்தியங்கள் நடக்குமாறு பெரும் பொருள் வழங்கியுள்ளமை கல்வெட்டுக்களால் அறிகிறேம். மேலும் அப்பிராட்டியார் தஞ்சையம்பதியில் தன் தந்தை பெயரால் 'சுந்தர சோழ விண்ணகர ஆதுரசாலை' என்ற மருத்துவ நிலையம் ஒன்று நிறுவி அதனை நடத்திவர மருத்துவக் காணியாக நிலமும் அளித்துள்ளனள்.

இவனது ஆளுகையில் நாடு துன்பமறியாமல் குடிமக்கள் சிவபெருமானை வணங்கி வந்தார்கள். இவன் புத்த மதத்தையும் ஆதரித்துவந்தான். இதனுல் இவன் பிற சமயங்களை வெறுத்தானில்லை என்பது புலனுகிறது.

உத்தமசோழன் (மதுராந்தகன்); கி. பி. 970—985. இவ்வரசன் கண்டராதித்த சோழனுடைய புதல்வன். தந்தை இறந்தபோது குழந்தையா யிருந்ததால் முடி சூட்டப்படவில்லை. தன் தந்தையின் தம்பியான அரிஞ்சயனும் அவன் புதல்வன் சுந்தர சோழனும் சோழநாட்டை ஆண்டு வந்தனர். சுந்தர சோழன் இறக்கவே உத்தம சோழன் ஆட்சி புரியத் தொடங்கினுன். நாட்டிலிருந்த பொதுமக்கள் சுந்தர சோழனின் மகன் முதல் இராச ராச சோழன் முடிசூடி நாட்டை ஆளவேண்டுமெனப் பெரிதும் விரும்பினர். அவர்கள் அவ்வாறு விரும்பியும் இராச ராச சோழன் தன் பெரிய பாட்டன் புதல்வனும் தனக்குச் சிறிய தந்தையுமாகிய உத்தம சோழனது உரிமையைக் கூறி அவனையே ஆளும்படிச் செய்தான். இதனுல் இராச ராச சோழனின் நியாயவுணர்ச்சியும் அறம் வழுவாக் கொள்கையும் புலப்படுகிறது.

உத்தமசோழன் காலத்தில் நாடு ஒருவித இன்னலு மின்றி மிக்க அமைதியாகச் சிறப்பாகவிருந்தது. இவனது காலத்திலுள்ள கல் வெட்டுக்களால் அரசனும் இவன் தேவிமார்களும், அரசியல் அதிகாரிகளும் அறம் பல புரிந் தனரென அறியப்படுகிறது. அக்காலத்து ஆட்சிமுறை, மக்கள் நிலை, பழக்க வழக்கவொழுக்கங்கள் முதலியவற் றையும் அறியலாம். நாட்டில் யாங்கணும் அமைதி நிலவ ஆண்டுவந்த உத்தம சோழன் கி. பி. 985-ம் ஆண்டில் இறந்தான். இவனுக்குப் பின் சுந்தரசோழன் புதல்வ னாகிய முதல் இராசராசசோழன் முடிசூட்டப் பெற் றனன்.

முதல் இராசராசசோழன்; கி. பி. 985—1014. இவன் பட்டம்பெற பல இடையூறுகளிருந்தாலும் அவைகளை வென்று 985-ல் முடிசூட்டி ஆட்சிசெய்தான். சிலகால மாகப் பின்னேக்கடைந்த சோணுடு இவன் காலத்தில் உன்னத நிலைக்குக் கொண்டுவரப்பெற்று, மறுபடியும் வளர்ச்சியடைந்தது. சோழவரசர்களின் ஆற்றலே அந் நாடு மறுபடியும் வளர்ந்து மேன்மையுறக் காரணமாக இருந்தது. அவ்வாறு ஆற்றல்படைத்த அரசர்களில் இவ்வரசனும் ஒருவன். இவனுடைய பெற்றோர் இவ னுக்கு இட்டு வழங்கிய பெயர் 'அருண்மொழி வர்மன்' என்பது.

இவ்வரசன் காந்தளூர்ச் சாலையில் சேரரைவென்று வாகை சூடினன். இதனல் 'காந்தளூர்ச் சாலை கல மறுத்தருளிய கோ இராசகேசரி வர்மன்'' என்று இவனைக் கூறுவதாகக் கல்வெட்டு ஒன்றில் காண்கிறது. இவன் கி. பி. 986-ம் ஆண்டில் சேரனையும் அவனுக்கு உதவி புரியவந்த அமரபுஜங்க பாண்டியனையும் காந்தளூர்ப் போரில் புறமுதுகிட்டு ஓடச்செய்தான். பின்னர் கங்கை பாடி, நுளம்பபாடி, வேங்கிநாடு, குடகு, இவைகளைப்

போர் முடித்துத் தன் நாட்டோடு சேர்த்தான். ஈழத்தையும் வென்ருன். இவன் பாண்டிய சேர அரசர்களையும் மற்றும் சிற்றரசர்களையும் வென்று அரசர்களுக்கு அரசனாக வாழ்ந்ததால் இராசராசன் என்னும் பெயரும் மும்முடிச் சோழன் என்னும் பெயரும் எய்தினன்.

இவ்வரசன் சிவ பக்தன். இவனை வளர்த்தவர்கள் முதல் கண்டராதித்த சோழன் மனைவியாகிய செம்பியன் மாதேவியும், இவன் தமக்கையாகிய குந்தவைப் பிராட்டியாருமாவர். அவர்கள் சிவபக்தி, சமயப்பொறை முதலிய உயர் குணங்கள் அமையப்பெற்றவர்கள். அவர்களது அன்புரைகளைத் தினமும் கேட்டொழுகி வந்ததால் இம் மன்னன் சைவசமய வளர்ச்சியிலும், சிற்பம், ஓவியம், இசை முதலான கலை வளர்ச்சியிலும் பெரிதும் ஈடுபட்டிருந்தான்.

இவனது மனைவியர்களும் சைவ பற்றுள்ளவர்களே. அவர்களிலொருவரான திரைலோக்கியமாதேவியார் திருவையாற்றில் இப்போது உத்தர கைலாசமென்று பெயர்பெறும் லோகமாதேவீசுரம் கட்டுவித்தார். பிருஹதீசுர மெனப்பட்ட இராச ராசேசுவராலயம் இவ்வரசனுற் கட்டப்பட்டது. இதனைப்பற்றித் திருவிசைப்பாவில் ஒரு பதிகம் பாடப்பட்டிருக்கிறது.

மேலும் இராசராசன் கல்விமான்களிடத்து மிகப் பற்றுள்ளவன். இவன் காலத்தில்தான் நம்பியாண்டார் நம்பிகளும், கண்டராதித்த தேவர் முதலிய திருவிசைப் பாவுடையாரும் வாழ்ந்தனர். திருமுறை கண்ட சோழனும் இவனே. சைவப் பற்றிருந்தாலும் பிற சமயங்களை வெறுத்தவனல்ல. அது அவன் காலத்துக் கல் வெட்டுக்களாலும், ஜைன பௌத்தப் பள்ளிகளுக்கு இவ்வரசன் தன் பெயரிடச் சம்மதித்திருப்பதாலும் தெரிகிறது.

தன்னுட்சியில் நிகழ்ந்த வரலாற்றுண்மைகளை நன்கு விளக்கும் மெய்க் கீர்த்தியை இனிய தமிழ் மொழியில் அமைத்து, கல்வெட்டுக்களிற் பொறிக்கும்வழக்கம் முதன் முதல் இவ்வரசன் காலத்திற்றான் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் இவன் வழியில் வந்த அரசர்கள் இப்பழக்கத்தைப் போற்றி வருவாராயினர். இவனது ஆட்சியில் நிகழ்ந்த முக்கியமான நிகழ்ச்சிகளிலொன்று தனது நாடு முழுவதையும் அளந்தமையாம். ஒவ்வொரு மண்டலத்தையும் பல வளநாடுகளாகப் பிரித்து எங்கும் தன்னுட்சி இனிது நடைபெறச் செய்தான். நாட்டை இக்காலத்துத் தாலுக்காவிற்குச் சமமாகவும் வளநாட்டை ஜில்லாவிற்குச் சமமாகவும் மண்டலத்தை மாகாணத்திற்குச் சரியாகவும் கொள்ளலாம். நாடு நன்கு நன்மை பெறவேண்டி ஒவ்வொரு மண்டலத்திலும் சில உட்பிரிவுகளை வகுத்தான். தொண்டை நாட்டிலிருந்த இருபத்து நான்கு கோட்டங்களையும் இருபத்து நான்கு வளநாடுகளாக மாற்றினுன். இதனுல் இவன் அரசியல் நுட்பங்களை நன்ருக அறிந்தவன் என்பது தெரிகிறது.

இவனுடைய ஆளுகையில் அரசியல் விவகாரங்களைக் கவனிக்கப் பல அலுவலாளர்களிருந்தனர். அவர்கள் அறநிலையங்களைப் பாதுகாத்துக் கண்காணிப்போரும், அறங்கூறு அவையத்தாரும், பிற அரசியல் அதிகாரிகளும் ஊர்ச்சபையாருமாவர். பயிற்சி பெற்ற சிறந்த தரைப்படைகளும், கப்பற்படைகளும் மிகுதியாக இருந்ததால், அவைகளை நடத்த தகுதியும் ஆற்றலும் வாய்ந்த பல படைத் தலைவர்களும் இருந்தனர். இதனுல் இவனது ஆட்சியில் நாடு எல்லாவிதத்திலும் மேன்மையுடன் விளங்கிற்று. பிற அரசர்களால் படையெழுச்சி இவன் காலத்திலில்லை. ஆகவே மக்கள் எல்லோரும் எத்தகைய இன்னல்களுமின்றி இனிது வாழ்த்திருந்தனர்.

இவ்வரசனுக்கு மனைவியர் பலர். இவன் தான் எடுப்பித்த, தஞ்சைப் பெரிய கோவிலுக்குத் தன் தமக்கையான குந்தவைப் பிராட்டியார் அளித்தவற்றை நடு விமானத்தில் கல்லில் வரையும்படி முதலில் குறிப்பிட்டிருப்பது தனது தமக்கையிடத்தில் வைத்திருந்த பேரன்பையும், பெருமதிப்பையும் விளக்குகிறது. தன் பாட்டனாகிய அரிஞ்சயனையும், பெரிய பாட்டியாகிய செம்பியன்மாதேவியையும் நினைவு கூர்தற்கு அறிகுறியாக முறையே மேற்படி ஊரில் "அரிஞ்சயேச்சுரம்" என்ற கோவிலும், திருமுக்கூடலில் "செம்பியன்மாதேவிப் பெருமண்டபம்" என்ற மண்டபமும் கட்டுவித்திருக்கிறான். இதனால் இவன் முன்னோர்களிடங்காட்டிய அன்பும் மரியாதையும் புலனாகிறது. இவனுக்குப் பின் இராசேந்திர சோழதேவன் முடிசூட்டினான்.

இராசேந்திர சோழன் கி. பி. 1012—1044. இவன் முதல் இராசராச சோழனுக்கு அவன் கோப்பெருந்தேவியருள், வானவன்மாதேவியிடம் பிறந்த புதல்வன் ஆவன். இவன் தந்தை இவனுக்கு மதுராந்தகன் என்று பெயரிட்டிருந்தனன். இராசராச சோழன் தன் சிறிய தந்தையிடங் கொண்ட பேரன்பால் அவன் பெயரைத் தன் புதல்வனுக்கு வைத்தனன். இவன் தன் பாட்டனாகிய சுந்தரசோழனைப்போல் எழிலுடன் இருந்தான் கி. பி. 1012-ஆம் ஆண்டில் இவனுக்கு முடிசூட்டு விழா நடக்கும்போது இராசேந்திரன் என்ற அபிஷேகப் பெயர் வழங்கப்பட்டது. இவன் தன் ஆட்சிக் காலம் முழுமையும் அப்பெயருடன் விளங்கினான். கி. பி. 1014-ல் இராசராசன் இறந்தவுடன் இவன் சோழநாட்டிற்குச் சக்கரவர்த்தியானான்.

இவனும் தன் தந்தையைப்போல பல நாடுகளை வெல்ல முயன்றான். முதலில் இடைதுறை நாட்டையும்,

வனவாசியையும் கைப்பற்றினான். பின்னர் கோசலை நாடு, இலாடதேசம், வங்காளம் இவைகளை வென்றதாகவும், மகிபாலன் என்பவன் தலையில் கங்காதீர்த்தம் நிரப்பிய குடமொன்றை ஏற்றித் தன் தலைநகருக்குக் கொண்டுவந்ததாகவும் அவன் மெய்க் கீர்த்தி ஒன்று கூறுகிறது.

இவ்வரசன் கங்கையைக் கொண்டுவந்தமையால், அது பற்றிப் புரிந்த வீரச் செயல்களும் அறச் செயல்களும் மிகப் பாராட்டத்தக்கன. இதனால் நம் இராசேந்திரன் கங்கைகொண்ட சோழன் என்னும் சிறப்புப் பெயர் எய்தினன். இவனது வடநாட்டுப் போரின் பயனாகத் தமிழர் நாகரிகம் வங்காள மாகாணத்தில் புகுந்ததென்று சிறிதும் ஐயமின்றிக் கூறலாம்.

இவ்வரசனது ஆட்சியில் இவன் கப்பற்படைகளைக் கடல் நடுவில் செலுத்திக் கடாரங்கொண்டான் என்று சில கல் வெட்டுக்களாலறிகிறோம். எத்தனையோ போர்கள் நடத்தி, வெற்றி பெற்றுள்ளானெனினும் இவன் கங்கையும் கடாரமுங்கொண்டமைதான் அக் காலத்து மக்கள் மனத்திலும், புலவர்கள் உள்ளத்திலும் ஒன்றாகப் பிணித்துள்ளன. ஆசிரியர் ஜெயங்கொண்டார், தம் கலிங்கத்துப் பரணியில்,

> "களிறு கங்கைநீ ருண்ண, மண்ணையில்
> காய்சி னத்தொடே கலவு செம்பியன்
> குளிறு தெண்டிரைக் குரைகடாரமுங்
> கொண்டு மண்டலங் குடையுள் வைத்ததும்"

எனப் பாராட்டி யிருக்கிறார். இவன் கங்கைகொண்ட சோழபுரம் என்று ஒரு நகரங்கட்டி அதில் கங்கை கொண்ட சோழீச்சுரமென்னும் ஒரு சிறந்த ஆலயமுங் கட்டினான். இதனைப்பற்றிக் கருவூர்த் தேவரால் அவர் திருவிசைப் பாவில் பாடப் பட்டிருக்கிறது.

தன் தலைநகராகிய கங்கைகொண்ட சோழபுரத்திற்கு அருகாமையில் பெரியதோர் ஏரியை வெட்டினுன். இதனுல் மக்களுக்குத் தண்ணீர்க் குறை நீங்கிற்று.

இவ்வரசன் தன் தந்தையைப் போல சிவபக்தன் சைவாசாரியராக இவனுக்கு இருந்தவர் சர்வ சிவ பண்டிதராவர். காளாமுகத்தைச் சார்ந்த லகுளீச பண்டிதரும் இவனுல் ஆதரிக்கப்பட்டவர். சைவப் பற்றுடையவனுயினும் புற சமயத்தை வெறுப்பவனல்லன். அன்றியும் மற்றச் சமயங்களை மதித்து ஆதரித்தும் வந்தவன். இவன் தந்தை காலத்தில் நாகப்பட்டினத்தில் கடாரத்து அரசனுல் எடுப்பிக்கப்பெற்ற புத்த கோவிலுக்கு பள்ளிச் சந்தமாக அளித்த ஆனைமங்கலம் என்னும் ஊர் இவனது ஆட்சிக் காலத்திற்ருன் சாசனம் மூலமாக வழங்கப்பட்டது.

இவனுக்கு மனைவியரும் மக்களும் பலர். ஆனுல் இவனுக்குப் பின் அரசுகட்டில் ஏறியவன் முதல் இராசாதிராச சோழன் ஆவன்.

இராசேந்திர சோழன் ஆட்சிக் காலத்தில் சோணுடு என்றும் காணமுடியாத மிக உன்னத நிலையை அடைந்திருந்ததெனக் கூறலாம். உயர் நிலைக்குக் கொணர்ந்து பெருவாழ்வு வாழ்ந்து புகழுடன் திகழ்ந்த இவ்வரசன் முப்பத்துமூன்று ஆண்டுகள் ஆட்சிசெய்து கி. பி. 1044-ம் ஆண்டில் ஆண்டவனுடன் ஐக்கியமானுன். இவனது மனைவியருள் வீரமாதேவி உடனுயிர் துறந்தாள்.

இராசாதிராச சோழன். கி. பி. 1018—1054. இவன் தன் தந்தையைப்போல் பிறவியிலேயே வீரம் படைத்தவன். தந்தையின் ஆட்சி காலத்திலேயே இளவரசனுயிருந்து அரசியல் துறையில் பயிற்சி பெற்றவன். இவனும் தன் பாட்டனைப்போல

காந்தளூர்ச் சாலையில் கலமறுத்ததாகத் தெரிகிறது குந்தளரை அடக்கி அவர்கள் அரசனாகிய ஆஹவ மல்லனையும், அவன் மகன் விக்கியையும், விஜயாதித்தனையும் தோற்கடித்துக் கொள்ளிப்பாக்கை என்னுமிடத்தில் தீயிட்டுக் கொளுத்தினான். இச்சண்டைகளுக்கு இவன் தம்பியான ராஜேந்திர தேவனென்பவன் மிக்க உதவியாக் இருந்தான். இவன் சாளுக்கியருடன் மூன்று முறை போர் நடத்தினான். ஒவ்வொரு போரிலும் வெற்றியே பெற்றான். ஆனால் மூன்றும் முறை நடத்திய போர் குந்தள நாட்டின் மேல் படையெடுத்ததாகும். கிருஷ்ண நதிக்கரையிலுள்ள பூண்டூரில் மேலைச் சாளுக்கியரோடு பெரும் போர் செய்து தெலுங்க விச்சையன் முதலான சாளுக்கியத் தலைவர்களை வென்று சிறை பிடித்தான். அந்நகரின் மதில்களையும் இடித்து, மாளிகைகளிலும் தீயூட்டி வேங்கை வடிவம் பொறிக்கப் பெற்ற வெற்றித் தூணை அந் நகரில் நாட்டினான், சாளுக்கிய வராகக்குன்றில் வராக முத்திரையை அகற்றி புலி முத்திரையைப் பொறித்து வெற்றித் தூணும் நிறுவினான். அவர்களது தலைநகராகிய கலியாணபுரத்தைக் கைப்பற்றி அரண்மனையை இடித்து, வெற்றிக்கு அடையாளமாக வீராபிடேகஞ் செய்துகொண்டு விஜய ராசேந்திரன் என்னும் பட்டமும் அணிந்து கொண்டான். கடைசியாக சாளுக்கியருடன் கொப்பத்தில் போர்புரியும் போது, போர்க்களத்து யானைமீதிருந்து உயிர் துறந்தான் என்பது "கலியாணபுரமும், கொல்லாபுரமும் எறிந்து யானைமேற்றுஞ்சின உடையார் விஜயராசேந்திர தேவர்" என்று சோழவரசர்கள் கல் வெட்டுக்களிலிருந்து அறிகிறோம்.

இரண்டாம் இராசேந்திரதேவன் கி. பி. 1051—1063

இவ்வரசன் கி. பி. 1051-ஆம் வருடம் முடி புனைந்தான்.

கங்கை கொண்ட சோழன் என்று வழங்கிய முதல் இராசேந்திர சோழனுடைய இரண்டாம் புதல்வன். இவன் தன் தமையன் இராசாதிராசன் கொப்பத்துப் போரில் இறந்தவுடன் அப்போர்களத்திலேயே சோழ நாட்டுக்கு அரசனாக முடி சூட்டிக்கொண்டான். அன்று முதல் இவன் சாளுக்கியருடன் போர் செய்தான். முதலில் தோல்வி ஏற்பட்டது. பிறகு உதவிக்குக் கொஞ்சம் சேனையைத் திரட்டிக்கொண்டு மறுபடியும் போர்செய்து வெற்றி பெற்றான் இவனது ஆட்சியில் 1055-ல் ஒரு பெரிய பஞ்சம் உண்டாயிற்று. இவ்வரசனைப்பற்றி ஸ்ரீரங்கம் கோயில் வரலாற்று நூலில் கூறியிருக்கிறது. இவ்வரசன் ஸ்ரீரங்கத்தில் கோயிலில் ஒரு பிரகாரத்தைக் கட்டிவைத்தான். அதனால் அப்பிரகாரம் இராசமகேந்திரன் திருவீதி யென்னும் பெயர் பெற்றது. இவனுக்குப் பின் வீரராசேந்திரன் முடிசூடினான்.

வீரராசேந்திர சோழன் கி. பி. 1063—1070. இம்மன்னன் கங்கை கொண்ட சோழனுடைய மக்களிலொருவன். கி. பி. 1062-ல் இரண்டாம் இராசேந்திர தேவன் இறப்பதற்கு ஒரு ஆண்டிற்கு முன்னரே இவன் அரசு கட்டிலேறினான். கி. பி. 1063-ல் அவன் மரணமடையவே இவ்வரசன் சோழநாட்டிற்குச் சக்கரவர்த்தியானான். இவன் தன் தமையனைப்போல் பெரு வீரனாக இருந்தமையால் ஆட்சிகாலம் முழுவதும் போரிலேயே கழிந்தது.

மேலைச்சாளுக்கிய அரசன் விக்கிரமாதித்தனோடு கங்கபாடியில் போர் புரிந்து அவனை வென்று கங்கபாடி களத்தினின்று துங்கபத்திரையாற்றிற்கு அப்பால் துரத்தினான். வேங்கி நாட்டைக் காப்பாற்ற தான் பெரும்படையுடன் அங்கு சென்று சாமுண்டராயனுடன் போர்செய்து அவனைக் கொன்றான். ஆகவே மேலைச்சாளுக்கியர்

உறவினராகிய கீழைச் சாளுக்கியரைத் தம்மோடு சேர்த்துக்கொண்டான்.

சாளுக்கிய மன்னன் ஆஹவமல்லன் மகன் விக்கிரமாதித்தனுக்கும் இவ்வரசனுக்கும் 'கூடலம்' என்னுமிடத்தில் ஒரு போர் நடந்தது. இது மூன்ரும்முறை நடத்திய போராகும். 1064-ம் ஆண்டில் இப்போர் நடைபெற்றது. இப்போரில் பெரும்படையுடன் வந்த சாளுக்கியருடன் கடும்போர் செய்து தண்டநாயகர்களாகிய கேசவன் முதலானவர்களைக் கொன்ருன். படைத்தலைவனுகிய மதுவணனும் அரசகுமாரர்களாகிய விக்கிரமாதித்தன், சயசிங்கன் என்பவர்களும் அரசனுகிய ஆஹவமல்லனும் போர்புரிய முடியாமல் புறங்காட்டி ஓடிவிட்டனர். வீரராசேந்திரன் வெற்றியுடன் திரும்பி, தன் தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்தை யடைந்து அங்கே வெற்றி முடி சூடி விசயாபிடேகஞ் செய்துகொண்டான். இவ்வரசன் நிகழ்த்திய போரிலடைந்த வெற்றிகளுள் கூடல சங்கமத்தில் பெற்ற வெற்றியே மிகச் சிறந்தது. ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்கள் இவனது வீரத்தைப் பற்றி புகழ்ந்து கூறுமிடங்களிலெல்லாம் இவ்வெற்றியைப் பற்றிப் புகழ்ந்துரைத்துள்ளார்கள்.

இவ்வாறு பல போர்கள் புரிந்து வெற்றிக் கொடி நாட்டிய வீரராசேந்திரன் தன் நாட்டிலுள்ள குடிகட்கு எத்தகைய துன்பமுமின்றி அவர்களைக் காத்துவந்தான். இவனும் தன் முன்னோர்களைப்போல சிவபக்தன், புலவர்களிடம் அன்புள்ளவன். தமிழ்ப் புலமை வாய்ந்தவன். புத்தமித்திரன் என்பான் இவன் விரும்பியவாறு ஐந்திலக்கணங்களுமடங்கிய ஒரு நூல் எழுதி அதற்கு வீரசோழியம் என்று பெயரிட்டுள்ளான். அந்நூலில் இவ்வரசனைப் புகழ்ந்து பாடியிருக்கிறது. இதனுல் தமிழ் வளர்ச்சியிலும் ஈடுபட்டிருந்தனன் எனத் தெரிகிறது.

மேலைச்சாளுக்கிய அரசன் இறந்தபின் அவனது முதற் புதல்வன் இரண்டாம் சோமேசுவரன் அரியணை ஏறினன். அப்பொழுது வீரராசேந்திரன் படையெடுத்து முற்றுகையிட்டு அவனை நாட்டை விட்டுத் துரத்தினன். அச்சமயம் தன்னை யடைந்து வணங்கி சரணமடைந்து உதவி வேண்டிய சாளுக்கிய விக்கிரமாதித்தனுக்கு இரட்டபாடி நாட்டை வழங்கித் தன் மகளையும் மணம் புரிவித்தான். அது முதல் விக்கிரமாதித்தனும், வீர ராசேந்திரனும் உறவினற் பிணிக்கப் பெற்றனர்.

வீரராசேந்திரன், கி. பி. 1070-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் இறந்தான். இவனுக்குப்பின் முடிசூட்டப் பெற்றவன் இவன் புதல்வன் அதிராசேந்திரன். இவன் திறமையற்றவன். அதனல் நாட்டில் பல குழப்பங்கள் ஏற்பட்டது. இவ்வாறு நாடு குழப்பத்திலிருக்கும்போது இவன் நோய்வாய்ப்பட்டு இறந்தான். இவனுக்குப் புதல்வன் இல்லாமையாலும் வேறு சோழ அரசகுமாரன் ஒருவனுமின்மையாலும் முதற் குலோத்துங்க சோழன் பட்டம் பெற்ருன். இவன் தந்தை வழியில் கீழைச் சாளுக்கிய மரபையும், தாய் வழியில் சோழர் மரபையும் சேர்ந்தவனுவன்.

முதற் குலோத்துங்க சோழன் கி. பி. 1070—1120. இவ்வரசன் தாய் கங்கை கொண்ட சோழன் குமாரியாகிய அம்மங்கை தேவியார். இந்த சோழ ராசகுமாரியைக் கீழைச்சாளுக்கிய மன்னனுகிய இராசராச நரேந்திரன் மணம் செய்திருந்தான். எனவே, வேங்கி நாட்டரசன் இராசராசநரேந்திரன் புதல்வன் நம் குலோத்துங்க சோழன். இவன் சோழநாட்டில் தன் பாட்டன் அரண் மனையிற் பிறந்து அங்கேயே வளர்ந்து வந்தான். இராசேந்திர சோழனின் பட்டத்தரசி தன் பேரனைப்

பாராட்டுங்கால் ஓர் ஆண்டிற்கு முன் காலஞ்சென்ற தன் கணவனது அடையாளங்கள் அவனிடம் அமைந்திருக்கக் கண்டு, "இவன் எமக்கு அருமகனாகி எங்கள் குலத்தைத் தளராது தாங்குவானாக" என்று கூறி அக்குழந்தைக்கு இராசேந்திரன் என்று பெயரிட்டாள். ராசேந்திரனும் பல கலைகளையுங் கற்று வல்லவனாயினன். இவனது அம்மான்களாகிய ராசாதி ராச சோழன், விசய ராசேந்திர சோழன், வீர ராசேந்திர சோழன் முதலானோர் இவனிடத்து மிக்க அன்பு பாராட்டி வந்தனர். இவனது ஆற்றலை யுணர்ந்த சான்றோர் இவனை "உபய குலோத்தமன்" எனப் பாராட்டினர். இவனே வீர ராசேந்திரனுக்குப் பின்னர் குலோத்துங்கன் என்னும் பெயரோடு சோழவரசனாக முடிசூட்டப்பட்டான்.

ராசேந்திரன் தனது அம்மானிடம் சோழநாட்டில் வளர்ந்து வருங்கால் வேங்கி நாட்டில் இவனது தந்தை இறந்தான். இவன் குழந்தையாயிருந்தாலும் அமைச்சர் முதலாயினோர் இவனுக்கு முடிசூட்டுவிழா நடத்தினார்கள். ஆனால் இவன் சிறிய தந்தையாகிய விசயாதித்தன் வேங்கிநாட்டை, தான் ஆட்சிபுரிய வேண்டுமென்று பெருவிருப்புடையவனாக இருந்தமையால் இவன் இளவரசுப்பட்டம் பெற்றிருந்தும், அவனே (விசயாதித்தன்) ஆட்சிபுரிந்துவந்தான். இவனது மாமன் இரண்டாம் ராசேந்திரனும் அப்பொழுது ஒன்றும் செய்ய இயலவில்லை. எனவே வேங்கிநாடு விசயாதித்தன் ஆட்சிக் குள்ளாயிற்று. இராசேந்திரனும் அவன் இறந்த பின்னர் அந்நாட்டைப் பெற்று தான் ஆளலாமென்று அமைதியுடனிருந்து விட்டான்.

அப்பொழுது அரசகுமாரனாகிய இராசேந்திரன் தன் மாமன் வீரராசேந்திரனுக்கு மேலைச்சாளுக்கியரோடும்

பிறவேந்தர்களோடும் நடத்திய போர்களில் உதவிபுரிந்து வந்தான். வீரராசேந்திரன் வேங்கிநாட்டிலுள்ள விசய வாடையில் மேலைச்சாளுக்கியரோடு நடத்திய போரிலும் நம் இராசேந்திரனும் கலந்திருந்தான். இவ்விதமாகப் பல போர்கள் செய்து வரும்போது இவன் வடபுலஞ் சென்று போர் புரிந்துகொண்டிருந்தான். அப்பொழுது வீர ராசேந்திர சோழன் உயிர் துறந்தான். அதனால் சோழ நாடு அரசனில்லாதிருந்தது. இதனையறிந்த மேலைச் சாளுக்கிய மன்னனான விக்கிரமாதித்தன் (இவன் வீர ராசேந்திரன் மகளை மணந்தவன்) இராசேந்திரன் சோழ நாட்டை அடைவானாயின் தன் பகைவனாகிய இராசேந் திரன் தன்னிலும் பெருவலிபடைத்தவனாகிவிடுவா னென்று கருதினான். உடனே சோழநாடு வந்து தன் மைத்துனனும் வீரராசேந்திரன் மகனுமான அதிராசேந் திரனுக்கு முடிசூட்டினான். இவன் முடிசூட்டிச் சில நாட் களில் நோய்வாய்ப்பட்டு இறந்தான். நாடு உட்நாட்டுக் குழப்பத்தால் அல்லோலப்பட்டது.

இதனை வடபுலத்தில் போர் புரிந்து கொண்டிருந்த ராசேந்திரன் அறிந்தான். உடனே விரைந்து சோணாடு வந்து உட்நாட்டுக் குழப்பத்தை அடக்கி அந்நாட்டிற்கு அதிபதியாகி முடிபுனைந்து கொண்டான். நாட்டில் அமைதி நிலவிற்று. சிற்றரசர்களும் பணிந்தனர். அது முதல் குலோத்துங்கன் என்னும் பெயரால் சோழ நாட்டை ராசேந்திரன் ஆண்டுவந்தான். அங்கிருந்த அமைச்சர், படைத்தலைவர் முதலான அரசியலதிகாரிகள் எல்லோரும் இவ்வரச குமாரன் தக்க சமயத்தில் வந்த மைக்குப் பெரிதும் மகிழ்ந்து கங்கைகொண்டசோழ னுடைய மகள்வயிற்றுப் பேரன் என்னும் உரிமையும் ஏற்றுக்கொண்டு சோணாட்டு ஆட்சியை இவனுக்கே அளிப்பதெனை உறுதி செய்தனர்.

குலோத்துங்கன் தன்னுலியன்றவரை நாட்டு மக்களுக்கு நலம் புரிவதையே தன் கொள்கையாகக்கொண்டு ஆண்டுவந்தான்.

இவ்வரசன் முதல் முதல் விக்ரமாதித்தனேடு துங்கபத்திரையாற்றங்கரையில் போர் நிகழ்த்தினுன். பின்னர் வனவாசி, கலியாணபுரம் இவைகளை வென்ருன். பாண்டியனுடன் எதிர்த்து, கன்னியாகுமரி, கோட்டாறு இவ்விடங்களையும் தன் ஞட்டுடன் சேர்த்தான். சேரர்கள் கலங்களைக் காந்தளூர்ச் சாலையில் இரண்டு தடவை யறுத்துத் திருப்பினுன். தென்கலிங்கப் போர், வடகலிங்கப் போர் முதலியன இவன் வெற்றியை எடுத்துக் காட்டுகின்றன. இவன் காலத்து நிகழ்ந்த போர்களில் ஒன றிரண்டு நீங்கலாக எஞ்சியன வெல்லாம் இவனது ஆட்சியின் பதினுன்காம் ஆண்டிற்குமுன்னரே முடிவெய்தின.

போர்கள் முடிவுற்ற பின்னர், கி. பி. 1084-ல் இவன் சக்கரவர்த்தி என்னும் பட்டம் பெற்ருன். 1090-ல் திரிபுவன சக்கரவர்த்தி என்ற பட்டமும் புனைந்தான். இப்பட்டம் பெற்ற சோழமன்னருள் இவனே முதல்வன் ஆவான்.

இவனுக்கு விஷ்ணுவர்த்தகன், குலோத்துங்கன், அநபாயன், அபயன், விசயதரன், சயதுங்கன், கரிகாலன், உலகுய்யவந்தான் எனப் பல பெயர்கள் உள்ளன.

இவ்வரசன் நாட்டிற்குப் பல நன்மைகளைச் செய்தான். முதல் முதல் சுங்கங்களைத் தவிர்த்தான். இதனுல் இவனைச் "சுங்கந்தவிர்த்த சோழன்" எனக்கொண்டாடினர். புலவர்கள் "தவிராத சுங்கந்தவிர்த்தோன்" எனப் பாடல்களைப் புனைந்தனர். இரண்டாவதாக நாடு முழுவதும் புதிதாக அளப்பித்து ஆறிலொரு கடமையாக

வரியேற்படுத்தினான். நிலவரி தவிர மற்றப்படி வரிகள் கிடையா.

இவன் தன் நாட்டில் உழவுத் தொழில் ஓங்குமாறு பல ஏரிகளையும் கால்வாய்களையும், குளங்களையும் வெட்டித் தண்ணீர் உதவும்படி செய்தான். காடு கெடுத்து நாடாக்கினான். ஊர் தோறும் சிவபெருமானுக்குக் கோயில் எடுப்பித்து அவற்றில் பூஜை, திருவிழா முதலியன ஒழுங்காய் நடைப்பெறச் செய்து மக்களுக்குத் தெய்வபக்தியுண்டாக்கினான். சிதம்பரத்தில் பேரம்பலம் பொன்வேய்ந்தான்.

குலோத்துங்கன் சைவப்பற்றுள்ளவன். வீரத் தன்மையுடையவன். புலமை நிரம்பியவன். சங்கநூல்களையும், பின்னோரியற்றிய சிந்தாமணி முதலிய நூல்களையும், கற்றிருந்தான். வடமொழிப் புலமையும் உடையவன். தெலுங்கு மொழியும் கற்றான். நுண்ணறிவு படைத்தவன். இசைப் பயிற்சியுமுடையவன். இசை நூல் ஒன்று இயற்றியுள்ளானென்றும், இசைவாணர்களாகிய பாணர்கள் இந்த இசைநூலைக்கற்றுப் பாடிவந்தார்களென்றும் ஆசிரியர் சயங்கொண்டார் பாடியுள்ள பாடல்களால் அறியலாம். கற்றோரோடு அளவளாவிப் பொழுது போக்குவது இவனது வழக்கம். இவனுக்குத் "திருநீற்றுச் சோழன்" என்றும் பெயருண்டு. நீதி தவறாதவன். அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம், சுற்றந்தழுவுதல், காலமறிந்து கருமம் முடித்தல் முதலிய சீரிய குணங்களையுடையவன். கி. பி. 1070 முதல் 1118 வரையிலும் நாற்பத்தொன்பது ஆண்டுகள் அரசாண்டான். பின் விக்கிரம சோழனுக்கு இளவரசுப்பட்டங்கட்டினான். கி. பி. 1120ல் சிவனடி அடைந்தான்.

விக்கிரமசோழன்: (கி. பி. 1118 - 1136) இவன் இளமைப் பருவத்தில் வேங்கிநாட்டில் அரசப் பிரதிநிதியாகயிருந்து

ஆட்சிபுரிந்தவன். கி. பி. 1118ல் முடிசூடப் பெற்றுத் தன் தந்தைக்கு உதவி செய்து வந்தான். கி. பி. 1120ல் முதற் குலோத்துங்கன் இறக்கவே விக்கிரம சோழன் அரியணை ஏறினன். இவன் குலோத்துங்கனது நான்காம் புதல்வன். இவனது தமையன்மார்கள் குலோத்துங்கன் காலத்திலேயே உயிர் துறந்தனர். இவன் பரகேசரி என்ற பட்டத்தைப் புனைந்து கொண்டான்.

இவன் வேங்கியிலிருந்து சோழநாட்டிற்கு வந்து முடிசூடி இளவரசனாகயிருக்கும்போது அந்நாடு (வேங்கி) குலோத்துங்கனால் வெலநாண்டுத் தலைவனாகிய முதலாங் கொங்கனுடைய மகன் சோடன் என்பவனுக்குக் கொடுக்கப்பட்டது. குலோத்துங்கன் இறந்த பின்னர் மேலைச் சாளுக்கியவரசன் வெலநாண்டுத் தலைவனை வென்று நாட்டைத் தன் ஆட்சிக்குட்படுத்தினன். மேலைச் சாளுக்கியவரசனை விக்கிரமாதித்தன் இறந்தபின்னர், வேங்கி நாட்டைத் தன்னாட்டோடு மீண்டும் சேர்க்கப் போர்செய்து, அதில் வெற்றியுங்கொண்டான். ஆகவே வேங்கி நாட்டின் பெரும் பாகமும் இவனது ஆளுகைக்குட்பட்டிருந்தது. பின்னர் கங்கபாடி நாட்டில் முதற் குலோத்துங்க சோழனது காலத்தில் விடப்பட்டிருந்த பகுதியை விக்கிரமசோழன் கைப்பற்றித் தன் நாட்டுடன் சேர்த்துக்கொண்டான்.

இவனது ஆட்சிக் காலத்தின் ஆரும் வருடத்தில் நாடெங்கும் ஒரு பெரும் பஞ்சந்தோன்றி, வடக்கே திருவோத்தூர் முதல் தெற்கே தஞ்சை வரையிலுமிருந்த குடிகளை வருத்தியதாம். அன்றியும் மறுபடியும் இவனது ஆட்சியில் பதினோராம் ஆண்டிலும் இத்தகைய பஞ்சம் ஏற்பட்டதாம். அக்காலங்களில் இவன் குடிமக்களுக்கு இயன்றவரையில் பொருளுதவி செய்து காப்பாற்றினன்.

இவனது காலத்தில் பெரும் போர்களின்மையின்

நாட்டு மக்களை நேரில் பார்த்து மக்கட்கு நன்மை புரிந்து வந்தான். "விக்கிரம சோழனுலா" என்னும் நூல் இவ்வரசனைப் பாட்டுடைத் தலைவனாகக்கொண்டு, அவனது அவைக்கள புலவர் ஒட்டக்கூத்தரால் பாடப்பட்டதாகும். இவ்வரசன் பதினெட்டு ஆண்டுகள் அரசுபுரிந்து இறைவன் திருவடி நிழலைச் சேர்ந்தான்.

இரண்டாம் குலோத்துங்கன். (கி. பி. 1133–1150) விக்கிரம சோழனுக்குப் பின் அவன் மகன் இரண்டாங் குலோத்துங்கன் அரசு கட்டிலேறினான். இவ்வரசன் காலத்தில் வரலாற்றில் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகள் ஒன்றும் இருந்ததாகத் தெரியவில்லை. தில்லை நகர் செழிப்புடன் எல்லா வளங்களும் நிறைந்த நகராகக் காணப்பட்டதெனத் தெரிகிறது. இவ்வரசன் "குலோத்துங்க சோழனுலாவு"க்கு நாயகனாக இருந்தனனென்று காண்கிறது. அப்பாடல்களில் இவனது திருப்பணிச் செயல்கள் குறிக்கப்பட்டுள்ளன.

இம்மன்னன் தில்லையம்பதியில் வானுலகத்தெரு வீதிகளும் வெட்கும்படி பெரிய வீதிகள் அமைத்து, பற்பல மண்டபங்கள் கட்டுவித்தான். சிற்றம்பலத்தைப் பல வகை மணிகளாலும் பொன்னாலும் அலங்கரித்தான். விழாக்களில் உலா வருவதற்கு பொன்தேர் அமைத்தான். இவ்வேந்தன் ஆட்சியில் சோழநாடு ஒருவித இன்னல்களுமின்றி இனிது காணப்பட்டது.

இவன் தன் பாட்டனாகிய முதற் குலோத்துங்க சோழனைப்போல் பல கலைகளிலும் தேர்ச்சிபெற்றவன். தமிழ்ப் புலமை வாய்ந்தவன். பலவகைச் செய்யுள்களும் இயற்றும் ஆற்றல் படைத்தவன்.

இவ்வரசனுக்கு ஆசிரியர் இவனது தந்தையின் காலத்தில் அவைக்களப் புலவராக இருந்த ஒட்டக்கூத்தரே. இவரே அவனது அவைக்களப் புலவராகவும்

இருந்தார். இவனது இளமை முதல் இவனோடு பழகி வந்த புலவர் இவ்வரசன்மீது பிள்ளைத்தமிழ் ஒன்றும் உலா ஒன்றும் பாடியுள்ளார். இவைகள் முறையே குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழ் என்றும் குலோத் துங்க சோழனுலா வென்றும் வழங்கிவருகின்றன. இந் நூல்களில் இவனது பெருமைகளையும் இவன்செய்த அரும் பணிகளான தில்லைத் திருப்பணிகளும், வண்மை, வீரம் முதலான மேலான பண்புகளும் பாடப்பட்டுள்ளன.

இவ்வேந்தன் பல புலவர்களை ஆதரித்து வந்ததாக இவனது மெய்க்கீர்த்தியால் அறிகிறோம். இவன் சைவப் பற்றுள்ளவன். கி. பி. 1150-ம் ஆண்டுவரையில் அர சாண்டு இறைவன் திருவடியை அடைந்தான் என உணரப்படுகிறது.

இரண்டாம் இராசராச சோழன்: (கி. பி. 1146-1163) இரண் டாம் குலோத்துங்க சோழனுக்குப்பின் அவன் புதல்வன் இரண்டாம் இராசராச சோழன் முடிசூட்டப் பெற்றான். இவனைப்பற்றி அதிகமாக ஒன்றும் காணவில்லை. "இராச ராச சோழனுலா" என்று ஒரு நூல் வழங்குகிறது.

இவ்வரசன் வடமொழி, தென் மொழி இரண்டிலும் புலமை மிக்கவன். தந்தையைப்போல் சிவப் பற்றுள்ள வன். இவனது ஆட்சி காலத்தில் போர்களே நிகழ்ந்த தாகத் தெரியவில்லை.

இவனது காலத்தில் மலையமலைப் பக்கத்தில் காவிரி யாறு அடைபட்டுக் கிழக்கு திசையில் தண்ணீர்வராமல் தடைபடவே வளஞ் சுருங்குவதாயிற்று. இதனையறிந்த அரசன் உடனே அம்மலையை நடுவில் வெட்டுவித்து காவிரியாற்றிற்கு வழி கண்டு, எப்பொழுதும் தண்ணீர் வந்துகொண்டிருக்கும்படி செய்தான். இவன் தான் வசித்துவந்த இராசராசபுரம் என்னும் நகரில் "இராச ராசேச்சுரம்" என்ற சிவாலயம் எடுப்பித்தான்.

தனது இறுதிக் காலத்தில் பழையாறையிலிருந்த ஆயிரத்தளி அரண்மனையில் நோய்வாய்ப் பட்டிருந்தனன். அப்பொழுது இவனுடைய மக்கள் இருவரில் மூத்தவனுக்கு இரண்டு வயதும், இளையவனுக்கு ஒரு வயதுமா யிருந்தது. நோயினின்றும் பிழைக்க முடியாதென்பதை மன்னன் அறிந்தான், இதனால் அரசன் பெருங் கவலைகொண்டான். குழந்தைகள் முடிசூட்டத் தக்க வயதுடையவர்களாயில்லையே என ஏங்கினன். பின்னர் ஆராய்ந்து தன் உறவினருள் ஒருவனாகிய நெறியுடைப் பெருமாள் என்பவன் புதல்வனாகிய எதிரிலிப் பெருமானை வருவித்துக் கங்கைகொண்ட சோழபுரத்தில் வைத்து முடி சூட்டினன். அன்றே இறந்தும் போனன்.

பின்னர் அமைச்சர் தலைவனாகிய, திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பி என்பான் இராசராசனுடைய அந்தப்புர மகளிரையும் இளங் குழந்தைகளையும் இராசராசபுரத்தரண்மனையில் வைத்துத் தகுந்தபாதுகாப்புடன் காப்பாற்றினன். குழப்ப முண்டாகாமல் நாட்டையும் சரியான முறையில் காத்தான். இராச ராசன் இறக்கும் சமயத்தில் முடி சூட்டிய எதிரிலிப் பெருமானுக்கு முடி சூடிய நான்காம் வருடத்தில் இராசாதிராசன் என்னும் பட்டமும் வழங்கி, துன்பம் வராதபடி பார்த்துக்கொண்டான்.

இரண்டாம் இராசாதி ராச சோழன்: (கி.பி. 1163—1178) இவ்வரசன் விக்கிரம சோழனுடைய பேரன் நெறியுடைய பெருமானின் புதல்வன். இவன் காலத்தில் பாண்டிய அரசர்களுக்குள் அரசாளும் உரிமைபற்றி, பகையுண்டாகி போர் தொடங்கிற்று. அப்போரில் குலசேகர பாண்டியனுக்கு நம் இராசாதி ராச சோழன் உதவிசெய்தான். பராக்கிரம பாண்டியனுக்குச் சிங்கள அரசனாகிய பராக்கிரம பாகு படையனுப்பி உதவி புரிந்தான். எனவே

அப்போர் பாண்டியர்களுக்குள் நிகழ்ந்த தெனினும் உண்மையில் சோழவரசனுக்கும் சிங்கள அரசனுக்கும் நிக்ழ்ந்ததெனக் கூறலாம். அதில் சிங்களப் படைத்தலைவர் வெற்றியெய்தினர். சிங்களவர் வெற்றி அந்நாட்களில் சோழநாட்டு மக்களுக்கு அச்சத்தைக் கொடுத்தது. அதனல் மறுபடியும் இராசாதி ராச சோழன் தன் படைத்தலைவனாகிய திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பி பல்லவராயனை அனுப்பினான், அவன் சிங்களப்படைகளை வென்று புறங்காட்டி ஓடும்படி செய்தான். சிங்களப் படைத் தலைவர் இருவரைக் கொன்று யாவரும் காணும் படி மதுரைக் கோட்டை வாயிலில் வைத்தான். பின்னர் குலசேகர் பாண்டியனுக்கு மதுரையையளித்து ஆட்சி புரியச் செய்தான்.

இதனல் வருந்திய சிங்களவரசன் மறுபடியும் போர் தொடுத்தான். இப்பொழுதும் சிங்கள மன்னனுக்குத் தோல்வி ஏற்படவே. குலசேகர பாண்டியனோடும் இராசாதிராசனோடும் நட்புரிமைகொண்டு வாழ்ந்தான். சிறிது காலஞ் சென்ற பின்னர் குலசேகர பாண்டியன் நன்றி மறந்து சோழருக்குப் பகையான செய்திகளைச் செய்ய ஆரம்பித்தான். இதை அறிந்த இராசாதிராச சோழன் தன்படைத்தலைவன் பல்லவராயனுக்கு குலசேகர பாண்டியனை அரசுகட்டிலினின்றும் விலக்கி, பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனுக்கு முடிசூட்ட உத்தரவிட்டான். அவ்வாறேபல்லவராயன் மதுரைமாநகர்மீதுபடையெடுத்து சுருங்கிய தினங்களில் குலசேகர பாண்டியனைப் போரில் வென்று, பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனுக்கு பாண்டிய நாட்டை வழங்கிவிட்டு சோழ நாட்டிற்குத் திரும்பினான். வீரபாண்டியன் பாண்டிய நாட்டை ஆண்டுவருவானுயினன். அக் கால முதல் இராசாதிராசன் ஆட்சிக் காலம் முழுவதும் வீர

பாண்டியனே மதுரையை ஆண்டுவந்தான். இப் போர்களில் சோழநாட்டுப் படைகள் சிற்சில சமயங்களில் தோல்வியுற்றாலும் சிங்களப் படைகளைப் பல முறையும் வென்று சிங்களவரைப் பெரும் அழிவுக்குள்ளாக்கியது. இதன் காரணமாக இராசாதிராச சோழனை 'மதுரையும் ஈழமுங் கொண்ட ராசகேசரி வர்மன்' என்று அழைத்தார்கள். இவன் பதினாறு ஆண்டுகள் ஆட்சி புரிந்து இறந்தான்.

மூன்றாங் குலோத்துங்க சோழன்: (கி. பி. 1178 - 1218) இரண்டாம் இராசாதிராச சோழனுக்குப் பிறகு மூன்றாங் குலோத்துங்க சோழன் கி. பி. 1178-ம் ஆண்டில் அரியணை ஏறினான். இவ்வரசனை ஆராய்ச்சியாளர் இரண்டாம் ராசராச சோழன் மகனென்று கூறியிருக்கிறார்கள். இவ்வரசன் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளான். இவன் வீரம் படைத்தவனென்பதும் பாண்டியர்களோடு மூன்று முறை போர் செய்து வெற்றித்தூண் நிறுவினான் என்பதும் சில மெய்க்கீர்த்திகளால் அறிகிறோம்.

முதலில் பாண்டி நாட்டில் விக்கிரம பாண்டியனுக்கும், வீரபாண்டியனுக்கும் போர் மூண்டது. நம் குலோத்துங்கன் விக்கிரமபாண்டியனுக்குத் துணைபுரிந்து வீரபாண்டியனை வென்று நாட்டைக் கொடுத்தான். இரண்டாம் முறையும் போர் தொடங்கிற்று. இம்முறை வீரபாண்டியனுக்குத் துணையாக சேர நாட்டுப் படையும் வந்திருந்தது. குலோத்துங்கன் சேரநாட்டுப் படையையும் பாண்டிய நாட்டுப் படையையும் முறறிலும் தோல்வியுற்று, சிதறுண்டு போகும்படி செய்தான். வீரபாண்டியனுடைய பட்டத்தரசியையும் சிறைபிடித்து வேளம் ஏற்றினான். பின்னர் ஈழம், கொங்கு, வடநாடு இந்நாடுகளில் போர் செய்து வெற்றி கொண்டான். மூன்றாம் முறையாக விக்கிரம பாண்டியன்

என்பாளுேடு போர் புரிந்து வெற்றியடைந்தான் மதுரையில் சோழ பாண்டியன் என்னும் பட்டம் புனைந்து வீரமாமுடி சூடிக்கொண்டான். பாண்டிய நாட்டிற்குச் சோழ பாண்டிய மண்டலம் எனவும் மதுரைமா நகருக்கு முடித்தலைகொண்ட சோழபுரம் எனவும் பெயர்கள் வழங்கினுன்.

நம் குலோத்துங்கன் சேர நாடு, பாண்டிய நாடு ஆகிய இரண்டையும் வென்று தன் கீழ்ப்படுத்தி ஒப்பற்ற வீரனுகத் திகழ்ந்தமைபற்றி, "திரிபுவன வீரதேவன்" என்னும் சிறப்புப் பெயர் அடைவானுயினன். இவனது ஆட்சி காலத்தில் சோழநாட்டுடன், சேர நாடு, பாண்டி நாடு, கொங்குநாடு, கங்கநாடு, தெலுங்கநாடு, என்ற நாடுகளெல்லாம் உட்பட்டிருந்தன.

சோழ மன்னர்களெல்லோருமே சைவப் பற்றுள்ளவர்கள். அம்மாதிரி குலோத்துங்கனும் சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடுடையவன். ஆலயங்களுக்குத் தன் பெயரால் திருவிழாக் கண்டும், திருவீதியமைத்தும், பொன் வேய்ந்தும் கோபுரம் எடுப்பித்தும் பல அரிய தொண்டுகள் ஆற்றியுள்ளான். தன் முன்னேர்களைப் போல் தமிழ் வளர்ச்சியில் மிக முயற்சி கொண்டு புலவர் பெருமக்களை நன்கு ஆதரித்து வந்தான். இவனது அவைக்களப் புலவர் வீராந்தப் பல்லவரையர் ஆவர். நேமிநாதம், வச்சணந்திமாலை, வெண்பாப்பாட்டியல் என்ற இலக்கண நூல்கள் இவன் காலத்திற்ருன் இயற்றப்பட்டன. நன்னூல் என்ற இலக்கண நூலை இயற்றிய பவணந்தி முனிவர் இவ் வேந்தன் காலத்தில் நிலவிய புலவராவர். குலோத்துங்கனுக்குத் திறை செலுத்தி வந்த அமராபரண சீய கங்கன் வேண்டுகோளாலியற்றப்பெற்றது என்பது அந்நூல் பாயிரத்தால் வெளியாகிறது. இவனது காலத்தில் நிகழ்த்திய அரிய நிகழ்ச்சியாவது மகாபார்தம் தமிழில்

மொழி பெயர்க்கப்பட்டதும் அருண்மொழித் தேவராகிய சேக்கிழாரடிகளைக் கொண்டு பெரியபுராணம் பாடுவித்த மையுமாம். தொண்டை நாட்டில் புலியூர்க்கோட்டத்தில் உள்ள குன்றத்தூரில் தோன்றிய புலமை வாய்ந்த புலவர் பெருமான் குலோத்துங்கனுக்கு அமைச்சராய் அமர்ந்தார். இவரது ஒப்பற்ற சிவ பக்தியையும், புலமைத் திறத்தையும் கண்ட சோழன் இவரைத் திருத்தொண்டர் புராணம் பாடித் தருமாறு வேண்டினர். இவரது வேண்டு கோளுக்கிணங்கி இப் பெருநூலைக் கடவுள் திருவருள் துணைகொண்டு பாடிச் சபையில் அரங்கேற்றிப் புகழ் எய்தினர் சேக்கிழார்.

இரண்டாம் குலோத்துங்க சோழன் விரும்பியவாறு இந்நூலியற்றப்பெற்ற தென்பது சிலரது கொள்கை. இவ்வரசன் காலத்தில் ஒட்டக்கூத்தர் என்னும் புலவர் பெருமான் பல நூல்களை இயற்றியிருப்பதால் அவர் காலத்தில் திருத்தொண்டர் . புராணம் பாடியிருப்பின் அதனைத் தானியற்றிய நூலில் புகழ்ந்திருப்பர். அவ்வாறு இல்லாததால் அவர் காலத்துக்குப் பின்னர் பாடியது என சிலர் ஆராய்ச்சி வாயிலாகத் துணிந்து கூறுகின்ற னர். ஒட்டக்கூத்தர் உயிருடன் இருந்த இறுதி காலத் தில் சுமார் 1178-ல் கம்பர் தமது ராமாயணத்தைப் பாடின ரென்பது பெரும்பாலார் கொள்கை. இவரை ஆதரித்தவர் சடையப்ப வள்ளல். கம்பன் வரலாறு பின்னல் ஆரும் அதிகாரமாகிய பிற்காலத்துச் சோழர் ஆட்சியில் இலக்கி யங்கள் என்ற பகுதியில் ராமாயண நூலினைப்பற்றிக் கூறும் இடத்தில் விளக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வரசன் வீரம், பக்தி முதலிய குணங் களுடன் நாட்டை நன்கு ஆட்சி செய்து புகழுடன் வாழ்ந்தான். இவனது காலத்தில் கூடல், ஏழிசை

மோகன் மணவாளப் பெருமாள் என்பவனது போர் வீரத்தையும் பேராற்றலையுங் கண்டு தன் மகளை அவனுக்குமணஞ் செய்துகொடுத்துப் பற்பல சிறப்புகள் செய்தான். குலோத்துங்கனுடைய மகளை மணந்து அவனது அன்பிற்குரியவனாய்ப் பெருமையுடன்வாழ்ந்து வந்த இப் பல்லவர் தலைவனே பிற்காலத்தில் சோழநாடு அழிவிற்கு வழி தேடியவன் ஆவன்.

இத்துணை சிறப்புடன் வாழ்ந்த குலோத்துங்க சோழன் இறுதிக் காலத்திலேயே சோழநாடு நிலைகுலைய ஆரம்பித்தது. மூன்றுங் குலோத்துங்கனும் கி.பி. 1218-ல் இறந்தான்.

மூன்றும் ராசராச சோழன். (கி. பி. 1216 - 1256) மூன்றுங் குலோத்துங்க சோழனுக்குப் பின் அவன் மகன் மூன்றும் ராசராச சோழன் அரியணையில் அமர்ந்தான் இவனது ஆட்சி காலத்தில் சோழநாடு பலவகைத் துன்பங்களுக்குள்ளாகித் தன் சீரும் சிறப்பும் இழந்தது. இதுவரையிலும் உள்ள சோழ மன்னர்கள் தங்கள் பேராற்றலால் உயர் நிலைக்குக் கொண்டுவந்த சோழ நாட்டை அதன் நிலை குலையாதவாறு போற்றி ஆள ஆண்மையும் வீரமும் இவன்பால் இல்லாமற் போயினமையே அதன் வீழ்ச்சிக்குக் காரணம். அன்றியும் சிற்றரசர்கள் உள்நாட்டில் கலகமும் குழப்பமும்உண்டுபண்ணித் தங்கள் திறமையால் திறைகொடுக்காமல்தங்கள் நாட்டை உரிமையுடன் தானே தனியரசு நடத்த முயன்றனர். தெற்கே பாண்டியரும், வடமேற்கே ஹொய்சளரும் வல்லரசுகளாகிய தங்கள் பேரரசை நிறுவத் தொடங்கினர். இத்தனை குழப்பங்களுக்கிடையில் திறமை குறைந்த ராசராச சோழன் அமைதி நிலவச் செய்வது முடியாத காரியம்.

மாறன் சுந்தர பாண்டியன் என்பான் கி. பி. 1216-ல் பாண்டி நாட்டில் முடிசூட்டினன். இவ்வரசன் அறிவும் ஆற்றலும் பெற்ற சிறந்த வீரன். தன் பாட்டன் காலத்தில் குறுநில மன்னராய் வாழ்ந்து சோழருக்குத் திறை செலுத்தி அவர்களுக்கு அடங்கி நடந்ததையும், மூன்றாங் குலோத்துங்கன் தன் இளமைப் பருவத்தில் பாண்டி நாட்டின் மேல் படையெடுத்ததையும், அங்கு அவ்வரசன் நடத்திய பலபல அழிவு வேலைகளையும், குடிகள் கொண்ட வருத்தத்தையும் சீரழிவையும், சூறையாடியதையும் மறந்தவனல்லன். சோழ நாட்டின் மேல் படையெடுத்து அத்தகைய செயல்களைத் தானும் செய்து வெற்றித் தூண் நிறுவி யாங்கணும் புகழைப் பரப்பி, சோழரை அடக்கி, தன் கீழ்ப்படுத்தவேண்டும் என்ற எண்ணம் அவனது இளம் உள்ளத்தில் வேரூன்றிக் கிடந்தது. அவ்வெண்ணம் நிறைவேறக்காலங்கருதியிருந்தான். அதற்கேற்ப மூன்றாங் குலோத்துங்கன் கி. பி. 1218-ம் ஆண்டில் இறந்தான். அவன் புதல்வன் ராசராசன் அறிவும் வீரமும் குறைந்தவனாகக் காணப்பட்டான். தன் எண்ணத்தை நிறைவேற்ற இதுவே சமயமென நினைத்துப் பெரும் படையைத் திரட்டிக் கொண்டு சோழ நாட்டை எதிர்த்து ராசராச சோழனைப் போரில் வென்று நாட்டையும் கைப்பற்றிக் கொண்டான். தஞ்சாவூரும், உறையூரும் தீக்கிரையாயின. பல அரிய மாடங்களும் கூட கோபுரங்களும், மண்டபங்களும் இடித்துத் தூளாக்கப்பட்டன. நீர்நிலைகள் பாழாக்கப் பட்டன. எனவே சோழநாடும் அம்மக்களும் பலவித துன்பத்திற்குள்ளானார்கள்.

இப்போரில் தோல்வியடைந்த இராசராசன் தலை நகரை விட்டு நீங்கி ஓடி ஒளிந்து வாழும் வாழ்க்கையை எய்தினன். சில நாட்கள் சென்ற பின்னர் நாடிழந்த

இராசராசனோடு சுந்தரபாண்டியன் தூதர்கள் வாயிலாக சமாதானம் பேசத் தொடங்கினான். அதில் ஆண்டு தோறும் தனக்குத் திறை செலுத்திக்கொண்டு சோழ நாட்டை ஆட்சி செய்து வருமாறு ஆணையிட்டு, தலை நகரையும் பிற சாமான்களையும் அளித்தான். இராசராசன் முன்போல் முடிகொண்ட சோழபுரத்திற்கு சென்று ஆண்டு கொண்டிருந்தான்.

பிறகு இராசராசன் கி. பி. 1232 வரையிலும் கவலை யின்றி ஆட்சி நடத்தினான். இப்படி யிருக்கும்போது பல்லவ அரசனான "அவனியாளப் பிறந்தான்" என்பவன் படையெடுக்க ஆரம்பித்தான். இவன் சோழவரசாட்சி யையும் நாட்டையும் சின்னபின்னமாக்கினான். அப்போ தும் பாண்டியன் உதவியால் சோழன் பிழைத்து மறுபடி யும் நாட்டைப் பெற்று கி. பி. 1246-ம் ஆண்டுவரையிலும் ஆண்டு சிவபதமடைந்தான்.

மூன்றாம் இராசேந்திர சோழன்: கி. பி. 1246—1279. மூன்றாம் இராசராச சோழனுக்குப் பிறகு அவன் மகன் மூன்றாம் இராசேந்திர சோழன் கி. பி. 1246-ல் அரசனானான். இவன் வீரம் படைத்தவன். தன் தந்தையின் காலத்தில் வீழ்ச்சி எய்தி உயர்நிலை இழந்த சோழநாட்டைத் தன் ஆற்றலால் மீண்டும் நன்னிலை யெய்த முயற்சி செய் தான். அப்பொழுது பாண்டிய நாட்டில் மாறவர்மன் சுந்தர பாண்டியன் இறந்து அவனுக்குப்பின் இரண்டாம் சடையவர்மன் குலசேகர பாண்டியன் முடிசூடிச் சில திங்களில் இறந்தான். அவனுக்குப்பின் இரண்டாம் மாற வர்மன் சுந்தரபாண்டியன் அரியணை ஏறினான். இவன் தன் முன்னோரைப்போல் ஆற்றலும், வீரமும் படைத்த வன் அல்லன். ஆகவே இராசேந்திரன் இது தக்க கால

மென நினைத்து பாண்டியநாட்டின்மேல் படையெடுத்து, போரில் இரண்டாம் மாறன் சுந்தரபாண்டியனை வென்று, தனக்கு திறை செலுத்தும் சிற்றரசனுக்கினான். இவ்வா றிருக்கும்போது ஹொய்சள அரசன் வீரசோமேசுவரன் என்பவன் தன்னை "பாண்டியகுல சம்ரக்ஷகன்" என்று சொல்லிக்கொண்டு இராசேந்திரனுடன் உட்பகையாக யிருந்தான். இவன் பல்வேறிடங்களில் இராசேந்திர னுடன் போர் புரிந்து சோழராட்சிக்குள்பட்டிருந்த பாண்டி நாட்டைக் கைப்பற்றி பாண்டியரே தன் உரிமை யுடன் ஆண்டு வருமாறு செய்தான். வீரசோமேசுவரன் இராசேந்திரன் மாமன் என்று சில கல்வெட்டுக்களில் குறித்துள்ளன வென்று திரு T.V. சதாசிவபண்டாரத்தார் எழுதிய பிற்காலச் சோழர் சரித்திரம் கூறுகிறது. இரா சேந்திரன் தன் மாமனாகிய வீரசோமேசுவரனை பகைத் திருக்கும்போது தெலுங்கச் சோழர் இவனுக்குற்ற நண்பராய் உதவிபுரிந்து வந்தார்கள்.

இங்ஙனமிருக்கும்போது பாண்டி நாட்டில் முதல் சடையவர்மன் சுந்தரபாண்டியன் 1251-ல் முடிசூட்டப் பெற்றான். இவன் பாண்டி நாட்டை எங்கும் பரப்பி அதனை உயர்நிலைக்குக் கொண்டுவர முயன்றான். படை யைத் திரட்டி அதனைப் பெருக்கிக் கொண்டான். அவன் கி. பி. 1257-ல் சோழநாட்டின்மேல் படையெடுத்து இராசேந்திரனை வென்றான். இராசேந்திரன் சிற்றரசனா னான். இராசேந்திரன் வீரமும் ஆற்றலும் பெற்றிருந்தும் இத்தகைய தாழ்ந்த நிலையையடைந்தான். இவனுக்குப் பின் சோழநாட்டை ஆண்ட சோழ மன்னன் ஒருவனு மிலன். இவன் இறந்த பின்னர், சோழ நாடு பாண்டிய மன்னர் ஆட்சிக்குள்ளாயிற்று. மூன்றாங் குலோத்துங்கன் காலத்திலே நிலைகுலையத் தொடங்கிய சோழநாடு இப்போது முற்றும் அழிவுற்றது.

ஆகவே முதற் பராந்தகனல் நிலைநாட்டப்பட்டும், முதல் இராசராசனல் மேன் மேலும், வளர்க்கப்பட்டும், முதற் குலோத்துங்க சோழனல் சீராக்கப்பட்டும் வந்த சோணுடு பலங் குறைந்த மூன்ருங் குலோத்துங்கன், அவன் மகன் மூன்ரும் இராசராசன், மூன்ரும் இராசேந்திரன் என்னும் அரசர்கள் கையிலகப்பட்டுச் சீர்குலைந்து அழிந்தது.

எனவே, விஜயாலயன் காலத்தில் ஆரம்பித்து இராசேந்திரன் காலமாகிய பதின்மூன்ரும் நூற்ருண்டு வரையிலும், தக்க சிறப்புடன் விளங்கி வந்ததென்று சோழராட்சிக் காலத்துக் கல் வெட்டுக்களாலும் பலஆசிரியர்கள் எழுதிய பல சரிதங்களாலும் அறிகிரேம்.

சோழ அரசர் நாகரிகம்:- இவர்கள் காலத்தில் இராஜ்ய காரியங்களைச் சரியாகப் பார்த்துவர உடன் கூட்டத்து அதிகாரிகளை நியமித்து வந்தனர். அரசன் கட்டளைகளைக் கேட்டு எழுதப் பல உத்தியோகஸ்தர்கள் இருந்தனர். இவர்களுக்குத் 'திருமந்திர ஓலை எழுதுவார்' என்று பெயர்.

சோழநாடு பல மண்டலங்களாகவும், மண்டலங்கள் கோட்டங்களாகவும், கோட்டங்கள் கூறுகளாகவும், கூறுகள் நாடுகள் வளநாடுகளாகவும் வகுக்கப்பட்டிருந்தன. நகரங்களிலே அந் நகரங்களை யாளும் சபைகள் வருடந் தோறும் நியமிக்கப்பட்டிருந்தன. இந் நியமனம் ஊர் மகா ஜனங்களே செய்வதென்பது அக்காலத்து கல்வெட்டுக் களால் அறியப்படுகிறது. இவர்கள் ஊர்களில் நியாயம் விசாரித்துத் தீர்ப்பு அளிப்பது முதலானவைகளும் செய்துவந்தனர்.

ஒவ்வோர் ஊரும் அதைச் சார்ந்த புலங்களில் விளைந்த நெல்லின் ஒரு பகுதியை வரியாக அரசனுக்கு

இறுக்கவேண்டும். அப்படிச் செய்யாதவர்கள் நிலத்தை அவர்களிடமிருந்து திரும்ப வாங்கிக்கொண்டு ஊர்ப் பொது நிலமாக்கி, அவ்வவ்வூரார்களே தமக்குள் விலை யாக்கி,அதனால் வரும் பணத்தை இறைக்குக் கொடுப்பது வழக்கம். வாங்கப்பட்ட வரித்தொகைகளைக் கணக்கிற் பதிந்து கொள்வோருக்கு வரியிலார் என்று பெயர்.

சோழ அரசர் காலத்தில் அநேக கோயில்கள் கட்டப் பட்டன. மேலும்பழைய கோயில்கள்புதுப்பிக்கவும்பட்டன. இவ்வரசர்கள் யானைப்படை, குதிரைப்படை, காலாட் படை, கப்பற் சைனியங்கள் முதலானவைகளை மிகுதியாக வைத்து ஆண்டு வந்ததாகவும் தெரிகிறது. போரில் ஊர் களை அழிக்கும்போது கோயில் குளங்களைத் தொடுவ தில்லை. போரில் மடிந்த வீரர்களுக்கு அரசனாலாயினும் இறந்தவர் உறவினர்களாலாயினும் அவர்களுடைய ஞாபகச் சின்னமாக அவர்களைப்போல உருச்சமைத்துக் கல்லொன்று நடுவது வழக்கம்.

சோழர்கள் தாமே மிக்க கல்விமான்களா யிருந்த தோடு கற்றோர்களை ஆதரித்தும் வந்தார்கள். இவர்கள் காலத்துத்தான் முன்னே சொல்லியபடி நம்பியாண்டார் நம்பிகள் திருமுறைகள் தொகுத்தது. சேக்கிழார் பெரிய புராணமும், புத்தமித்திரர் வீரசோழியமும், சயங்கொண் டார் பரணியும், பவணந்தியார் நன்னூலும், திருவிசைப் பாவும், மெய்கண்டதேவர் சிவஞான போதமும், இன்னும் பற்பல நூல்களும் எழுதப்பட்டன. கோயில்கள்தோறும் திருப்பதிகம் பாடும்படி இவ்வரசர்கள் திட்டஞ்செய்து மானியமும் விட்டிருந்தனர். சோழ அரசர்களில் ஒன்றிரண்டு பேர் தவிர ஏனையோர் சைவப்பற்றுடைய வர்கள். இவ் வம்சத்தார்கட்குக் குல தெய்வம் திருச் சிற்றம்பலநாதர். ஆதலால் இவ்வூர்க் கோயிலை அரச

ரொவ்வருவரும் பொன்மயமாக்கி வந்தனர். எனவே பிற்காலத்துச் சோழர் பலவாற்றானும் நன்மை புரிந்து திறமையோடு ஆண்டுவந்தார்களென்பது புலப்படுகிறது.

இனிமேல் இவ்வரசர்கள் காலத்துள்ள தமிழ் இலக்கியங்களையும் அவைகளைச் செய்த புலவர்களையும் பற்றி ஆராய்வோம்.

6. பிற்காலத்துச் சோழராட்சியில் இலக்கியங்கள்

8-ம் நூற்றுண்டு முதல் 13-ம் நூற்றுண்டுவரையிலுமுள்ள கால அளவையிற்றோன்றியஇலக்கியங்களேஈண்டு ஆராயப்படுவன. இக்காலத்தைப்பற்றிப் பார்ப்போமாயின் சைனம்,பௌத்தம் முதலான சமயங்களின் எழுச்சி அதிகமாகி,சைவம்வைணவம்இவைகளும்ஓங்கிஎல்லாம்ஒன்றுக்கொன்று போட்டிபோடலாயின அப்போது சைவசமயத்தினும் வைணவ சமயத்தினும் முறையே நாயன்மார்களும் ஆழ்வார்களும் தோன்றினர். நாயன்மார்கள் பன்னிரு திருமுறைகளையும், ஆழ்வார்கள் நாலாயிரப் பிரபந்தங்களையும் இயற்றினர். ஐம்பெருங் காப்பியங்களில், மணிமேகலை, சிலப்பதிகாரம் தவிர ஏனைய சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய மூன்றும், சிறு காப்பியங்களும் தோன்றின. திவாகரம், பிங்கலம் முதலிய நிகண்டு நூல்களும் எழுந்தன. பாரதவெண்பா, நந்திக் கலம்பகம், கல்லாடம், கலிங்கத்துப்பரணி, மூவருலா,

குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ், தக்கயாகப்பரணி, இராமாயணம், ஏரெழுபது, அம்பிகாபதி கோவை, சடகோபரந்தாதி, சரஸ்வதியந்தாதி முதலிய நூல்களும் இயற்றப்பெற்றன.

நன்னூல், நேமிநாதம், புறப்பொருள்வெண்பாமாலை, யாப்பருங்கலவிருத்தி, யாப்பருங்கலக் காரிகை, வெண்பாப் பாட்டியல், வீரசோழியம், தண்டியலங்காரம் முதலிய இலக்கணநூல்களும் செய்யப்பட்டன.

தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் உரையும், சிலப்பதிகாரத்துக்கு அடியார்க்குநல்லார் உரையும் வகுக்கப்பட்டன.

பன்னிரண்டு திருமுறைகளாவன:- திருஞானசம்பந்தரியற்றிய தேவாரத்தை 1, 2, 3 திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் அருளிய தேவாரத்தை 4, 5, 6 திருமுறைகளாகவும், சுந்தரர் தேவாரத்தை ஏழாம் திருமுறையாகவும், மாணிக்கவாசகர் பாடினதை எட்டாம் திருமுறையாகவும், திருவிசைப்பாவை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், சில்லறைப் பிரபந்தங்களைப் பதினொராம் திருமுறையாகவும், பெரிய புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகவும் வகுத்துள்ளார்கள். இவைகளில் 1 முதல் 6 திருமுறைகள் இடைகாலப் பகுதியில் உண்டானவை. அவைகளை முன்னர் ஆராய்ந்தோம்.

ஏழாம் திருமுறை:- இது சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்ட தேவாரங்கள். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் அவதரித்தவர். சம்பந்தர், அப்பர் காலத்துக்குப் பிந்தியவராவர். இவருடைய மணப்பந்தலில் சிவபெருமான் இவரைத் தடுத்து ஆட்கொண்டார். 'பித்தா பிறைசூடி' என்னும் சொற்றொடரை முதலாகவுடைய

பதிகமே இவரது முதற்பதிகமென்று கருதப்படுகின்றது. பின்னர், திருவருட்டுறை, திருநாவலூர், திருத்துறையூர் முதலிய ஸ்தலங்களிற் சென்று திருப்பதிகம் பாடினர். இவர் பாடிய திருப்பதிகங்களை ஏழாந் திருமுறையாக வகுத்தார். இவர் பல்லவ அரசனாகிய இரண்டாம் நரசிம்மன் காலத்திருந்தவர். இவர், 'கடல் சூழ்ந்தவுலகெலாங் காக்கின்ற பெருமான் காடவர்கோன் கழற் சிங்கன்' என்று ஒரு பல்லவ அரசனைக்குறித்துப் பாடியிருக்கிறார்.

எட்டாம் திருமுறை:- இது மாணிக்கவாசகரால் இயற்றப் பட்டது. இவருக்கு மணிவாசகர், வாதவூரடிகள் என்ற வேறு பெயர்களுமுண்டு. இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டென்று நிச்சயித்திருக்கிறார்கள். இவரது திருவாசகத்தில் தாழிசை, துறை, விருத்தம் முதலிய பாவினங்கள் காணப்படுகின்றன. திருச்சதகம், திருவெம்பாவை, திருவம்மானை, திருபொற்சுண்ணம் முதலியனவும் இவரது திருவாசகத்தில் அடங்கியனவே. அகப் பொருட்சுவை விளங்கத் திருக்கோவையாரை வெகு அழகுபட இயற்றியுள்ளார்.

திருவிசைப்பா:- இது சேந்தனர், கண்டராதித்தர் முதலியோர் ஒன்பதின்மரால் இயற்றப்பட்டது.

திருமந்திரம்:- இது திருமூலர் இயற்றியது.

பதினோராந் திருமுறை:- இது நக்கீரர், நம்பியாண்டார் நம்பிகள் முதலியோரால் இயற்றப்பட்ட நூல்களடங்கியது. நம்பியாண்டார் நம்பிகள் முதல் இராஜராஜன் காலத்தவர்; அவ்வரசனால் நன்கு மதிக்கப்பட்டவர்.

பெரிய புராணம்:- இந்நூல் சேக்கிழாரால் சொற்சுவை பொருட்சுவை நிரம்ப, கற்பனைசக்தி துலங்க, தமிழ்த் தாயின் அழகு மிளிர, சைவமதத்தின் தன்மையை உலகோருணர்ந்துய்ய, நாயன்மார் புகழ் பரக்க, சோழ

அரசர் நாடு ஓங்கி இன்பம் பயக்கும்படி இயற்றப்பட்டது. சேக்கிழார் தொண்டை மண்டலத்தில் குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் சேக்கிழார் மரபில் தோன்றியவர். இவரது பெயர் அருண்மொழித் தேவர். சேக்கிழார் மரபை விளக்கினமையால் இவருக்குச் சேக்கிழாரெனவே பெயராயிற்று. இவருடைய கல்வி, அறிவு, ஒழுக்கங்களை மூன்ருங் குலோத்துங்க சோழன் அறிந்து இவரைத் தமக்கு முதன் மந்திரியாக்கி உத்தம சோழப் பல்லவரென்னும் பட்டப்பெயரும் அளித்தனன். இவர் சோழ நாட்டிலுள்ள திருநாகேச்சுவரமென்னுஞ் சிவதலத்தினிடத்தே தமக்கு அன்பு மிகுந்திருத்தல் பற்றிக் குன்றத்தூரில் ஓர் கோயிலை நிறுவி, அதற்குத் திருநாகேச்சுரமென்று பெயரிட்டு, அதில் நித்திய நைமித்திக விழாக்களை வழுவாது நடப்பித்துக் கொண்டு அவ்வரசனது செங்கோலை ஒழுங்கு பெற நடத்திவந்தார்.

இவ்வாறு நடந்துவரும் நாட்களில், சைவர்களிற் சிலர் மெய்ந்நூல்களாகிய சைவநூல்களைக் கற்காமல் புறச்சமயங்களுள் ஒன்ருகிய சமணமதத்தைச் சார்ந்த காப்பியமாகிய சீவகசிந்தாமணியை மெய்ந்நூலென்று கொண்டு, தங்கள் வாணளை வீணளாகக் கழித்தது போலவே சோழனும் அந் நூலைப் பெரிதும் பாராட்டிப் பொழுது போக்குவாணயினன். இதனை அறிந்த சேக்கிழார் அரசனைச் சமய நூல்களைப் படிக்கும்படி வற்புறுத்த, அவ்வாருன நூல் யாது என்று வினவிய அரசனுக்கு நாயன்மார்களின் பெருமையைக் கூறிப் பெரிய புராணத்தைச் செய்து அரங்கேற்றினர்.

இந்த நூல் நாயன்மார்கள் சரித்திரத்தைக் கூறுகிறது. இதிலிருந்து சைவத்தின் மகிமையும் ஆசிரியரது

திறமையும் நன்கு அறியலாம். பெரிய புராணச் செய்யுட்கள் படிப்போருக்கும் கேட்போருக்கும் நல்லுணர்ச்சியை உண்டுபண்ணி இன்பந்தருவன. சுருங்கிய சொல்லும், விரிந்த பொருளும், நல்லோசையும் பெற்றனவாய், செறிவு தெளிவு முதலிய குணங்களும், தன்மை உவமை முதலிய அணிகளும் நன்கமைந்தன. மேலும் மேலும் நயந்தோன்றச் சுவை மலிந்தன. ஆசிரியர் தமிழ் மொழிப்பற்றுள்ளவரென்பது ஆங்காங்குக் காணப்படும் பாடல்களா லறியலாம். உதாரணமாக:

'வண்டமிழ் நாவலர்தம் பெருமான்'
'தமிழ்மாலைகள் சாத்து முணர்வுபெற',
'தேமாலைச் செந்தமிழின் செழுந்திருத்தாண்
[டகம்பாடி',
'தீந்தமிழின் தொடைமாலை',
'ஓங்கு தமிழ்ப் பெருவாய்மைத் தொடைமாலை',

இம்மாதிரியாக அநேக பாட்டுக்களில்பாடியிருக்கிறுர்.

நாலாயிரப்பிரபந்தம்:- ஆழ்வார்களால் வைணவ சமயத்தின் பெருமை விளங்க இயற்றப்பட்ட தோத்திரப் பாடல்களை ஒன்ருகச் சேர்த்து நாலாயிரப் பிரபந்தமென வகுத்தனர். ஆழ்வார்கள் பன்னிருவர். ஸ்ரீ வைகுண்ட லோகத்தில் எழுந்தருளியிருக்கின்ற திருமால் பூலோக மனிதர்களை உய்விக்கக் கருதி, அவர்களைச் சீர்திருத்துதற் பொருட்டு திரு, பூமி, நீளா தேவிகளையும், தனது ஐந்து ஆயுதங்களையும், ஸ்ரீ வத்ஸம், கௌஸ்துபம், வனமாலை முதலிய சின்னங்களையும், அநந்தன், கருடன் விஷ்வக் ஸேனன் முதலிய முக்தியுலகத்து அடியார் சிலரையும் பார்த்து "நீங்கள் பூலோகத்தில் பல சாதிகளிலும் பிறந்து பூலோக வாசிகளைப் பிறவிப் பெருங்கடலினின்றும் கரையேற்றி வருவீராக" என்று கட்டளையிட்டு அனுப்ப,

அவர்கள் அப்பணியைத் தலைமேற்கொண்டு ஆழ்வார்களாக அவதரித்தார்கள், என்பது புராண வரலாறு.

இப்பன்னிரு ஆழ்வார்களில் பெரியாழ்வார் நாச்சியார், குலசேகர ஆழ்வார், நம்மாழ்வார் இந்நால்வரும் மிக முக்கியத்துவம் படைத்தவர்கள். இவர்கள் மிகப்புலமை வாய்ந்தவர்கள். இவர்கள் பாடிய பாடல்கள் பக்திச்சுவையும், பொருட் செறிவும் கொண்டவைகள்.

இந்நூலில் திருமால் பெருமைகளும் அவதாரங்களின் மாண்புகளும், பகவான் நடத்திய அருஞ்செயல்களும் வெகுநயம்பட ஆழ்வார்களால் பக்திச்சுவைததும்பப் பாடப்பட்டுள்ளது. இப்பாடல்கள், பண் தாளம் முதலியன அமைந்து, பெரும்பாலும் விருத்தத்தாலானது.

ஐம்பெரும் காப்பியங்கள்

சிலப்பதிகாரம், மணிமேகலை இவைகளைப்பற்றி முன்னே பார்த்தோம். ஏனைய சிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி இவைகளைப்பற்றி ஆராய்வோம்.

சிந்தாமணி:- இதற்கு மணநூலென்றும் ஒரு பெயர் வழங்குகிறது. இது திருத்தக்கதேவர் என்னும் ஜைன முனிவரா லியற்றப்பட்டது. இதிலுள்ள பாடல்கள், சொல்வளம், சந்தவின்பம், செய்யுணடையினிமை முதலியனவும் பலவகைச் சுவைகளும் அலங்காரங்களு முடையனவாய், காலம், இடம் முதலியவற்றிற்கு ஏற்ற வருணனைகளும் அமைந்துள்ளன. இது சீவகன் என்னுமோர் அரசன் பிறந்தது முதல் வீடுபேறெய்தியது வரையிலுமுள்ள கதையைக் கூறுகிறது. இந்நூலைச் சைனர்கள் பெரிதுங் கொண்டாடுகின்றனர். இந்நூலுள் அமைச்சனை ஆராயவேண்டுமென்பதும், பெண் வழிச்சேறல் பெருந்துயர் விளைக்குமென்பதும், எதுவும் காலங்கருதிச்

செய்தால் வெற்றி பெறலாமென்பதும், தாய் தந்தையர் சொல்லைத் தலைமேற்கொண்டு ஒழுகவேண்டுமென்பதும் இவைபோன்ற நீதிகள் பிறவும் தக்க சந்தர்ப்பங்களில் தெளிவுறக்காட்டப்பட்டுள்ளன. இந் நூல் தமிழ்த் தாய்க்குச் சிறந்த மணி ஆரம்போன்று விளங்குகிறது.

வளையாபதி:- இதுவும் ஓர் ஜைன காவியம். இது சிந்தா மணிக்கு முன்னே இயற்றப்பட்டதெனக் கூறுவாருமுளர். ஆனால் காலம் நிச்சயமாகத் தெரியவில்லை.

குண்டலகேசி:- இது ஓர் பௌத்த காவியம். குண்டல கேசி என்னும் ஒரு வணிக கன்னிகையின் கதையைக் கூறுவது. அவள் அருக்கசந்திரன் என்பவனிடத்துப் பௌத்த சமயத்தைக் கற்று நாவலந்தீவிலுள்ளாரை வாதத்தில் வென்று பௌத்தராக்குவேனெனச் சங்கற் பித்துக்கொண்டு பல்லோரும் இயங்குங் கோட்டை வாயில் வழியில் நாவல்மரக்கொம்பினை நட்டு மக்கள் அவ் வழிச் செல்வதைத் தடுத்துவந்தனள். ஆவணமென்னும் நகரில் நாதகுப்தனார் என்னும் அருகர் ஒருவரையும் வென்றனள். இவர் அருகசமயக்கொள்கைகளில் மேம் பட்ட ஞானமுடையராய் இருந்ததால், ஆருகதர்களுக்கு அவரது தோல்விமிக்க பரிபவத்தை விளைத்தது.

அருகர்கள் நீலகேசியென ஒரு பிரபந்தத்தை இயற்றி அதில் குண்டலகேசியையும் அவளுக்கு உபதே சித்த அருகசந்திரனையும் அருகர் வாதித்து வென்ற தாய்க் கூறினர். நீலகேசித்தெருட்டில் குண்டலகேசி வாதச் சருக்கம், சந்திரவாதச் சருக்கம் முதலிய பகுதிக ளுள. இவற்றால் குண்டலகேசி என்ற நூலின் இயல்பு இன்னதென அறியலாம். குண்டலகேசி என்னும் காவி யம் பௌத்த சமயம் தமிழ் நாட்டில் ஓங்கி விளங்கிய காலத்து இயற்றப்பட்டதென அறியலாம். அதில் காணப்

படும் பெயர்களும் இக்காலத்து அறியக்கூடிய பெயர்களாயில்லை.

ஐஞ்சிறு காப்பியங்கள்

சூளாமணி, நீலகேசி, யசோதர காவியம், உதயண குமார காவியம், நாககுமார காவியம் என்ற நூல்களே ஐஞ்சிறு காப்பியங்களாகும்.

நிகண்டு நூல்கள்

திவாகரம், பிங்கலம் என்ற நிகண்டுகளும் இக்காலத்தியற்றப்பட்டன.

திவாகரம்:- ஆதிதிவாகரம் என்றும், சேந்தன் திவாகரமென்றும்இரண்டு நூல்களுள்ளன வென்றும், அவற்றில் இப்போதுள்ளது சேந்தன் திவாகரமெனவுங் கூறுகின்றனர். ஆனால் ஆதிதிவாகரம் என்னும் நூல் இருந்ததற்கு யாதொரு ஆதாரமுமில்லை. உரையாசிரியர்கள் கையாண்டிருப்பது சேந்தன் திவாகரமே.

பிங்கலம்:- இது திவாகரத்திற்குப்பின் தோன்றிய நிகண்டு என்று கூறுகிறார்கள். இதற்குச் சரியாகப் பிங்கலச் சிறப்புப்பாயிரத்திலுள்ள 'செங்கதிர் வரத்தாற் றிவாகரன் பயந்த, பிங்கல முனிவனெனத் தன்பெயர் நிறீஇ' என்ற அடிகளை ஆதாரமாகக் கொள்கின்றனர். திவாகரத்தினும் பிங்கலம் விரிவானதாயினும் அருகர், புத்தர் இவர்களைக் கூறுமிடத்துத் திவாகரம் விரிந்தும் பிங்கலம் சுருங்கியு மிருக்கிறது.

வேறு நூல்கள்

பாரத வெண்பா:—இது பெருந்தேவனாரா லியற்றப் பட்டது.

கல்லாடம்:-இது கல்லாடரா லியற்றப்பட்டது. சங்க காலத்திலும் கல்லாடர் ஒருவர் இருந்தனரெனச் சொல்லு கிருர்கள். இந்தக் கல்லாடர் வேறு, அவர் வேறு. இஃது அகப்பொருட்டுறைகளுள் நூறு துறைகளையெடுத்து விளக்கிக்கூறி மதுரையம்பதி பற்றிய பல விஷயங்களை யும் தெரிவிக்கிறது. இது மாணிக்கவாசக ரியற்றிய கோவையைத் தழுவி எழுதப்பட்ட தென்பர்.

கலிங்கத்துப்பரணி:-இது சயங்கொண்டாரா லியற்றப் பட்டது. இதில் 11-ம் நூற்ருண்டில் அரசுபுரிந்த சோழ சக்கிரவர்த்தியான இராஜேந்திர தேவன் கலிங்க தேசத்தை வென்றுகொண்டமை கூறப்பட்டிருக்கிறது.

தக்கயாகப்பரணி:-தக்கன் சிவபெருமானை அவமதித்துப் புரிந்த யாகத்தைச் சிவபிரானுடைய அம்சமான வீரபத் திரக் கடவுள் அழித்து, தக்கனுக்கு உதவிபுரிந்த தேவர் களை வென்று அவனுடைய தலையையுங் கொய்த வர லாற்றை இது கூறுகிறது. பலவகைப்பட்ட பிரபந்தங் களுள் ஒன்ருன பரணி அரசர் முதலியோர்மேற் செய்யப் படுவதன்றித் தெய்வங்கள்மேலும் தம் தம் ஆசிரியர் மேலும் இயற்றப்படுவதுண்டு. இது தெய்வத்தின்மே லியற்றப்பட்டது.

இந் நூலாசிரியர் ஒட்டக்கூத்தராவர். இவர் விக்கிரம சோழனிடம் ஆஸ்தான பண்டிதராக இருந்தார். பின்பு அச் சோழன் மகனுகிய குலோத்துங்கனுக்கு வித்தியா குருவாகவும் அவனுக்கும் அவன் மகனுன இராஜராஜ சோழனுக்கும் அவைக்களப் புலவராகவும் அமர்ந்திருந் தார். இவர் சப்தாடம்பரந் தோன்றச் செய்யுட் செய்த தால் கௌடப்புலவர் எனப்படுவர். இவர் காங்கேயன் நாலாயிரக் கோவை, அரும்பைத் தொள்ளாயிரம், மூவ ருலா, குலோத்துங்கன் பிள்ளைத் தமிழ், ஈட்டி யெழுபது முதலிய பல நூல்களும் செய்துள்ளார்.

இராமாயணம்: கம்பர் தமது கவி ஆற்றலும், கற்பனை ஆற்றலும் புலப்பட உயரிய கருத்துநலம் வாய்ப்பப் பத் தழுதும் பாங்குடனமைய ஒன்பான் சுவையும் ஒருங்கே பொருந்தப் பதினுயிரம் செய்யுட்களில் 'இராமாயண'ஞ் செய்து முடித்தார். இது அவர் பெயரோடுகூடி கம்ப ராமாயணம் என வழங்குகிறது.

கம்பர் காலத்தில் மக்களிடையில் இராமகதை பெரி தும் பாராட்டப்பட்டு வந்தது. வால்மீக இராமாயணம் வட மொழியில் இயற்றப்பட்டதால் அதை ஒரு சிலரே பயில முடிந்தது. கம்பர் காலத்துக்கு முன், பல்வேறு ஆசிரியர்கள் இராம கதையைத் தமிழில் இயற்றியுள்ளார் கள். ஆனுல் அவைகள் முழுவதும் கிடைத்தபாடில்லை. சில பாடல்களே கிடைக்கப்பெற்றன. அவைகளும் நாளடைவில் மறைந்துபோயின. கம்பர் இராம கதை யைத் தமிழில் இயற்றவேண்டுமென வெகு நாளாக ஆசைகொண்டார். தமிழ் மக்களும் இராம கதையைத் தமிழில் படித்து இன்புற விழைந்தனர். எனவே முதல் நூலாகிய வால்மீகி இராமாயணத்திலிருந்து கதையில் மாறுபாடில்லாமல் மிகவும் மேன்மையான முறையில் இந் நூலை இயற்றினுர்.

இந்நூல் உலக மகா காவியங்களுள் ஒன்று. கதை தழுவி எழுந்த அரிய தொடர்நிலைச் செய்யுள்களா லானது. மக்களுடைய வாழ்க்கையில் நிகழும் பற்பல செய்திகளையும் தக்க இடங்களில் அழகுடன் அமைத்துக் கூறுவது. எல்லா நலன்களும், பெருமைகளும் ஒருங்கே திரண்ட இராமபிரானைக் கதாநாயகனுகக் கொண்டது. புதுக் கருத்துக்களும் கவிதைச் சிறப்புக்களும், காவியப் பண்புமுடையது.

இக்காப்பியத்தின் செய்யுள் நடை எளிமை, இனிமை, ஆழமுடைமை என்னும் மூன்று குணங்களையும் உடை

யது. உவமை, தன்மை நவிற்சி முதலிய அணிகளைப் புதிய முறைகளில் அமைத்துப் பாடப்பட்டது; பயில் வார்க்கு நாவிலும் உளத்திலும் இனிமைச் சுவையைத் தோற்றுவிப்பது. இதனை மறைநூலெனவும் பகரலாம். கடவுள் தன்மை அமைந்தது. இயற்கை வருணனையும் அரிய பெரிய நீதிகளும் ஆங்காங்கே வெகு அழகுடன் மிளிரப்பெற்றுள்ளது.

இராமாயணத்தில் முதல் ஆறு காண்டங்களும் கம்ப ரால் பாடப்பட்டன. ஏழாவது காண்டமாகிய உத்தர காண்டத்தை ஒட்டக்கூத்தர் பாடினாரெனக் கூறுகின்ற னர். இந்நூல் முழுவதும் விருத்தப் பாக்களாலானது.

கம்பர் இளமையில் பெற்றோரை இழந்து ஆதரிப்பா ரில்லாமல் திருவெண்ணெய் நல்லூரிற் சடையப்ப வள்ள லிடம் சேர்ந்து, அவரால் ஆதரிக்கப்பெற்று, கல்வியில் சிறந்தவராயினர். தமிழில் இருந்த நூல்களையெல்லாம் நன்கு பயின்று தெளிவுபெற்றார். வட மொழியிலும் நல்ல பயிற்சியுள்ளவர். திருக்குறள், சிந்தாமணி, முதலிய நூல் கள் கம்பர் உள்ளத்தையும் கருத்தையும் பெரிதும் கவர்ந் தவைகள். இவர் கல்வியறிவைக் கேள்விப்பட்டு சோழ மன்னன் இவரை வரவழைத்து அவைக்களப் புலவராக நியமித்து, கவிச் சக்கரவர்த்தி என்ற பட்டமும் அளித்த தாகச் சரித்திரம் கூறுகிறது. இவரைப்பற்றி வழங்கும் வரலாறுகளுள் பெரும்பான்மையானவை பொய் வரலாறு களே அவைகளில் பெரும்பாலும் முரண்பட்டும், பொருத்தமற்றும் உள்ளன. இவர் திருவழுந்தூரில் உவச்சர் மரபில் பிறந்து காளிதேவியின் அருள் பெற்றவ ரென்று கூறுவர். கம்பரை ஆழ்வார்களின் அடித் தொண்ட ரென்றும் அதிலும் நம்மாழ்வாரிடம் தனிப் பட்ட பயபக்திகொண்டவர் என்றும், அதனால் அவர்மீது

"சடகோபரந்தாதி" என்ற பிரபந்தம் பாடினுரென்றும் பலரும் பகருகிருர்கள்.

இவர் வைணவ மதத்தைச் சார்ந்தவர். எனினும், வைணவர்க்கும் சைவர்கட்கும் நேரும் சமயப் பூசல்களைக் குறித்து வெறுப்புக்கொண்டவர். தாம் எழுதிய இராமாயணத்தில் தம்மை ஆதரித்த வள்ளலாகிய சடையப்பரைப் பாடியிருக்கும் தன்மையிலிருந்து நன்றியறிவு உள்ளவர் என்பது புலனுகிறது. குறை சிறிதுமின்றிச் செம்மை சான்ற நாட்டையும், அரசையும் அரசாங்கத்தையும் அமைத்து, இராமாயணத்தில் இவர் எழுதியிருக்கும் முறையினுல் இவரது புத்தி கூர்மை விளங்குகிறது. "கல்வியிற் பெரியன் கம்பன்," "கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவி சொல்லும்," என்றபழமொழிகள், இவரது கல்வித் திறத்தை எடுத்துக் காட்டுகிறது. மேலும் மக்களுடைய அறவாழ்க்கையைச் சித்திரித்துக் காட்டித் தானும் அறத்துடன் வாழ்ந்தவர் கம்பர். எனவே இவரை ஒரு தீர்க்கதரிசி என்றும் இராமாயணத்தை உலக காவியமென்றும் உறுதியுடன் உரைக்கலாம்.

நளவெண்பா: இந்நூல் புகழேந்திப் புலவரால் இயற்றப்பட்டது. இப்புலவர் வெண்பா பாடுவதில் மிக வல்லவர். இதனுல் இவரை "வெண்பாவிற் புகழேந்தி" என்று பாராட்டும் தமிழகம். நளன் சரிதத்தைச் சுவை மிகுந்த வெண்பாக்களால் இயம்பும் ஒரு சிறந்த நூலாகும் இந்நூல். அதாவது பாண்டவர் தலைவரான தருமர் சூதாட்டத்தில் தம் நாட்டை இழந்து தம்பியர் நால்வருடன் கானகம் சென்ற நாளில் தம் செய்கையை நினைந்து வருந்தினுர். அப்பொழுது அவரைப் பார்க்க வந்த வியாச முனிவர் அவருக்கு ஆறுதல் மொழி பல புகன்று

அவருடைய துன்பத்தை நீக்குமாறு நளன் வரலாறு கூறுவதாகத் தோற்றுவாய் அமைத்து, புகழேந்தியார் இந் நூலைப் பாடியுள்ளார்.

புகழேந்தியார் தொண்டை மண்டலத்திலுள்ள செங்கற்பட்டு ஜில்லாவில் பொன்விளைந்த களத்தூரில் பிறந்தவர். இவரது பெற்றோரைப்பற்றி அதிகமாக ஒன்றும் தெரியவில்லை. இந்நூலில் இவர் ஒவ்வொரு காண்டத்திலும் முதலில் திருமாலுக்கு வணக்கம் செலுத்தியிருப்பதால் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது புலனாகிறது. சங்க நூல்கள் முதலான எல்லா நூல்களும் ஐயந்திரிபறக் கற்று வல்லவராய் விளங்கினர்.

இவரை மள்ளுவநாட்டுத் தலைவனாகிய சந்திரன் சுவர்க்கி என்பவர் ஆதரித்து வந்ததாகத் தெரிகிறது. செய்ந் நன்றி யறிதலாகப் புகழேந்தியார் தாம்செய்த நள வெண்பாவில் அவர் பெயரை நான்கு இடங்களில் பாடல் களோடு சேர்த்துப் பாடியிருக்கிறார். இந்நூல் சுயம்வர காண்டம்,கலித்தொடர் காண்டம்,கலி நீங்கு காண்டம் என மூன்று காண்டங்களை உடையது. காப்பியஇலக்கணங்கள் நன்றாக அமையப்பெற்று, படிப்போர் மனத்தைக் கவரும் தன்மையுடையது. பழைய சரிதமாகிய நளன் கதையை மக்கள் ஆர்வத்துடன் படித்தின்புறும் வண்ணம் எளிய நடையில். இனிய சொற்களுடன் அமைத்திருக்கும் பான்மை மிக போற்றத் தக்கதே. அல்லியரசாணிமாலை, புலந்தரன்களவுமாலை முதலான நூல்கள் இவரால் இயற் றப்பெற்றதாகக் கூறுகிறார்கள். ஆனால் உண்மை சரியாக விளங்கவில்லை. அந்நூலின் நடைகள் இவர் பெருமை யைக் குறைப்பதாயிருக்கின்றன. ஆகையால் யாரோ பாடி இப்புலவர் பெயரால் வழங்குகின்றனர் எனவும் கொள்ள இடமிருக்கிறது.

திருவிளையாடற் புராணம்: (அதாவது பழைய திருவாலவா யுடையார் திருவிளையாடற் புராணம்) இதைப் பழைய புராணம் என அறைவர். திருவாலவாய் என்பது பாண்டிய நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற பதினான்கு இடங்களில் முதலாயது. சிவபெருமான், ஆன்மாக்களை உய்வித்தற்பொருட்டு இங்கே கோயில்கொண்டெழுந் தருளி, சோமசுந்தரக் கடவுளாக விளங்கி, நிகழ்த்திய அறுபத்துநான்கு திருவிளையாடல்களைக் கூறுவதாகும். இறைவன் செய்தருளிய செயலாகையால் அதற்குத் திருவிளையாட்டு என்று கூறுதல் வழக்கம்.

இந்நூல் இந்திரன் பழி தீர்த்த திருவிளையாடல் முதலாக, வேதம் உணர்த்திய திருவிளையாடல் முடிய அறுபத்துநான்கு திருவிளையாடல்களைக் கொண்டுள்ளது. பரஞ்சோதி முனிவர் எழுதிய திருவிளையாடற் புராணம் தோன்றிய பின்னர் இந்நூலை அவ்வளவாக யாரும் போற்றுவாரில்லை. தமிழ்ப் பெரியாரான காலஞ்சென்ற டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் இந்நூலை ஆராய்ந்து அச்சிட்டு வெளியிட்டார்கள்.

இதன் ஆசிரியர் செல்லிநகர் பெரும்பற்றப்புலியூர் நம்பியாவர். இவர் அந்தணர் வகுப்பில் தோன்றியவர். செல்லிநகரில் வேம்பத்தூரில் பிறந்தார். பெற்றோர் பெயர் முதலியன சரியாகத் தெரியவில்லை. இவர் சிவ பக்தியுடையவர் என அவர் இயற்றிய நூல் நன்றாக விளக்குகிறது.

இலக்கண நூல்கள்

நன்னூல்:—இது பவணந்தி முனிவரால் எழுத்துஞ் சொல்லுந் தெளிவாகவுஞ் சுருக்கமாகவும் அழகாகவுங் கூறப்பட்ட நூல். சீயகங்கன் வேண்டப் பவணந்தி முனிவர் இயற்றினர்.

நேமிநாதம்:—இது குணவீர பண்டிதரா லியற்றப் பட்டது. சின்னூலெனவும் பெயர் பெறும்.

யாப்பருங்கலம்— இதுவும் யாப்பருங்கலக்காரிகையும் அமிதசாகரரியற்றியனவே. குணசாகர ரென்னும் ஜைனப் புலவர் காரிகைக்கு உரை செய்திருக்கிறார். இந் நூலில் செய்யுளிலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது.

புறப்பொருள்வெண்பாமாலை:— இது செய்தவர் ஐயனாரித னார். பன்னிருபடலம் என்னும் இலக்கண நூலைத் தழுவிப் புறப்பொருள் வெண்பாமாலையைச் செய்தனர். தொல்காப்பியர் சொல்லிய புறப்பொருள் இலக்கணத் திற்கும் இவர் சொல்லியிருப்பனவற்றிற்கும் வேறுபாடு கள் சிலவுள.

வெண்பாப் பாட்டியல்— இதில் தமிழிற் கூறப்படும் பிரபந்தங்களினிலக்கணங்களும், பாடுவோனுக்கும் பாடப் படுவோனுக்குமுள்ள எழுத்துப் பொருத்தம் மங்கலப் பொருத்தம் முதலியனவும், நச்செழுத்து அமுதவெழுத் தென்ற பாகுபாடுகளும், ஆனந்தம் முதலிய குற்றங் களும், இன்னோரன்ன பிறவும் விரித்துக் கூறப்பட்டிருக் கின்றன.

வீரசோழியம்:— இது புத்தமித்திரரா லியற்றப்பட்டது. ஐந்திலக்கணங்களையும் சுருங்கக் கூறுகிறது.

தண்டியலங்காரம்— இது அணிநூல். சங்ககாலத்தில் தொல்காப்பியர் கூறியது உவமை ஒன்றுதான். அவர் அகத்திணையியலில் ஏனையுவமம் உள்ளுறையுவமமிவை களை விளக்கி, உவமவியலில் உவமத்தைத் தொழில், பயன், வடிவு, வண்ணம் எனப் பிரித்து விரித்தெழுதி யுள்ளார். அதற்குப்பின் வடநூல் வாணரோடு ஊடாடி ஐந்தாவது இலக்கணமாகிய அணியிலக்கணத்தைத் தமிழ்ப்புலவர்கள் விருத்தி செய்வாராயினர். அப்போது

'அணிநூல்', 'தண்டியலங்காரம்' முதலிய நூல்கள் இயற்றப்பட்டன. தண்டி யென்பவர் இயற்றிய அலங்கார நூலாதல்பற்றித் தண்டியலங்காரமெனப் பெயர்பெற்றது. இவர் தம் நூலில் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என்று மூன்று பிரிவினை அமைத்தார். பொருளணியியலில் பொதுவாகப் பலவகை நலப்பாடு களும் புனைவுமுறைகளுங் கூறப்பட்டுள்ளன. பொருளணி யியலில் தன்மையணி முதலாக முப்பத்தைந்து அணிகள் கூறப்பட்டுள்ளன. சொல்லணியியலில் சித்திரகவிகள், மடக்கு, யமகம், திரிபு, அந்தாதி, சிலேடை முதலியன கூறப்பட்டுள்ளன.

மேலே சோழராட்சியிலுண்டான இலக்கிய இலக்கண நூல்களைப்பற்றிப் பார்த்தோம். இனி அந்நூல்களிலுள்ள சிறப்பியல்களைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வோம்.

7. சோழர்கால இலக்கியங்களின் சிறப்பியல்பு

பிற்காலத்துச் சோழர் காலத்திற்ருேன்றிய இலக்கியங்களிற் பெரும்பாலன வடமொழியிலுள்ள வேதங்களேயும், சாஸ்திரங்களேயும், புராணங்களேயும், இதிகாசங்களேயும், இலக்கணங்களேயும் பின்பற்றியன. அவற்றின் கருத்துக்களேயும், கதைகளேயும் வேண்டிய அளவு உள்ளடக்கிக் கொண்டனவாகவே இருந்தன. அந்நூல்களே இயற்றிய புலவர்களும் இருமொழியிலும் வல்லவராய் வடமொழி நூல்களே நன்ருகக் கற்று ஆராய்ந்து, பின் தங்கள் நாட்டிற்கும் தமிழுக்கும் பொருத்தமான கருத்துக்களேத் தாங்களாகக் கற்பனேகளோடு அமைத்தும் மனுேதர்மங்களுக்கு எட்டியவாறு செய்யுளே அழகு படுத்தியும் வந்தார்கள். இயற்கை யுலகிற்கொப்ப, மக்கள் வழங்கும் மொழிகளும் தோற்றம், வளர்ச்சி, அழிவு முதலியன எய்துவ தியல்பே. எனவே மொழியானது கால இயக்கத்திற்குத் தக்கபடி நாகரிக நிலேக்குரிய புதிய கருத்

துக்களை மேற்கொள்ளு மென்பது திண்ணம். புதிய கருத்துக்கள் மேற்கொள்ளப்பட்டால் அவற்றைத் தக்கவாறு குறிக்கவல்ல சொற்களுஞ் சொற்றொடர்களும் மொழியின் கண் ஏற்படுதல் இயல்பே.

அகத்தே தோன்றும் கருத்தின் வேறுபாடு வெளிச் சொல்லிற் பிரதிபலிக்கும் ஆதலால் மனோபாவம் விரியுந் தோறும், புது விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுந்தோறும், கலைஞான வுண்மைகளும் சாஸ்திர ஞானங்களும் வெளிப்படுந்தோறும்; வேற்று நாடுகளினின்று புதிய பொருள்கள் உட்புகுந்தோறும் மொழி விரிந்து முதிர்ந்து சீர்திருந்துதல் வழக்கம்.

ஆகவே மொழிவளர்ச்சிக்கு அன்னிய மொழிகளிலிருந்து கருத்துக்களையோ இன்னும் அருமையான விஷயங்களையோ காலப்போக்குக்குத் தக்கபடி எடுத்தாள வேண்டியது அவசியமேயாகும். அவ்வாறே இடைக் காலத்துப் புலவர்களும் சோழர்காலத்துப் புலவர்களும் பலவழிகளிலும் தமிழ் மொழியை வளரச் செய்வாராயினர். இதுபற்றியே நமது மொழியில் வடசொற்கள் சங்ககாலத்திற் பார்க்கிலும் அதிகமாகப் புகத் தொடங்கின. தொல்காப்பியரும் 'கடிசொல் லில்லைக் காலத்துப் படினே' என்றார். பிற்காலத்து நன்னூல் செய்த பவணந்தி முனிவரும்

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே"

என்றார்.

எனவே பெருகிய அறிவும் விரிந்த நோக்கமும் உடையராய்ப் புலவர்கள் பெருமையடைந்து வந்ததும், மொழிவளர்ச்சிக்குரிய இயல்புகளனைத்தும் பொருந்தித் தமிழ் ஓங்கி வளர்ந்ததும் பிற்காலத்துச் சோழ அரசர்கள்

காலமெனலாம் மேலே இலக்கியங்களைக் குறித்துக் கூறி இருக்குமிடத்தில் இவைகள் விளக்கிக் காட்டப்பட்டன.

செய்யுளின் சிறப்பியல்புகள்

பண்டைக் காலத்துச் செய்யுட்களில் பேச்சு வழக்கொடு பொருந்திய வாக்கிய அமைதியும் செறிவும் சிறப்பியல்புகளாக உள்ளன. பிற்காலச் சோழர் காலத்து செய்யுட்களில், இவை போற்றப்படவில்லை. நெகிழ்ச்சிமிக்குச் சொல்லழகும், பொருள் நயமுஞ் சிறக்கச் செய்யுளியற்றினர். பற்பலவிதமான அணிகளையுங் கையாண்டனர். தற்குறிப்பு, உவமை முதலிய அணிகளை அடிக்கடி உபயோகப்படுத்தினர். இவ் வேறுபாடு இக்காலத்து நூல்களையும் ஒப்பிட்டு நோக்கின் புலனாகும். உதாரணமாக,

சிற்றி லற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுள னோவென வினவுதி யென்மகன்
யாண்டுள னாயினு மறியே னோரும்
புலிசேர்ந்து போகிய கல்லளை போல
வீன்ற வயிறோ விதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத் தானே

(புறம், 86)

இச் செய்யுள் சங்ககாலத்தது. அணி யாதுமில்லாது செறிவோடு பேச்சு வழக்கை யொட்டி இனிய நடையில் அமைந்திருக்கிறது.

பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழுஞ் சாயற்
களிக்கயல் பொருவ போன்று கடைசிவந் தகன்ற கண்ணா
ளொளிக்கவின் கொண்ட காமத் தாழுறு கனியை யொத்தா
ளளித்தயில் கின்ற வேந்த னஞ்சிறைப் பறவை யொத்தான்.

(சிந்தாமணி, நாமகளிலம்பகம், 192)

இச்செய்யுள் பிற்காலச் சோழர்காலத்தது.

இச் செய்யுளில் உவமையணி, நெகிழ்ச்சி முதலியன அடங்கியிருக்கின்றன. வாக்கியகதியும் பேச்சு வழக்கின் இயல்புக்கு வேருகவுள்ளது.

பாவினங்கள் பரவியது இக்காலத்தேதா னென்று மேலே குறிப்பிடப்பட்டது. அதாவது, வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் நாலுவிதப் பாக்களுள் ஒவ்வொன்றும் தாழிசை, துறை, விருத்தம் என்ற இனங்களைப் பெற்று வழங்கியது. விருத்தப்பாக்கள் இடைக் காலத்து இலக்கியப் பகுதியில் விரித்துரைக்கப்பட்டன. இங்கே தாழிசை, துறை இவைகளைப்பற்றிக் கூறுவோம்.

வெண்டாழிசை: மூன்றடியாகி இறுதியடி வெண்பாவே போன்று முச்சீர்கொண்டு சிந்தடியாய் முடியும் பாவாகும்.

வெண்டுறை: மூன்றடியான் முடிவது சுருங்கியதும், ஏழடியான் முடிவது நீண்டதுமாய், நான்கின்மேல்வரும் சீரிஞல் முன்னுள்ள அடி அகன்றும் இறுதியடி சில சீரிஞற் குறைந்தும் வரும்.

ஆசிரியத்தாழிசை: அடிகளாலொத்து ஒரு பொருண் மேற் கோவையாய் மூன்றடுத்து வருவது.

ஆசிரியத்துறை: நான்கடியாய்க் கடையயலடி சீர் குறைந்தும் இடைமடக்காயும், நான்கடியாய் இடையிடையே அடி சுருங்கியும் இடைமடக்காயும் வருவது.

கலித்தாழிசை: அடிவரையறையின்றி அளவிஞல் ஒத்தும் ஒவ்வாதும் வந்து ஈற்றடிமாத்திரம் நீண்டிசைக்கும்.

கலித்துறை: நெடிலடி நான்காய் நிகழுஞ் செய்யுள் கலித்துறை எனப்படும். இக் கலித்துறைகள், சீர்நிலை வகையானும் தளைநிலை வகையானும் இன்னும் பல பேதமாய் விரியும். அவற்றுள் கட்டளைக்கலித்துறை ஒன்று.

கட்டளைக்கலித்துறையாவது ஐந்தாம் சீர்மாத்திரம் கூவிளங்காயாயாவது கருவிளங்காயாயாவது நிற்றலிலும் வெண்டளை யியைந்து நிற்றலிலும் தவருது, நெடிலடி நான்காய்வந்து ஏகாரத்தான் முடிவது.

வஞ்சித்தாழிசை: குறளடி நான்குடையனவாய்க் கோவைப்பட்டு வருகின்ற செய்யுள் வஞ்சித்தாழிசை யாகும்.

வஞ்சித்துறை: குறளடி நான்கினையும் நீக்காது கொண்டு தனியே வந்து முடியுமாயின் அது வஞ்சித் துறையாகும்.

பரணி, கலம்பகம், பிள்ளைத்தமிழ், உலா முதலிய பிரபந்தங்கள் தோன்றியதும் இக்காலத்தே தான்.

பரணி— இது போர்க்களத்து ஆயிரம் யானையைக் கொன்ற ஒரு வீரனைத் தலைமகனுகக் கொண்டு கடவுள் வாழ்த்து, கடை திறப்பு முதலிய உறுப்புக்களை அமைத்து, பாட்டுடைத்தலைவனது பலவகைச் சிறப்புக் களையும் பலமுகமாகப் புறப்பொருளமைதி தோன்ற ஆங்காங்கு விளக்கிக் கலித்தாழிசையாற் பாடப்படுவது. சோழர் காலத்திலுள்ள கலிங்கத்துப்பரணியைப் பார்ப் போமாயின் மேலே கூறிய இலக்கணங்கள் நன்கமைந்து விளங்குகின்றன. கலிங்கத்துப் பரணியென்னும் நூலிலுள்ள சில பாடல்களைப் பார்ப்போம்.

முருகிற் சிவந்த கழுநீரு
முதிரா விளைஞ ராருயிருந்
திருகிச் செருகுங் குழன்மடவீர்
செம்பொற் கபாடந் திறமினே (30)

இது கடைதிறப்பு.

மென்கலாமமட மாதர்சீறடி
மிசைச்சிலம்பொலி விளைப்பதோ
ரின்கலாம்விளைவ தன்றியெங்குமோ
ரிகற்கலாம்விளைவ தில்லையே. (262)

இது அவதாரம்.

கலம்பகம்— ஒருபோகும் வெண்பாவுங் கலித்துறையும் முதற்கவி யுறுப்பாக முதலிற் கூறிப் புயவகுப்பு, மதங்கு, அம்மானை, காலம், சம்பிரதம், கார், தவம், குறம், மறம், பாண், களி, சித்து, இரங்கல், கைக்கிளை, தூது, வண்டு, தழை, ஊசல் என்னும் பதினெட்டு உறுப்புக்களும், காலத்தால் மருவிய பிச்சியார், கொற்றியார், வலைச்சியார் முதலியனவும் இயையுமாறு மடக்கு, மருட்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கலித்தாழிசை, வஞ்சி விருத்தம் வஞ்சித்துறை, வெண்டுறை, என்னும் இவற்றால் இடையிடையே வெண்பாவுங் கலித்துறையும் விரவிவர அந்தாதித்தொடையால் முற்றுற இறுதியும் முதலும் மண்டலித்துப் பாடுங்கால் தேவருக்கு நூறும், அந்தணருக்குத் தொண்ணூற்றைந்தும், அரசருக்குத் தொண்ணூறும், அமைச்சருக்கு எழுபதும், வணிகருக்கு ஐம்பதும், வேளாளருக்கு முப்பதுமாகப் பாடுவது.

உலா:- இதன் இலக்கணம் பின்வருஞ் சூத்திரத்தால் உணரலாம்.

பேதை முதலா வெழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியா னொருவனைக்
காதல்செய் தலின்வருங் கலிவெண் பாட்டே,
முதனிலை பின்னெழு நிலையுலா வெண்கலி
குடிநெறி மரபு கொளல்கொடை விடியல்
நன்னீ ராடல் நல்லணி யணிதல்

தொன்னக ரெதிர்கொளல் நன்னெடு வீதியில்
மதகளி றூர்தல் முதனிலை யாகும்.
ஏழு நிலையு மியம்புங் காலைப்
பேதை பெதும்பை மங்கை மடந்தை
அரிவை தெரிவை பேரிளம் பெண்ணெனப்
பாற்படு மகளிர் பருவத் தாதல்
நோக்கி யுரைப்பது நுண்ணியோர் கடனே.

சோழ அரசர்காலத்து மூவருலா முதலிய உலாக்கள் செய்யப்பட்டன.

சீர்தந்த தாமரையாள் கேள்வன் றிருவுருவக்
கார்தந்த வுந்திக் கமலத்துப்—பார்தந்த
வாதிக் கடவுட் டிசைமுகனு மாங்கவன்தன்
காதற் குலமைந்தன் காசிபனு—மேதக்க
மையறு காட்சி மரீஇய மண்டிலஞ்
செய்ய தனியாழித் தேரோனு—மையல்கூர்...

இச் செய்யுள் மூவருலாவில் விக்கிரம சோழனைப் பற்றிப் பாடியதில் ஒரு பகுதி.

பிள்ளைத்தமிழ்:- அதாவது பெருஞ்சிறப்பு வாய்ந்த மக வொன்றினை அதன் குழவிப்பருவ நிலைக்கேற்பக் கொண்டு பாராட்டிச் செந்தமிழ்ப் பாக்களாற் புனைந்து பாடும் பிரபந்த வகையாகும். இவ்வாறு பாடும் முறை தமிழ்மொழிக்குரிய புறத்திணையுள் பாடாண் பகுதியைச் சார்ந்ததாம். முற்காலத்தே புறத்திணைத் துறைகளிற் பலவும் தனிச்செய்யுளிற் பாடப்பட்டு வந்தன என்பது சங்ககாலத்து நூல்களால் நன்கறிந்தது. உதாரணமாக, பத்துப்பாட்டிற்கண்ட ஆற்றுப்படைகளும் களவழி முதலி யனவுமாம். பிற்காலத்தமைத்த பிரபந்தங்களுட் பல புறத்துறை பற்றியனவேயாம். அம்முறையே குழவி மருங்கினமைந்த காமப்பகுதி பற்றிய புறத்துறையும்

தனிப்பிரபந்தமாகப் பாடப்பெறும் வழக்குற்றது. அதன் வகையே பிள்ளைத்தமிழ் என்பது. இது பிள்ளைப்பாட்டு, பிள்ளைக்கவி என்றும் வழங்கும். இதில் வகுத்துக் கூறப் படும் பருவங்கள் பத்தாம். ஆண்மகவாயின்

சாற்றரிய் காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றிய முத்தமே வாரானே—போற்றரிய
அம்புலியே யாய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரோடும் பத்து

என்றும், பெண்மகவாயின் இறுதி மூன்றுக்கும் பிரதியாகக் கழங்கு, அம்மானை, ஊசல் சேர்வன வென்றும், பிறந்த மூன்றுந் திங்கள் முதல் ஏழாம் ஆண்டுவரை பிள்ளைக்கவி பாடப்பெறும் என்றும் விதிக்கப்பெற்றுள்ளது. பிள்ளைப் பருவங்கள் பத்தே இப்பிரபந்தங்களிற் கூறப்படுவன வாயினும், இவற்றுடன் தளர்நடை, அச்சோவச்சோ, புறம்புல்கல், அப்பூச்சி காட்டல், நீராட்டல், பூச்சூட்டல், காப்பிடல், அம்ம மூட்டல் முதலியவற்றையுஞ் சேர்த்துப் பெரியாழ்வார் பாடியருளுதல் அறியத்தகும்.

சோழராட்சியில் இரண்டாம் குலோத்துங்கனைப்பற்றி ஒட்டக்கூத்தர் 'குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ்' என்னும் நூல் செய்துள்ளார். அதிற் காணும் பாடலுள் ஒன்று வருமாறு:

கல்விக்கும் வஞ்சியர் மரந்தைக்கு நாயக
னுறந்தைப் பிரான கிலமுங்
கண்ணுர மேருவி லெடுக்கும் புலிக்கொடி
கலிக்கள்வ னைப்பொ ருதுபோர்
வெல்விக்கு மானதன் மகோதைக்கு மன்னன்முடி
கொண்டான் மகற்கு மகனென்
வெற்றிக் கவித்தநில மண்ணைக் கடக்கவிகல்
விண்ணைக் கடக்க விகலிக்

கொல்விக்கும் யானைகொடு சாளுக்கி வர்க்கமற
வேளுக் கிராம மிடறிக்
கொல்லாபுரம் பொருது கல்யாண மூதெயில்
பறித்தேழு கொங்க ணமுளுட்
செல்விக்கும் ராசாதி ராசன் திருப்பெயர
செங்கீரை யாடி யருளே
சேரா பெருங்கவிகை வீரோதை யாவாழி
செங்கீரை யாடி யருளே

இது குலோத்துங்க அரசன் செங்கீரையாடும் பருவத்தைபற்றிப் பாடிய செய்யுளாகும்.

எனவே பிற்காலத்துச் சோழவரசர் காலத்தில் பண்டைக்காலத்தைவிட இலங்கியங்களும் இலக்கணங்களும் மிக்கு நிரம்பின. தமிழிலக்கியம் என்னும் பெருமரம் செழிப்புற்று வளர்ந்தோங்கித் திண்ணிய கவடுகள் பல திசைதொறும் போக்கிப் பசேலெனத் தழைத்துத் தண்ணிழல் பரப்பி வானளாவி நின்று தனது பூரண ஆகிருதியை யடைந்தது. சோழவரசர்களும் பற்றுடன் தமிழன்னைக்குத் தொண்டுபுரிந்தும் புரிவித்தும் வந்தன ரென்பது அவர் காலத்துச் கல் வெட்டுக்களால் வெள்ளிடைமலையென விளங்குகின்றது.

8. முடிவுரை

இதுகாறும் ஏழு அதிகாரங்களால் பிற்காலச் சோழ அரசர் காலத்து இலக்கியங்களை ஒருவாறு கூறினேன்.

முடிவுரையாக ஒரு சில கூறவேண்டுவதுண்டு. தமிழ் மொழியானது வளர்ந்துகொண்டே செல்லும் மொழியாம். அதனுடைய சரித்திரத்தை நாம் ஆராய்வோமானால் அதனுடைய மொழித் தொகுதிகளிலே பிறமொழிச் சொற்கள் பல கலந்து பெருகிக்கொண்டே வந்திருக்கின்றன. இதனால் அதனுடைய சொல்வளம் நாளடைவில் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது. இதற்குரிய காரணங்களை நாம் இங்கே விவரிக்க வேண்டிய அவசியமில்லை. இந்தச் சொல்வளமானது சோழவரசர்களுடைய காலத்திலே முன்பின் இல்லாத ஒரு பெருக்கத்தை யடைந்து தமிழ்மொழி வீறுபெற்று விளங்கியதெனக் கூறலாம். இக்காலத்தேதான் பெரும்புலவர்கள் தமிழ் நாட்டிற் றோன்றியது. அப்பொழுதுதான் இலக்கணங்கள் நிரம்ப

எழுதப் பெற்று மொழியினுடைய சிறப்பியல்கள் நன்ருக விளக்கப்பட்டன. சமயமானது உன்னத நிலையை யடைந்து தத்துவ சாஸ்திர விசாரணைகள் தமிழ்நாட்டில் பெருகத்தொடங்கின.

இத்துணை யளவாகத் தமிழ்மொழியும் தமிழ் இலக்கியங்களும் பெருமை யெய்துதற்குத் தக்கபடி தமிழ் நாட்டிலே தக்க வ்சதி வாய்ந்திருக்கவேண்டும். பிற்காலத்துச் சோழராட்சியில் அவ்வகையான வசதிகள் புலவர்களுக்கும் அறிஞர்களுக்கும் வாய்ப்பதற்கிடமிருந்தது. சோழவரசர் கல்வியைப் போற்றி வந்தார்கள். கோயில்கள் முதலியவற்றில் கல்வி பயிலவேண்டும் வசதிகளும் கட்டுப்பாடுகளும் செய்துவந்தார்கள். தங்களுடைய அரசவையில் புலவர்களை ஆதரித்துத் தக்கபடி கௌரவித்து வந்தார்கள். உதாரணமாக, ஒட்டக்கூத்தரைப்பற்றிக் குலோத்துங்கவரசன் பாடியதாகச் சொல்லுஞ் செய்யுளைக் காண்க:

ஆடுங் கடைமணி நாவசை யாம லகிலமெல்லாம்
நீடுங் குடையிற் றரித்தபி ரானென்றும் [நித்தநவம்
பாடுங் கவிப்பெரு மாணொட்டக் கூத்தன் [பதாம்புயத்தைச்
சூடுங் குலோத்துங்க சோழனென் றேயென்னைச் [சொல்லுவரே.

இவ்வாறே பெரியபுராணஞ் செய்த சேக்கிழாரை அரசன் சிறப்பித்த முறையைப் பின்வருஞ் செய்யுள் விளக்குகின்றது.

செறிமதயானைச்சிரத்தில் பொற்கலத்தோ டெடுத்துத்
திருமுறையை இருத்தியபின் சேவையர்காவலரை

முறைமைபெற ஏற்றி அரசனுங்கூட ஏறி
முறைமையினால் இணைக்கவரி துணைக்கரத்தால்
[வீச
மறைமுழங்க விண்ணவர்கள் கற்பகப்பூ மாரி
மழைபொழியத் திருவீதி வலமாக வரும்போது
இறைவர்திரு வருளினினைந் தடலரசர் கோமான்
இதுவன்றோ நான்செய்த தவப்பயனென்
[றிசைத்தான்.

இங்ஙனமே கம்பருக்குச் சோழனும் அவன் தேவியும் பல்லக்கெடுத்த செய்தி தமிழ் நாவலர் சரிதையிற் கூறியிருக்கிறது.

உமையவளு நீயு மொருங்கொப்பை யொப்பை
உமையவளுக் குண்டங்கோரூனம்—உமையவடன்
பாகந்தோய்ந் தாண்டான் பலிக்குழன்றான்
[பாண்டியனின்
பாகந்தோய்ந் தாண்டான் பதி.

இங்ஙனமாகக் கற்றோர்களையுந் தமிழ்ப்புலவர்களையும் ஆதரவோடு போற்றி வந்த தமிழரசர்கள் காலத்துத் தமிழ் மேலோங்கி விளங்கியதெனக் கூறுவது மிகையாகும்.

கால இயல்புக்குத் தக்கபடி மொழியினியல்பும் இலக்கியங்களி னியல்பும் மாறுபடு மென்பது அறிஞர்களுடைய கொள்கை. பிற்காலத்துச் சோழர் காலத்திலேதான் தமிழ் மன்னர்களுடைய பெருமை பல வகையானும் மிக்கு ஓங்கி விளங்கியது. இதற்குத் தக்கபடி அக்காலத்துப் பிறந்த இலக்கண இலக்கிய நூல்களும் தலைசிறந்து பெருமையுடன் விளங்குகின்றன.

ஆகவே பிற்காலச் சோழர் காலத்துப் பிறந்த தமிழ் இலக்கியங்கள் நம்மால் பெரிதும் போற்றத்தக்கனவா யுள்ளன. அவை நமது மொழியை வளர்ப்பதற்கும் சீர்திருத்துவதற்கும் ஒரு முன்மாதிரியாகவுமிருக்கின்றன. அவற்றில் நிரம்பிக் காணப்படும்காவியச்சுவை கற்பார்க்கு இடையருது இன்பம் பயக்கவல்லதா யுள்ளது. தமிழ்த் தாய் ஒளியுடன் எங்கு முலாவிப்புகழ்பெற்று விளங்கினள்.

பிற்காலச் சோழர் காலத்து இலக்கியங்களை நுட்பமாக ஆராய்வதனுல் நாம் பெரும்பயன் அடைவோ மென்பது திண்ணம்.

முற்றும்